Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 16+8

விலை ரூ. 60

சுடர் : 38
கதிர் : 344

ஞாயிற்றுக்கிழமை 05 நவம்பர் 2023

ஐப்பசி 19 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054



## வடமாகாணத்தில் நேற்று 401 அதிபர்கள் நியமனம்

யாழ்ப்பாணம், நவ. 5
வடமாகாணப் பாடசாலைகளின் நிலவும் அதிபர் வெற்றிடங்களை நிரப்பும் வகையில் அதிபர் தரத்துக்கு நடத்தப்பட்ட ஆட்சேர்ப்புக் »15

# மன்னார் கடற்பரப்பில் சீனத்தூதுவர் ஆய்வு!!

## வடக்குப் பயணத்தின்போது திடீர் ஏற்பாடு

**யாழ்ப்பாணம், நவம்பர் 5**

வடக்கு மாகாணத்துக்கு நாளை வருகை தரும் இலங்கைக்கான சீனத் தூதுவர் தலைமையிலான குழுவினர் மன்னார் கடற்பரப்புக் கடற்படையினரின் விசேட படகில் செல்லவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் கடற்பரப்பிலுள்ள 5ஆம் மற்றும் 6ஆம் திட்டிப் பகுதிகளுக்கே சீனத் தூதுவர் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்று கூறப்படுகின்றது. »15

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணிற்கு...
முற்பணம்
125,000/=
வட்டிவீதம் மேலும் குறைக்கப்பட்டுள்ளது.
அதிகபட்ச இரகசியத்தன்மை
சிநேகபூர்வமான உடனடி சேவை
சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
011 200 88 88
செலான் தங்கக்கடன்
செலான் வங்கி

## ஆலோசனைகளை மீறுகின்ற அதிகாரிகளுக்கு ஆப்பு!

கொழும்பு, நவ. 5
நாட்டின் அபிவிருத்திக்காக வழங்கப்படும் ஆலோசனைகளை உரிய வகையில் நடைமுறைப்படுத்தத் தவறும் அரச நிறுவன பிரதானிகளுக்கு எதிராக எதிர்வரும் நாள்களில் உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென ஜனாதிபதி »15

முல்லைத்தீவில்

## மின்னல் தாக்கி மூவர் காயம்

முல்லைத்தீவு, நவ. 5
உடையார்கட்டில் நேற்று ஏற்பட்ட கடும் மின்னல் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் படு »15




அஸ்வெசும கொடுப்பனவு:

## நூதன மோசடி; மக்களே உஷார்!

முல்லைத்தீவு, நவ. 5
முல்லைத்தீவு மாவட்டத்தில் விசுவமடு கிழக்குப் பகுதியில் இனந்தெரியாத இருவர் சிலரது வீடுகளுக்கு நேற்றுச் சென்று நூதனமான வகையில் மக்களை ஏமாற்றி பணத்தோடு தலைமறைவாகியுள்ளனர்.
குறித்த பகுதியிலுள்ள பொருளாதாரம் நலிந்த சிலரின் வீடுகளுக்குச் சென்ற இந்த இரு மோசடிக்காரர்களும் 'உங்களுக்கான »15

## உணவுப் பொருள்கள் விலை அதிகரிப்பு

கொழும்பு, நவ. 5
உணவு வகைகளின் விலைகள் நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.
இந்தத் தகவலை அகில இலங்கை உணவக மற்றும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.
நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் »15

## டிசெம்பர் 22 இல் தவணை விடுமுறை

கொழும்பு, நவ. 5
2023 ஆம் ஆண்டுக்கான மூன்றாம் தவணை பாடசாலை விடுமுறை டிசெம்பர் மாதம் 22ஆம் திகதி முதல் 2024ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி வரை »15

## சஞ்சீவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தையிட்டி விகாரைக்கு எதிர்ப்பு

# மீண்டும் போராட்டம் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், நவ. 5

தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள விகாரைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் நேற்று சனிக்கிழமை மீண்டும் பேராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

தையிட்டி விகாரையில் இன்று மற்றும் நாளை விசேட நிகழ்வுகள் நடைபெறவுள்ள நிலையில் எதிர்ப்பு போராட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாதத்திலும் வரும் பௌர்ணமி தினத்தில் சிங்களவர்கள் வழிபாட்டுக்காக தையிட்டி விகாரைக்கு வந்து செல்லும் நிலையில் குறித்த சந்தர்ப்பத்தில் தமிழர்களது எதிர்ப்பை வெளிக்காட்டும் வகையில் தொடர்ந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றது.

இந்நிலையில், இன்று முதல் இரு நாள்கள் விசேட வழிபாட்டு நிகழ்வுகள் தையிட்டி விகாரையில் ஏற்பாடு செய்யப்பட்டதை அடுத்து தமிழ்த் தேசிய மக்கள் முண்ணியைச் சேர்ந்தவர்கள் எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். (அ-ஒ-100)

# ஓவியப் போட்டி பரிசு வழங்கல்

யாழ்., நவ. 5

சாவகச்சேரி தேவாலய வீதியிலுள்ள அமரர் ரீ.பீ.ஹன்ட் நினைவு ஓவியக்கூடத்தின் ஐந்தாவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்ட ஓவியப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஓவியக்கூடத்தின் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஓவியக்கூட நிறுவுநர் திருமதி யோகமணி அழகரத்தினம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் பங்கேற்கவுள்ளார். சிறப்பு விருந்தினராக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ், மதிப்புறு விருந்தினர்களாக சிவ பூமி நிலையத் தலைவர் ஆறு. திருமுருகன், அமெரிக்கன் சிலோன் தேவாலயத் தலைவர் அருட்பணி தேவகுணானந்தன் அடிகள் உட்படப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-9)



# ஆபத்தான ஆலமரம்; வெட்டி அகற்றுங்கள்

## தருமபுர மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, நவ. 5

கிளிநொச்சி, கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஏ-35 வீதியில் தருமபுரம் மருத்துவமனைக்கு அருகாமையில் உள்ள ஆலமரம் ஆபத்தான நிலையில் உள்ளதாகவும், அந்த மரம் எந்நேரமும் முறிந்து விழ வாய்ப்புள்ளதால் அதை வெட்டி அகற்றித் தருமாறும் அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ள னர்.

மரத்தின் சில கிளைகள் ஏற்கனவே முறிந்துள்ளமை யால், மிக விரைவாக இந்தப் பிரச்சினையை நிவர்த்தித்துத் தரவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-113)

### மன்னார்...

வடக்கு மாகாணத்துக்கு இலங்கைக்கான சீனத் தூதுவர் தலைமையிலான குழுவினர் வருகை தரவுள்ளனர். வடக்கின் 5 மாவட்டங்களிலும் தலா 500 பேருக்கு உதவிப் பொதிகளையும் வழங்கவுள்ளனர். சுமார் 6 ஆயிரம் ரூபா பெறுமதியான இந்தப் பொதிகள், பொருண்மியம் நலிந்த குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணத்துக்கு நாளை வரும் இந்தக் குழுவினர் மாலையில் நயினாதீவுக்குச் செல்லவுள்ளனர். அங்கு சீனாவிடம் வழங்கப்பட்டு இந்திய எதிர்ப்பால் மீளப் பெறப்பட்ட மின்உற்பத்தி திட்டப் பகுதியையும் சென்று இவர்கள் பார்வையிடவுள்ளனர் என்று தகவல்கள் கூறுகின்றன. அந்தப் பயணத்தை முடித்துக் கொண்டு மன்னாருக்குச் செல்லும் அவர்கள் எதிர்வரும் 8ஆம் திகதி மன்னார் கடல் திட்டுகளைப் பார்வையிடவுள்ளனர். அங்கு பெற்றோலிய வளம் இருப்பதாகக் கூறப்படும் நிலையிலேயே சீனத் தூதுவர் செல்லவுள்ளார்.

இதேவேளை 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் 16 ஆம் திகதியும் மன்னாரிலுள்ள கடல் திட்டுகளுக்கு சீனத் தூதுவர் சென்றிருந்ததுடன், 'இதுவே முடிவு. ஆனால் ஆரம்பமும் கூட' என்று உள்ளர்த்தம் பொதிந்த வார்த்தைகளைக் கூறியிருந்தார் என்பதும், இந்தியா அது தொடர்பில் பாதுகாப்புக் கரிசனைகளை எழுப்பியிருந்தமையும் நினைவுகூரத் தக்கது. (அ-ஒ-5)

### நூதன...

அஸ்வெசும கொடுப்பனவு கிடைக்கப் பெற்றுள்ளது. அதற்கான 80 ஆயிரம் ரூபா உங்கள் வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்படும். அதற்கு முற்பணமாக 30 ஆயிரம் ரூபாவை எங்களிடம் உடனடியாகச் செலுத்தவேண்டும். இவ்வாறு எம்மிடம் செலுத்தப்படும் தொகை உங்களது 80 ஆயிரம் ரூபாவோடு சேர்த்து ஒரு இலட்சத்து பத்தாயிரம் ரூபாவாகக் கிடைக்கும். சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகம். உடனடியாக கணக்கு முடிக்க வேண்டும் என்பதாலேயே, மக்களிடம் காசை அறவிட எங்களை அனுப்பியுள்ளனர்' என்று ஆசைவார்த்தை கூறியுள்ளனர்.

ஆனாலும் வீட்டு உரிமையாளர்கள், 'எங்களிடம் அவ்வளவு தொகைப் பணம் இல்லை' எனத் தெரிவித்துள்ளனர். உடனேயே 'பொறுங்கள். இதைப்பற்றி சமுர்த்தி உத்தியோகத்தரிடம் கதைத்து விட்டு சொல்கிறோம்' என தொலைபேசியில் உரையாடுவது போல் பாசாங்கு செய்துள்ளனர். பின்னர் 'உத்தியோகத்திரிடம் கதைத்துவிட்டேன். அவர் உங்களிடம் இருக்கின்ற பணத்தை பெற்றுவரச் சொன்னார். ஆனால் மிகுதிப் பணத்தை நாளை தந்தால் மாத்திரமே உங்களது 80 ஆயிரம் ரூபா பணத்தை முழுமையாகப் பெற முடியும்' என்று அவர்கள் கூற, அவர்கள் சொல்வதை நம்பிய சிலர் தம்மிடம் இருந்த பணத்தை (ஒவ்வொருவரும் தலா 5000 ரூபாவுக்கும் அதிக தொகையை மோசடிக்காரர்களிடம் கொடுத்துள்ளனர். பின்னர் அவர்கள் இது தொடர்பாக சமுர்த்தி உத்தியோகத்தரிடம் வினவியபோது, தாம் அவ்வாறு எந்தவொருவரையும் அனுப்பவில்லை என்றும், அவ்வாறு மக்களிடத்திலிருந்து பணத்தை வசூலிக்கவும் இல்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

எனவே இதுபோன்று 'அஸ்வெசும' உதவித்தொகை கிடைத்ததாக எவரேனும் மோசடி செய்யமுற்பட்டால் விழிப்போடு இருக்குமாறு சமுர்த்தி உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர். (அ-ஒ-19-113)

### வடமாகாணத்தில்...

கானபோட்டிப்பரீட்சையில்சித்தியடைந்த 401 புதிய அதிபர்களுக்கான நியமனக் கடிதங்கள் கோப்பாயிலுள்ள ஆசிரியர் பயிற்சி நிலையத்தில் வைத்து நேற்று வழங்கி வைக்கப்பட்டன.

வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் , கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் பங்கேற்றிருந்தார்.

வடமாகாணத்தில் தமிழ், முஸ்லிம், சிங்களப் பாடசாலைகளில் நிலவும் அதிபர் வெற்றிடங்களுக்கு இவர்கள் அதிபர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். நேற்று வழங்கப்பட்ட புதிய நியமனங்களுடன் வடமாகாண பாடசாலைகளின் நிலவும் அதிபர் வெற்றிடங்கள் யாவும் நிரப்பப்படும் என வடமாகாணக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (அ-ஒ-26-100)

### ஆலோசனைகளை...

ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார். மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் மாவட்டத்தின் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்படும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் பணிகளை, அரச அதிகாரிகள் துரிதப்படுத்தவேண்டியது அவசியமெனவும், நாட்டை பின்நோக்கிக் கொண்டுச் செல்லும் வேலைத்திட்டத்துக்கு ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

மாவட்ட அரசியல் குழுவினர் மற்றும் அரச அதிகாரிகள் இக்கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருந்ததோடு, மாவட்டத்தின் அபிவிருத்திக்காகத் தற்போது வரை முன்னெடுக்கப்பட்டிருக்கும் வேலைத் திட்டங்கள் மற்றும் எதிர்கால அபிவிருத்திக்கான திட்டங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டது. (அ-ஒ-44)

### மின்னல்...

காயமடைந்தநிலையில்புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சீரற்ற காலநிலை காரணமாக இலங்கையில் பல்வேறு பகுதிகளில் கடும் மழை பெய்து வருகிறது. முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் கடந்த சில தினங்களாக கடும் மழை பெய்துவருகிறது.

இந்நிலையில், முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்குட்பட்ட உடையார்கட்டு, குரவில் கிராமத்தில் பலத்த மின்னல் தாக்கம் ஏற்பட்டிருந்தது. இதன்போது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் மூவர் படுகாயம் அடைந்துள்ளனர்.

சகோதரர்களான இரு ஆண்களும் ஒரு பெண்ணும் இதன்போது படுகாயம் அடைந்த நிலையில் புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பருவமழை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் இடிமின்னல் தாக்கத்தில் இருந்து பாதுகாப்பாக நடந்து கொள்ளவேண்டும் என இடர் முகாமைத்துவப் பிரிவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-100-19)

### டிசெம்பர்...

வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள பாடசாலையொன்றில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே கல்வி அமைச்சர் இதனைக் கூறினார்.

அரசாங்கம் மற்றும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைகளின் மூன்றாம் தவணைக்கான இரண்டாம் கட்ட பாடசாலை விடுமுறை டிசெம்பர் 22 ஆம் திகதி வழங்கப்பட்டு மீண்டும் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என்றார் கல்வி அமைச்சர். (அ-ஒ-இ)

### உணவுப்...

தெரிவிக்கும்போது, சங்கத்தின் தலைவர் ஹர்ஷன ருக்ஷான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சீனியின் விலை அதிகரிப்பு காரணமாக பிளேன் ரீயின் விலை 5 ரூபாவாலும் பால் தேநீரின் விலை 10 ரூபாவாலும் அதிகரிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - அரிசி, மரக்கறிகள், கோழி இறைச்சி மற்றும் வெங்காயம் ஆகியவற்றின் விலை அதிகரிப்புக் காரணமாக உணவுப்பொதி ஒன்றின் விலை 20 ரூபாவாலும், கொத்து மற்றும் பிரைட் ரைஸ் என்பவற்றின் விலை 20 ரூபாவாலும் அதிகரிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சியில் 'ஏழிசை மாலை'

யாழ்ப்பாணம், நவ. 5

தென்மராட்சிக் கல்வி வலய இசையாசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்து வழங்கும் 'ஏழிசை மாலை' நிகழ்வு எதிர்வரும் வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தென்மராட்சி கலாசார மண்டபத்தில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த. கிருபாகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் இந்தியத் துணைத்தூதரக உயரதிகாரி சிறீ. மனோஜ்குமார், சிறப்பு விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி, உசன் இராமநாதன் மகா வித்தியாலய மாணவர்களின் இறைவணக்கமும் ஏழிசை மாலை கீதமிசைத்தலும் இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து தென்மராட்சிக் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி புனிதகுமாரி ஈழநேசன் யாழ். பல்கலைக்கழக சேர். பொன். இராமநாதன் அரங்கு மற்றும் கட்புலபீட நுண்கலைமாணி திருமதி சொரூபிணி பிரதீஷ் ஆகியோரின் இசைக் கச்சேரியும் இடம்பெறும்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்களின் குழுப்பாடல், தென்மராட்சிக் கல்வி வலய ஆசிரியர்களின் மூவிசை கானம் மற்றும் இராக சங்கமம், ஆசிரியர்கள், மாணவர்களின் பல்லியம் ஆகியனவும் நிகழ்வில் சிறப்புறவுள்ளன. (ச-159)

# சிவகுரு ஆதீனத்தில் 'தெய்வத்தின் குரல்'

யாழ்ப்பாணம், நவ. 5

யாழ்ப்பாணம் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகளால் 'தெய்வத்தின் குரல்' படிப்பும் பகிர்வும் பிரதி திங்கட்கிழமைகளில் காலை 5 மணியிலிருந்து 6 மணிவரை நடத்தப்படவுள்ளது.

அதன்படி நாளை திங்கட்கிழமை சிவகுரு ஆதீனத்தில் ஆரம்பமாகும் இந்த நிகழ்வில் அனைவரும் பங்கேற்று பயன்பெறலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடைக்கு ஆள் தேவை

யாழ். நகரிலுள்ள இரும்பு கடைக்கு ஆள் தேவை.
மின் வலு பொருட்கள், இரும்பு பொருட்கள்
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை
வழங்கப்படும்.

**29, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

**021 222 6234, 0777 805 950**

(CS 26828) A-1

## துயர் பகிர்கின்றோம்



**திருமதி கோகிலா சிவநாதன்**

**தோற்றம்** 23.06.1960 — **மறைவு** 01.11.2023

எமது நிறுவனத்தின் முன்னைநாள்
பணியாளர் **திரு.சி.உசங்கர்**
**(அவுஸ்திரேலியா)** அவர்களின்
அன்புத் தாயாரின் மறைவுச்செய்தி
அறிந்து ஆழ்ந்த துயருற்றுள்ளோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்

**ம.இராஜநாயகம் அன் கோ.**
**பட்டையக் கணக்காளர்கள்**
**உரிமையாளரும் பணியாளர்களும்.**

(CS 26836) A-1

## 33ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 03 . 04 . 1943

மறைவு 04 . 10 . 2023

அமரர்

**வல்லிபுரம் திருச்செல்வம்**

**(முன்னாள் உத்தியோகத்தர் கடற்றொழில் திணைக்களம், முன்னாள் உத்தியோகத்தர் சுன்னாகம் MPCS முன்னாள் ஆங்கில ஆசிரியர் யா/பரியோவான் கல்லூரி யாழ்ப்பாணம்)**

அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (05.11.2023) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் தாங்களும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"கணேச வாசம்"
இராமர் வளவு,
15, முத்துக்கிருஸ்ணர் வீதி,
சுன்னாகம்.

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



**திருமதி பாலசிங்கம் புவனேஸ்வரி**

கொழும்புத்துறையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலசிங்கம் புவனேஸ்வரி நேற்று (04.11.2023) சனிக்கிழமை பகல் 02.00 மணிக்கு இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் செல்லத்துரை பாலசிங்கம் அவர்களின் மனைவியும், சந்திரகுமார், ஸ்ரீஸ்கந்தராஜா, காலஞ்சென்ற தேவமனோகரி ஆகியோரின் அன்புத் தாயாரும், பத்மராணி, பாக்கியராணி ஆகியோரின் அன்பு மாமியாரும், கோபிராஜ், கோபிகா, ஸ்ரீதருமினி, ஸ்ரீதர்ஷனி, ஸ்ரீதயாகரன், பிரதீஸ்வரன், சுபாஸ்கர் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சந்தோஸ், ஷந்தியா, யூக்சன், தனுசன், கேனிசா, யுகன், புகலினி, கனியன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.11.2023) ஞாயிற்றுக்கிழமை பி.ப 01.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 26842) A-1

## உடனடி வேலைவாய்ப்பு

யாழ். நகரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய கம்பனிக்கு முகாமையாளர், அலுவலக உத்தியோகத்தர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள் உடன் தேவை

**076 1124 145**

## வேலையாட்கள் தேவை

பளையில் தென்னந்தோட்டம் ஒன்றில் குடும்பமாக தங்கிநின்று வேலைசெய்வதற்கு வேலையாட்கள் தேவை.

**077 6510 696, 071 9025 745**

## தசாக கிருஹயக்ஞ அழைப்பு



சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 10ம் நாள் (27.10..2023)
வெள்ளிக்கிழமை வளர்பிறை சதுர்த்தசி திதியில்
இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் சிவஸ்ரீ இராமநாதக்குருக்கள்**
**ஸ்ரீஸ்கந்தராஜக்குருக்கள்**

**(இணுவில் கந்தசுாவமி ஆலய பரம்பரை பிரதம குருக்கள்)**

அவர்களின்
ஆத்மசாந்தி கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

05.11.2023 - ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் தசாகம்
06.11.2023 - திங்கட்கிழமை மு.ப. 10.00 மணியளவில் ஏகோதிட்டம், மாசிகம்
07.11.2023 - செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணியளவில் சபிண்டீகரணம்
08.11.2023 - புதன்கிழமை காலை 8.00 மணியளவில் கிருஹயக்ஞம், சமாராதனை

08.11.2023 புதன்கிழமை பகல் 11.00 மணிக்கு இணுவில் அறிவாலய மண்டபத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், மதிய போசன நிகழ்வும் நடைபெறும்.

மேற்படி கிரியைகளில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**கந்தசுவாமி கோவிலடி, இணுவில்.** **குடும்பத்தினர்.**

**தொ.பே:077 4438 117**

(CS 26830) A-1

## தேவை

மில் உபகரணங்கள், சனல் பால் ஆடு, தேங்காய், தானியங்கள்.

**077 77 222 15**

## பணிப்பெண் தேவை

யாழ். திருநெல்வேலிப் பகுதியில் வீட்டு வேலைகள் செய்வதற்கு பணிப்பெண் தேவை.

**077 2162 622**



தொல்புரம் மத்திய சமூக நிலையத்தில் நவராத்திரி தின நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றன. இதன்போது கலை நிகழ்வுகள் மற்றும் சண் நாடக குழுவின் நாடக ஆற்றுகை என்பன சிறப்புற்றன.

(சு-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்திரை இல்லாத நிறுக்கும் கருவிகள்

## வியாபாரிகள் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ. 5

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தின் அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவின் உத்தியோகத்தர்களால் சங்கானையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், முத்திரையற்று நிறுக்கும் கருவிகளைப் பயன்படுத்திய பல வியாபாரிகள் கண்டறியப்பட்டு அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுபோன்று இதர பகுதிகளிலும் திடீர் சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்படும் என்றும், முறையற்ற வகையில் அளக்கும் கருவிகளைப் பயன்படுத்துவோருக்கு எதிராகச் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் துறைசார் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ம-26)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமாகச் செயற்படும் நாள். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். சிலருக்கு அவ்வப்போது சிறுசிறு சலனங்கள் ஏற்பட்டு நீங்கும். மகிழ்ச்சி உண்டாகும்.

**இடபம்:** சங்கடங்கள் ஏற்படக்கூடும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். உங்கள் முயற்சிக்கு ஒத்துழைப்புத் தருவார். பணிச்சுமை அதிகரிப்பதால் சற்றுச் சோர்வு ஏற்படும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**மிதுனம்:** நிறைந்த நாளாக இருக்கும். மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவம் நடைபெறும். பிள்ளைகளின் உற்சாகம் உங்களையும் தொற்றிக்கொள்ளும். பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** செலவுகள் அதிகரிக்கும் நாள். தேவையான பணம் கையில் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். உறவுகளால் ஆதாயம் உண்டாகும். பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும்.காரியங்கள் அனுகூலமாகும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. நண்பர் செய்யும் உதவி மகிழ்ச்சி தரும். பேசும்போது பொறுமைவேண்டும்.

**கன்னி:** பலவகைகளிலும் அனுகூலமான நாள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுஎடுப்பதற்கு உகந்த நாள். ஆலோசனை அவசியம். எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும். பேசும்போது நிதானம் அவசியம்.

**துலாம்:** உறவினர்கள் வருகையால் திடீர்ச் செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்து விடுவீர்கள். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிர்ப்புகளைக் கடந்து வெற்றி பெறுவீர்கள். ஆரோக்கியம் மேம்படும்.

**விருச்சிகம்:** பதற்றம் தவிர்த்து எதிலும் நிதானமாகச் செயற்படவும். சிலருக்கு உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண் சச்சரவுகள் ஏற்படலாம். கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**தனுசு:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. அனுசரித்துச் செல்வது நல்லது. எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் மறையும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**மகரம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றி பெறும். தேவையான பணம் கிடைக்கும். ஆதாயம்கிடைக்கும். ஆதாயம் உண்டாகும். சகோதரர்கள் உதவிகரமாக இருப்பார்கள். குடும்பத்தில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்படும்.

**கும்பம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உடல்நலனில் கவனம் தேவை. எதிர்பாராத செலவுகளுடன் தேவையற்ற அலைச்சலும் ஏற்படும்.

**மீனம்:** புதிய முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். ஆதாயம் உண்டாகும். உடல் நலனில் கவனம் தேவை. சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். தடைகள் அகலும். தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும்.






## சைவத்திருமுறை விழா

யாழ்ப்பாணம், நவ. 5

ஆனைக்கோட்டை இந்துசமய விருத்திச்சங்க சைவத்திருமுறை விழாவும் சைவசமயச் செயற்பாட்டு பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில், ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலய இரட்ணசபாபதி திருமண மண்டபத்தில் ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ.வ.கணேசலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவசித்தாந்தத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி தி.செல்வமனோகரன், சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக இந்துசமய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி அகல்யா ஜனார்த்தனன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரைகளை ஆற்றவுள்ளனர். (ம-66)

## வாசிப்புமாத நிகழ்வு கச்சாயில் இன்று

கொடிகாமம், நவ. 5

சாவகச்சேரி பிரதேசசபையின் கச்சாய் பொதுநூலகத்தின் தேசிய வாசிப்பு மாத நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி பிரதேசசபைச் செயலாளர் க.சந்திரகுமார் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி விரிவுரையாளர் தி.சிவகஜன் பங்கேற்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப்பாடசாலை அதிபர் க.மகிந்தன், கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி பிரதி அதிபர் சி.ஹர்சன் கௌரவ விருந்தினராக கொடிகாமம் பொலிஸ் நிலைய சிரேஷ்ட அதிகாரி சுலா ரணசிங்க ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-ரி-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் · 07 · 10 · 1937



மறைவு · 03 · 11 · 2023

### கந்தசாமி தவமணிதேவி

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை (குளப்பிட்டி) வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி தவமணிதேவி அவர்கள் கடந்த (03.11.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இலகுப்பிள்ளை செல்லம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற கந்தசாமி அவர்களின் அன்பு மனைவியும், தவசெல்வம் (தவா), சிவரூபன் (லண்டன்), தவரூபன், சாந்தரூபி (சாந்தி), சந்திரவதனி (ஆனந்தி), ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற அருட்செல்வம், பஞ்சலிங்கம், காந்திமலர், வசந்தாதேவி ஆகியோரின் சகோதரியும், சரோஜினிதேவி (சதா), தனலட்சுமி (ராணி), பராசக்தி, பவளராஜா, விக்கினேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், அமரர் திலீபன், இவான்ஜெலன், சரண்யா, கஸ்தூரி, மாளவன் - அபிலோசனா, குகபரன், ரம்மியா, துளசி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், பேராரன் அவர்களின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.11.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**குளப்பிட்டி ஒழுங்கை,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 268181A-1)

## மரண அறிவித்தல்



### திருமதி
### கிறேஸ் நவரஞ்சிதமலர் சற்குணசிங்கம்

(கிறேஸ் ரீச்சர் / மலர் அக்கா),
(ஓய்வுபெற்ற ஆசிரியர் - கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி)

திருமதி கிறேஸ் நவரஞ்சிமதமலர் சற்குணசிங்கம் அவர்கள் கடந்த 03.11.2023 அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அவரது உடலம் **Barney Raymond** பொறளை மலர்ச் சாலையில் இன்று (05.11.2023) மு.ப. 10.30 மணிமுதல் மாலை 6.00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப் பட்டிருக்கும். அதன்பின் உடலம் யாழ்ப்பாணம் எடுத்துச் செல்லப்பட்டு செவ்வாய்க்கிழமை (07.11.2023) அன்று கோப்பாய் பரி.கன்னிமரியாள் ஆலய மண்டபத்தில் வைக்கப்பட்டு பிற்பகல் 2.45 மணிக்கு இறுதி ஆராதனை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**(தேவானந்தன், தேவரஞ்சன்)**

(CS 268191A-1)

## வெளிநாடு செல்வோருக்கு மலேரியாத் தடுப்பு மருந்து

*யாழ்ப்பாணம், நவ. 5*

மலேரியா காய்ச்சலின் பரவல் அதிகமாகவுள்ள இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளோர் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் மலேரியாத் தடுப்பு மருந்துகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை அறிவித்துள்ளது.

அதேவேளை குறித்த நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு திரும்புவோர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையை நாடி மலேரியாத் தொற்று குருதிப் பரிசோதனையை மேற்கொள்ளலாம்.

குருதிப் பரிசோதனை முடிவுகள் கிடைக்கப்பெறுவதற்கு முன்பாக காய்ச்சல் அறிகுறி தென்பட்டால் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களுக்குத் தெரியப்படுத்தவேண்டும். அத்துடன் பொதுமக்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக பின்பற்றுவது சிறந்தது என்றும் சாவகச்சேரி சுகாதாரப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (ச-159)

## மரண அறிவித்தல்



### செல்வி கனகேஸ்வரி செல்லத்துரை

**(Rtd.Branch Manager-RG Company)**

**நல்லூர்-மங்களகிரியை பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட** செல்வி கனகேஸ்வரி செல்லத்துரை (02.11.2023) வியாழக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற **உடையார்-செல்லத்துரை மீனாம்பாள் (திருநெல்வேலி - நல்லூர்)** தம்பதியின் பாசமிகு புதல்வியும், காலஞ்சென்ற **உடையார்- பொன்னம்பலம் விசாலாட்சி (திருநெல்வேலி)** மற்றும் **கந்தையா பிரம்மாத்ம முதலி நல்லம்மாள் (நல்லூர்)** தம்பதிகளின் பேர்த்தியும், நாகேஸ்வரி, பரமேஸ்வரி, அகிலேஸ்வரி, பாலசுப்பிரமணியம், விக்னேஸ்வரியின் அன்பு சகோதரியும், பிரான்சிஸ் சேவியர் மாணிக்கவாசகர், செல்வரட்ணம், ஜெயரட்ணம் சோதிமலர், சிவநேசன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஸ்ரீரஞ்சன், சந்திரமோகன், விஜிதபாமா ஆகியோரின் பாசமிகு சிறிய தாயாரும், சுதாஜினி, சுதாகரன்,திருபாகரன், சுதர்ஜினி, சுபாஜினி, ஆதவன், அரவிந்தன், ஆதினி, ஆதீசன், ஜனித், ஜதீஸ் ஆகியோரின் பாசமிகு பெரியதாயாரும், விஷ்ணுகாருணியின் பாசமிகு மாமியாரும், மனோஹறி, கௌரி, பாலபாஸ்கரன், பிரபானந், குசந்தினி, சுபாஜினி, குணபாலன், மகேந்திரன், சுபத்திரா, மதிமுகராஜா, தர்சிகா ஆகியோரின் அன்பு மாமியாரும், பதஞ்சலி, பவணந்தி,பிரம்மாத்மன், பிரம்மகீதை, பிரம்மாட்சரண், பிரவீணா, பிரதிக்ஷா, வித்தகி, நதர்சனா, சதானா, டிலேஷ், கஜிஷ், அகிஷ், சதுர்த்திகன், சதுர்த்தியாணி, மகிஷா, மகிஷ், மனிஷா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

**அன்னாரின் இறுதி கிரியைகள் இன்று (05.11.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் பத்து மணியளவில், சைவப் பாடசாலை வீதி,திருநெல்வேலியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.**

இவ் அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**செல்லத்துரை பாலசுப்பிரமணியம்(தம்பி)**
**(உரிமையாளர் - [illegible])**
**தொ.பே.இல-077 310 7601**

(CS 268840) A-1

## மரண அறிவித்தல்

பிறப்பு · 23 · 10 · 1928



இறப்பு · 23 · 10 · 2023

### கதிரித்தம்பி தெய்வானை

ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரித்தம்பி தெய்வானை கடந்த (23.10.2023) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரித்தம்பியின் அன்பு மனைவியும், நாகமணி அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், செல்லப்பா தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், வள்ளியம்மையின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கந்தையா, சின்னத்தம்பியின் மைத்துனியும், ராமச்சந்திரன் (பிரான்ஸ்), சந்திரமலர் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நீலாம்பாள், அன்டன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சந்திரின், ஹெரோமி, சஹானா ஆகியோரின் அன்பு பேர்த்தியும், சரோஜினிதேவி, மகேஸ்வரன், காலஞ்சென்ற யோகேஷ்வரன் மற்றும் சிவனேஸ்வரன், சாந்தினிதேவி, வசந்தாதேவி, ரசிதேவி ஆகியோரின் சிறிய தாயாரும், சிவராசா, ராணிவிமலா, பூபதிதேவி, மாலினி, துரை நாயகம், காலஞ்சென்ற ஏரம்பமூர்த்தி மற்றும் உதயகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் மற்றும் பேரப்பிள்ளைகளின் பேர்த்தியும், பூட்டப்பிள்ளைகளின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நாளை (06.11.2023) திங்கட்கிழமை இடம்பெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுகொள்ளப்படுகின்றீர்கள்.

\+ 33608509612 - **சந்திரின் (பேரப்பிள்ளை)**
\+ 33642840683 - **ராமச்சந்திரன் (பிரான்ஸ்) மகன்**
+44730755159 - **சந்திரமலர் (லண்டன்) மகள்**
0778212963 - **மகேஸ்வரன்**
0033769817737 - **தயாபரன்**

**தகவல்:**
**மகேஸ்வரன்**
**(ஏழாலை)**

(CS 268041) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பயணங்களின் மறுமுகம்!

சீனாவின் இலங்கைக்கான தூதுவர் கீ சென் ஹொங், யாழ்ப்பாணத்துக்கு நாளை பயணம் மேற்கொள்ளவுள்ளார். சீனாவின் நிதியுதவியிலும், நலத்திட்டங்களின் கீழும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் செயற்படுத்தப்பட்டிருக்கும் பல்வேறு செயற்றிட்டங்களை அவர் பார்வையிடுவதுடன், பல தரப்பினருடன் சந்திப்புகளையும் கலந்துரையாடல்களையும் மேற்கொள்ளவுள்ளார். ஒரு நாட்டில் தன் செயற்பாடுகளையும், இராஜதந்திர உறவுகளையும் நிலைப்படுத்தவும் பரவலாக்கவும்தான் தூதரகங்கள் அமைக்கப்படுகின்றன. ஆனால், சீனத்தூதுவரின் யாழ்ப்பாணத்துக்கான வருகையை அவ்வளவு சாதாரணமானதாகவும் பத்துடன் பதினொன்றாகக் கடந்துவிட்டுப்போகும் விடயமாகவும் எடுத்துக்கொள்ளமுடியாது. இலங்கை மட்டுமல்ல, அதன் வடபிராந்தியமும் வல்லாதிக்க நாடுகளின் பூகோளப் போட்டிக்குள்தான் சிக்கியுள்ளது என்பதையே சீனத்தூதுவர் சென் ஹொங்கின் யாழ்ப்பாணத்துக்கான வருகை கட்டியம் செய்கின்றது.

இந்தியாவின் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னர்தான் யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொண்டு பல தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார். இன்று இந்தியா மூன்றாம் பொருளாதாரச் சக்தியாகப் பயணிக்கத் தலைப்படுகின்றது என்றால் அதற்கு நிர்மலா சீதாராமனின் நிதியியல் கொள்கைகள்தான் பிரதான காரணம். பாரதிய ஜனதா அரசாங்கம் இந்தியாவில் தன் ஆதிக்கத்தை தவிர்க்க முடியாததாக வலுப்படுத்தி வைத்திருப்பதன் பின்னணியிலுள்ள பெரும்புள்ளியும் அவரே. இவ்வாறிருக்கையில் அவரின் யாழ்ப்பாணத்துக்கான பயணம் நிச்சயம் சீனத்தின் சிந்தனையைக் குடையவே செய்யும். ஆதலால், இதற்கான எதிர்வினையாகத்தான் சீனத்தூதுவரின் யாழ்ப்பாணத்துக்கான பயணம் அமைந்திருக்கின்றது என்று எண்ணுவதும் சிந்திப்பதும் யதார்த்தமானதே.

இந்தியாவின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில், சீனாவின் கப்பல் அண்மையில் தன் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டது. இதில் பீறிட்டு வெளிப்பட்ட இந்தியா – சீனா பிராந்திய வல்லரசு மோதல்நிலை இன்னமும் தணிந்தபாடில்லை. நீறுபூத்த நெருப்பாக இந்த விவகாரம் கனன்றுகொண்டிருக்கும் நிலையில் இலங்கை, சீனாவாலும் இந்தியாவாலும் மத்தளம்போல இருபக்கமும் அடிவாங்கத்தான் போகின்றது என்பதையே இந்திய அமைச்சரதும், சீனத்தூதுவரதும் சுற்றுப் பயணங்கள் எடுத்தியம்புகின்றன. அத்துடன், வடக்குக் கடற்பரப்பில் ஆதிக்கம் செலுத்துவதற்கு அண்மைக்காலமாக சீனா பெரும் முனைப்புகளை மேற்கொண்டு வருகின்றது. மீனவர்களுக்கான தாராள உதவிகள், கடலட்டைப் பண்ணைகள் என்று இந்தப் பட்டியல் நீள்கின்றது. சீனா எவ்வளவுக்கு எவ்வளவு வடக்குக் கடற்பரப்பில் ஆதிக்கம் செலுத்துகின்றதோ அவ்வளவுக்கு அவ்வளவு அது இந்தியாவின் பாதுகாப்பையும் இறைமையையும் சவாலுக்கு உட்படுத்தும். இவ்வாறானதொரு பின்னணியில், சீனாவின் இத்தகைய அதீத தலையீடுகள் உண்மையில் இந்தியாவைக் கோபம்கொள்ளவே வைக்கும்.


இலங்கை இறைமையுள்ள ஒருநாடு என்றபோதிலும், அந்த இறைமையை இன்னொரு நாட்டின் நலனைப் பாதிக்கவோ, வீழ்த்தவோ பயன்படுத்தக்கூடாது என்ற வகையில், 'அமைவிடத்தின் முக்கியத்துவம்' கருதி வடக்குக் கடற்பரப்பில் இருந்து சீனாவைத் தொலைவாக வைப்பதுதான் இலங்கைக்கு அழகும் பாதுகாப்பும்.

## வடமாகாண மரநடுகை மாதம் நவம்பர் 2023

"உலகம் நாளை துண்டுகளாக உடைந்து அழியப்போவதாக நான் அறிந்தாலும் இன்றும் ஒரு மரத்தை நடுவேன்."

- மார்ட்டின் லூதர் (ஜேர்மனிய கத்தோலிக்க மதகுரு)






# தமிழினத்தின் இருப்புக்கு பாடசாலைகளே அடித்தளம்!

## சிறீதரன் எம்.பி. சுட்டிக்காட்டு

**கிளிநொச்சி, நவ. 5**

**ஆளுமைமிகு அடுத்த தலைமுறையின் உருவாக்கத்துக்கு பாடசாலைகளே களம் அமைக்கவேண்டும். எமது இனம் இருப்பிழந்து போகின்றமையை அடுத்த தலைமுறைக்கு உணர்த்த கல்வித் தளத்திலும் அறிவுப் புலத்திலும் பாடசாலைகள் அடித்தளமிடவேண்டும் - இவ்வாறு கிளிநொச்சி சிவநகர் அ.த.க.பாடசாலையில் நடைபெற்ற தேசியமட்ட சாதனையாளர் மதிப்பளிப்பு நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சொந்த நாட்டில், எமது இருப்பைத் தக்கவைப்பதற்காக, எல்லாவகையிலும் போராட நாம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். தமிழர்கள் அடுத்த தலைமுறையினூடாக கல்வித் தளத்திலும் அறிவுப்புலத்திலும் தம்மைத்தாமே நிலைநிறுத்தத் தவறின் எமது இனம் இருப்பிழந்து போய்விடும். இந்த உண்மையை எமது பிள்ளைகளுக்கு உணர்த்தி - ஊட்டி ஆளுமைமிக்க அடுத்த தலைமுறையை உருவாக்கவேண்டிய சமூகக்கடமை பாடசாலைகளுக்கு உள்ளது.

பௌதீகவளப் பற்றாக்குறைகள் மிகுந்த நிலையிலும், திறமைக்கு எதுவும் தடையல்ல என்பதை உறுதி செய்பவர்களாக நாங்கள் திகழ்கின்றோம். எத்தனையோ இடர்களையும் தடைகளையும் தாண்டி, வசதிவாய்ப்புகள் நிறைந்த பல பாடசாலைகளால் நெருங்க முடியாதவாறு- மனோதிடத்தை வலுமையுடன் எமது பிள்ளைகள் தேசிய மட்டத்தில் வெற்றிவாகைகளைச் சூடிவருகின்றனர்.

இன்றைய காலகட்டத்தில அறிவால் மாத்திரம் நிலைத்திருப்பதைவிட, ஆளுமைப் பண்புகளால் நிறைந்தவர்களை சமூகம் வரவேற்கும். எனவே எம்மின இருப்பைத் தக்கவைக்க ஆளுமைமிகு அடுத்த தலைமுறையின் உருவாக்கத்துக்கு பாடசாலைகளே களம் அமைக்கவேண்டும் - என்றார். (ச- 113)

# பலஸ்தீனத்துக்கு ஆதரவாக வவுனியாவில் போராட்டம்!



பலஸ்தீனம் - காஸா மீது நடத்தப்படும் தாக்குதல்களை நிறுத்தவேண்டும் என்று வலியுறுத்தி வவுனியாவில் நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பால் இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. வவுனியா பழைய பஸ் நிலையம் முன்பாக நடத்தப்பட்ட இந்தப் போராட்டத்தில் பொதுமக்கள் பலர் ஆர்வத்துடன் கலந்துகொண்டு பலஸ்தீனத்துக்குத் தம் ஆதரவைத் தெரிவித்தனர். (எ-110)

**நாளை** 06.11.2023 திங்கட்கிழமை ஐப்பசி 20

சுபநேரம் : 12.05 - 01.35
ராகுகாலம் : 07.35 - 09.05

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு

கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள வீடு வாடகைக்கு விடப்படும். வேலை செய்பவர்கள், மாணவர்கள் குழுவாக தங்குவதற்கு குறுகிய கால அடிப்படையில் வழங்கப்படும்.

தொடர்பு:0759799161/0777699212

## மேசன் கூலியாள் தேவை

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில், கட்டுமான வேலைக்கு மேசன், கூலியாள் தேவை.

தொடர்புகளுக்கு:-

**077 6966 736**

## ஆட்கள் தேவை

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் இயங்கிவரும் எண்ணெை உற்பத்தி தொழிற்சாலையான Venkadeswara Agro Industry (PVT) Ltd யில் பின்வரும் பதவிகளுக்கு ஆட்கள் தேவை.

கணக்காளர் (பெண்)

ஆய்வக உதவியாளர் (பெண்)

ஆர்வம் உள்ளவர்கள் தங்கள் சுயவிபரக் கோவையை suganthon@gmail.com எனும் மின்னஞ்சலுக்கு சமர்ப்பிக்கவும்.

## தேவை

நிரந்தரமான வேலை

* Welder (வெல்டர்)
* Carpenter (தச்சு வேலையாள்)
* Vanish வேலையாள்
* சாரதிகள் (AD License Driver)
* உதவியாளர்கள்

**076 821 9414 - Jaffna.**

## காணி கட்டடம் வாடகைக்கு உண்டு

அச்சுவேலி வல்லைச்சந்தியில் இருந்து சங்கானை வீதியில் பிரதான வீதியோரமாக **விசாலமான காணியும் கட்டடமும்** வாடகைக்கு விடப்படும். CS 52712 (AK.1)

தொடர்பு : **077 958 3903**

யாழ். மத்திய கல்லூரி 99 (O/L) மற்றும் 2002 (A/L) ஆண்டுகாலப் பகுதியில் கல்வி பயின்ற பழைய மாணவர்களை ஒன்றிணைப்பதற்கான முயற்சி எனவே கீழ் காணும் பெயர்களை உடைய பழைய மாணவர்களை தொடர்பு கொண்டு எமது குழாமில் இணைந்து கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

1. லக்சீசன் - 0770183102
2. கிருபா - 0770222232
3. மதனரூபன் - 0777268945
4. மனோதீபன் - 0779361201
5. செந்தூரன் - 0779576 740

ஒருங்கிணைப்பாளர்கள். (CS 26827)A-1

## ஜப்பானில் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு

- விரைவான விசா செயல்முறை
- முறையான விசா வழிகாட்டுதல்.
- விசாவிற்கு பின்பு கல்லூரி கட்டணம் செலுத்த கூடிய வாய்ப்பு
- ஜப்பானிய மொழி வகுப்புகள் (ஆரம்ப நிலைக் கல்வி)

மாணவர்களுக்கு மட்டும்

**0755 156 6361 / +81 80 5930 5191**

CHEC COLOMBO HIGHER EDUCATION CONSULTANCY (PVT) LTD
40- 2/2, Galle Road, Colombo - 06, Sri Lanka.
E-Mail : info.chec@gmail.com | Web : www.checonline.com

## விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையிலுள்ள வீட்டுத் தளபாடங்கள் (மேசை, மரக்கதிரைகள், ஒற்றைக்கட்டில், சோபாகதிரை, Easy chair, Dressing Table), லுமாலா பெண்களுக்குரிய சைக்கிள், புல்வெட்டும் மிசின், Hot Water Heater, கோழியுடன் கூடிய கோழிக்கூடு, ஒரிஜினல் சனல் மறி ஆடு மற்றும் தகரக் கொட்டகை விற்பனைக்கு. CS 52724 (AK.1)

தொடர்பு : **076 830 7424**

## அலுவலக வேலை வாய்ப்பு

யாழ் நகரில் இயங்கிவரும் பொதிகள் சேவை நிறுவனம் ஒன்றிற்காக Billing & Packing Staff தேவை (ஆண்)

**தகைமைகள்**

1. G.C.E (A/L) சித்தி
2. நகர எல்லைக்குள் வசிப்பவராக இருக்கவேண்டும்
3. நீண்டகாலம் தொழில்புரியக் கூடியவராக இருக்கவேண்டும்
4. வயது 18 - 30 வரை

**076 690 8985** (cs 52741 (AK.1)



ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு

## கூறுவிலை கோரல்

**ஆலயத்தில் பின்வரும் வேலைகளுக்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன**

1. காரியாலய கூரைவேலை திருத்தம்
2. அலுவலக கட்டடங்கள் விஸ்தீரணம்
3. யாகசாலை கூரை அமைப்பு (55'x50')
4. யாகசாலை 33 குண்டங்கள் அமைப்பு
5. யாகசாலை அலங்காரம் (கமுகமரங்களால் அலங்காரம் உட்பட)
6. மூலஸ்தானம் மற்றும் மூன்று கோபுரங்கள் என்பவற்றுக்கான கும்பாபிஷேகதிற்கான ஏணிப்படி அமைத்தல்.

கூறுவிலை படிவத்தினை ஆலய நிர்வாகசபை காரியாலயத்தில் 1000/= வினைசெலுத்தி படிவத்தினை பெற்று பூரணப்படுத்தி 11.11.2023 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கும்படி "செயலாளர், ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு" எனும் முகவரிக்கு பதிவஞ்சல் மூலமாக அனுப்பிவைக்கப்பட வேண்டும் அல்லது கோயில் நிர்வாக அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கூறுவிலைப் பெட்டியினுள் இடப்படுத்தல் வேண்டும்.

ந.மோகனரூபன்
செயலாளர்,
அறங்காவலர் சபை,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு.
(N.1)

BI RECRUITMENT
LICENCE no : 3507

# ருமேனியாவில் வேலை வாய்ப்புகள்



AL/3507/0001/23

* கட்டுமானத் துறையில் வேலை வாய்ப்புகள் (மேசன், தச்சகர்கள், கம்பி பொருத்துபவர்கள், பிளம்பர்கள்)
* பைக் ரைடர் (Bike Riders)
* சுத்தம் செய்பவர்கள் (பெண்)
* சமையல் உதவியாளர்
* கட்டுமான தொழிலாளர்
* தொழிலாளர்கள் (பொது வேலைகள்)

- சம்பளம் 500 யூரோக்கள் மற்றும் அதற்கு மேல் வழங்கப்படும்
- இடம் - Bucharest - ருமேனியா
- ஐரோப்பிய வாழ்க்கை முறை
- உணவு மற்றும் தங்குமிட வசதி இலவசம்
- மருத்துவ வசதிகள் இலவசம்

**BI RECRUITMENT**
இல.250/3/06, 3ஆவது மாடி,
ஆர். ஏ. டி மெல் மாவத்தை, லிப்ட்டி ப்ளாஸா.
www.birecruits.com

தொடர்புகளுக்கு
0112 576 656
0117 794 150
0776 929 773



## இப்போது உங்கள் கனவு நனவாகட்டும்

உடனடியாக அழைக்கவும்

**0766 699 699**

- உயர் கல்விக்காக
- வீடு பழுதுபார்ப்பதற்காக
- வெளிநாட்டு பயணத்திற்கு
- வியாபாரம் தொடங்குவதற்கு மற்றும் அதன் வளர்ச்சி
- சொத்துக்களை வாங்குவதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

1991. இந்து. சதயம் . Development Officer, யாழ்ப்பாணம். மணமகன் பதிவு இல.9900. தரகர்கூலி இல்லை.
பதிவு கட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமண சேவை. கொழும்பு - 4.
அழையுங்கள் : 076 664 9401
(cr.40927) (N.1)

## மணமகள் தேவை

யாழிந்து வேளாளர் 1991,உத்தரட்டாதி Engineer, USA மணமகனுக்கு மணமகள் தேவை.
Tel : 0716168292 | 0777751380
No.14 3/1G,37th Lane,Colombo-06.
www.realmatrimony.com

## மணமகன் தேவை

யாழிந்து கௌரவகுலம் 1992,கார்த்திகை Engineer, Singapore மணமகளுக்கு மணமகள் தேவை.
Tel : 0777111786 | 0777751380
No.14 3/1G,37th Lane,Colombo-06.
www.realmatrimony.com

## மணமகன் தேவை

யாழிந்து கௌரவகுலம் 1997,அவிட்டம் Bank Officer,Canada மணமகளுக்கு மணமகள் தேவை.
Tel : 0777111786 | 0777751380
No.14 3/1G,37th Lane,Colombo-06.
www.realmatrimony.com

## பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை

யாழ்ப்பாணம் கைதடி, குருநகர்.
OIC - 1300/-
JSO - 1200/-
தொடர்பு : 075 363 2025

## அறை / வீடு வாடகைக்கு

தெகிவளை, கழுபோவில காலி வீதிக்கு அருகில் நாள் வாடகைக்கு அறை உண்டு. வெள்ளவத்தை. தெகிவளையில் இருப்பவர்கள் வீட்டுச்சாப்பாடு தேவையெனில் தொடர்பு கொள்ளவும்.
076 379 7504

## தென்னம்பிள்ளை விற்பனைக்கு

எம்மிடம் நல்லின தென்னம் நாற்றுக்கள் விற்பனைக்குண்டு.
தொடர்பு:077 659 2044

## தேவை

வேலைக்கு ஆட்கள் தேவை
தொடர்பு : 076 638 1670

## வீட்டின் ஒருபகுதி வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணம் பஸ்தியன் சந்திக்கு அண்மையில் வீட்டின் ஒரு பகுதி வாடகைக்கு உண்டு. மருத்துவ பீட மாணவிகள். தொழில்நுட்பக் கல்லூரி மாணவிகள் விரும்பத்தக்கது. குழுவாக மாணவிகள் இருப்பதற்கான வசதிகள் கொண்டது. தரகர்கள் தேவையில்லை
தொடர்புகளுக்கு: 077 44 35 414

## விற்பனைக்கு

நோயாளர்களின் பாவனைக்கு உகந்த வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட Walker. தலையணை உயர்த்தி. மடிக்கக் கூடிய திரைச்சீலை. இடியப்பம் பிழியும் இயந்திரம். 3 kg உழுந்து அரைக்கும் இயந்திரம் என்பன விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 077 044 6019

## பெண் வேலை ஆட்கள் தேவை

நல்லூரில் அமைந்துள்ள புடைவைக் கடைக்கு அனுபவமுள்ள பெண் வேலை ஆட்கள் தேவை.
077 741 9511

## மணமகள் தேவை

1988. இந்து. உத்தரம் . IT Supporter Specialist, டென்மார்க். மணமகன் பதிவு இல.9870. தரகர்கூலி இல்லை.
பதிவு கட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமண சேவை. கொழும்பு - 4.
அழையுங்கள் : 076 664 9401
(cr.40928) (N.1)

## மணமகன் தேவை

1995. இந்து. பூராடம் . Doctor, யாழ்ப்பாணம். மணமகள் பதிவு இல.9872. தரகர்கூலி இல்லை.
பதிவு கட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமண சேவை. கொழும்பு - 4.
அழையுங்கள் : 076 664 9401

## மணமகன் தேவை

யாழ். றோமன் கத்தோலிக்க கௌரவகுலம் 1986 இல் பிறந்த ரேவதி நட்சத்திரம், பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர் மணமகளுக்கு இந்து கௌரவ குலத்தில் படித்த உள்நாடு மற்றும் வெளிநாட்டு மணமகன் தேவை
077 885 4189

## The Royal College of Jaffna

ஆண்டு 6ல் இருந்து A/L வரை சிறு குழுக்களாக ஆங்கில இலக்கணம், வினா விடை. Spoken வகுப்புக்கள்
By விக்னேஸ்வரன் ஆச்சாரியார்
Kuberan Building, Chankanai, Town.
Tel: 077 675 1649
(cs.52723) (N.1)

## வீடு காணி விற்பனைக்கு

வெள்ளவத்தை காலி வீதிக்கு அருகாமையில் 3 Bedroom Apartments உடனடி விற்பனைக்கு. அத்துடன் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 2 Story Building விற்பனைக்கு உண்டு.
( வெளிநாடு செல்ல இருப்பதனால் உடனடியாக விற்பனைக்கு உள்ளன )
தரகர் வேண்டாம் TP : 077 5222 613

## HOUSE KEEPER தேவை

வெள்ளவத்தை Apartment வீடுதி ஒன்றிற்கு அனுபவமுள்ள அடுக்குமாடி பராமரிப்பாளர் மற்றும் இலக்ட்ரீசியன், பிளம்பர், பெயிண்டர், அனைத்து வேலைகளுக்கும் வேலை ஆட்கள் (ஆண்கள் ) தேவை
வயது 18 – 50
தொடர்புகளுக்கு +94 77 372 5589

## கடை, வீடு, காணி விற்பனைக்கு

நுணாவில் A9 வீதியை முகப்பாக IOC Petrol Station க்கு அருகாமையில் கடை தொகுதியுடன் வீடும் அடங்கலாக 5 பரப்பு காணி விற்பனைக்கு
077 558 9955

## கற்றாளை நாற்று விற்பனைக்கு

சிறிய.பெரிய கற்றாளை நாற்று விற்பனைக்குண்டு.வீட்டு தேவைக்கு யாழ். நகரில் பெறலாம்.
அன்ரன் - மண்கும்பான்
077 613 8964

## கடை தேவை

யாழ் நகரத்தில், 5 வருட குத்தகைக்கு 1000 Sq.ft கடை வாடகைக்கு தேவை.
வாகன தரிப்பிட வசதிகளுடன்.
(Stanly, KKS Road, விரும்பத்தக்கது)
Contact : Suren 070 323 4350
tsuren7@gmail.com

## வேலையாட்கள் தேவை

A-9 வீதி. திருமுறுகண்டியில் இயங்கும் சைவ உணவகம் ஒன்றுக்கு பின்வரும் பணியாளர்கள் உடனடியாக தேவை.
* காசாளர் * சமையலாளர்
* உணவு பரிமாறுபவர் * சுத்தகரிப்பாளர்
* சமையல் உதவியாளர்
ஆர்வம் உள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். தங்குமிடம், உணவு இலவசமாக வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு: 0777 114 226

## மணமகள் தேவை

யாழிந்து கௌரவகுலம் 1989,உத்தராடம் Veterinary Surgeon,Canada மணமகனுக்கு மணமகள் தேவை.
Tel : 0777111786 | 0777751380
No.14 3/1G,37th Lane,Colombo-06.
www.realmatrimony.com

## மணமகள் தேவை

யாழிந்து கௌரவகுலம் 1985,விசாகம் Business, UK மணமகனுக்கு மணமகள் தேவை.
Tel : 0716168292 | 0777751380
No.14 3/1G,37th Lane,Colombo-06.
www.realmatrimony.com

## மணமகள் தேவை

யாழிந்து கௌரவகுலம் 1994,மிருகசீரிடம் Engineer, Canada மணமகனுக்கு மணமகள் தேவை.
Tel : 0716168292 | 0777751380
No.14 3/1G,37th Lane,Colombo-06.
www.realmatrimony.com

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் மாபிள் பதித்து தரப்படும்.
அழுத்து பதிக்க ஒரு சதுர அடி - 85 ரூபா
077 334 1281

## வீடு வாடகைக்கு

கொக்குவில் யாழ் மருத்துவபீடத்துக்கு மிக அண்மையாக 4 படுக்கை அறை 3 குளியலறை கொண்ட வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு : 077 841 1895

## இரண்டு வீடு வாடகைக்கு

1). கொழும்புத்துறை கிழக்கு பிரதான வீதியில் 3 படுக்கையறை. 2 குளியலறை. 1 சமையலறை. 1 வரவேற்பறையுடன் கூடிய கீழ் மாடி வீடு வாடகைக்கு உண்டு.
2). 1 படுக்கையறை. 1 வரவேற்பறை. 1 சமையலறை. 1 குளியலறையுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 076 84 15 357

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பேராதனை பல்கலைக்கழகத்தில்
பொறியியல் பீடமேறிய
மகேந்திரராசா மணிவண்ணன்

கல்வியே கண்ணாக
கண்மணியே நீ கற்று
கணிதத்துறையின் சிகரமாய்
பொறியியலாளன் ஆனாய் ...!
கட்டடத்துறையில் நிபுணனாகி
சாதனைகள் காட்டியுன்
கால்பதிப்பீர் அகமைதாய்...!
வையகத்துள் வாழ்வாங்கு வாழ
வாழ்த்துகின்றோம் உளமார...!

Congratulations

வாழ்த்துவோர் :
அன்புத் தாத்தா, அம்மம்மா.
(cs.52721) (N.1)

## மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 12 . 1932



மறைவு 02 . 11 . 2023

### சபாவதி வன்னியசிங்கம்

சுன்னாகம் கணேசன் ரெக்ஸ்

நவாலியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் கடலைவப்புலத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சபாவதி வன்னியசிங்கம் கடந்த (02.11.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாவதி இராசம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான இராசா முத்தம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், மங்கையற்கரசியின் அன்புக் கணவரும், முரளிதரன் (கனடா), காலஞ்சென்ற ராஜேஸ்கண்ணா மற்றும் சர்மிளா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இந்திராணி (கனடா), சந்திராகலா (லண்டன்), சிவந்தா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், லக்சிகா (கனடா), சாருசன் (லண்டன்), சியாம் பிராகாஸ் (லண்டன்), மாதுரி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.11.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கடலைவப்புலம் வீதி,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்
மனைவி - 077 219 8518
(cs.52743) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
25 . 05 . 1936

இறப்பு
06 . 11 . 2012

அமரர்

### சின்னத்தம்பி சண்முகநாதன்

ஓய்வுநிலை அதிபர். அகில இலங்கை சமாதான நீதிவான் (J.P)

திதி: அபரபக்க அட்டமி (05.11.2023)

அன்பு உருவே மறைந்தாலும் அழியாது உங்கள் நினைவலைகள்
ஆண்டுகள் பதினொன்று பறந்தே ஓடோடி மறைந்திடினும்
ஓயாது உங்கள் இனிய பசுமையான நினைவலைகள்
இதயம் இத்துயர் சுமந்து கனமாய் கனக்கிறது
ஈரவிழிகள் நிறைகிறது கண்ணீர் சொரிகிறது
உயிருக்குள் உறைந்து எம் உயிரோடும் உணர்வோடும் கலந்து
எம்முள்ளே நீங்கள் என்னாளும் உயிர் வாழ்கிறீர்கள்
இனிய நினைவுகளும் இழந்த வலியும் வேதனையும்
இதயம் துடிக்கும் வரை இறுதி மூச்சு வரை எம்முள் சுமப்போம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை
வேண்டுகின்றோம்


"சண்முகதீபம்"
இல.43/4, கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(cs.52682) (N.1)

## மரண அறிவித்தல்

மண்ணில்
23 - 12 - 1947



விண்ணில்
28 - 10 - 2023

### பொன்னையா சிவபாலசுந்தரம்

யாழ். சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், புன்னாலைக்கட்டுவன், கனடா Brampton ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சிவபாலசுந்தரம் அவர்கள் கடந்த (28-10-2023) சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், சுன்னாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பொன்னையா அன்னமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான செல்லையா செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சந்திரலீலா அவர்களின் அன்புக் கணவரும், ராஜகாந்தன் வசீகரன், தயாழினி பிரபாகரன், பானுரேகா, அச்சுதன், தர்ஷிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், சுதர்ஷினி பிரஷாந்தினி, ரகுநாத், மாலினி, துசியந்தன், அபர்ணா நிமேஷ் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான குலமணிதேவி, கமலாதேவி மற்றும் செல்வராசா, குமாரசிங்கம் மல்லிகாதேவி, நிர்மலாதேவி, ஆகியோரின் பாசமிகு சகோதரரும், புவனேஸ்வரி, றஜனி, காலஞ்சென்றவர்களான இராசையா, சிவராசலிங்கம், கெங்காசிவம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், நடராஜா, பத்மினிதேவி, பத்மநாதன், செல்வராணி, நிர்மலன் பிரியதர்சினி, பிரபாஜினி, சிந்துஜா, சிந்துமுகி, காலஞ்சென்ற இரவீந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கிருஸ்ணலிங்கம், கஜீவன், தனுசன், மதுராங்கனி, காலஞ்சென்ற சசிராஜ் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும், வைஷ்னவன், கௌசிகன், தன்சிகா, மபிசன், அபிணா, அயின், திவ்வியா, டக்ஷி, கர்ணிகா, கபிஷா, கவிசன், ஹரிசன், ஹரிசா, ஆரியன், அர்ஜனன், ஆர்யா, அனுஷ்கா, சியாறா, சகீறன், நிவீனா ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.11.2023) ஞாயிற்றுக்கிழமை 8911 Woodhine Ave Maekham on L3R 5G1 Canada இல் நடைபெறும்.

அன்றையதினம் புன்னாலைக்கட்டுவனில் உள்ள அன்னாரது சகோதரி மல்லிகாதேவி அவர்களது இல்லத்தில் அஞ்சலி நிகழ்வு இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
புன்னாலைக்கட்டுவன்.

தொடர்பு :
074 011 1170

தகவல் :
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமக

### செல்லத்துரை புவனேஸ்வரி



தோற்றம்
16.01.1961

மறைவு
03.11.2023

புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை புவனேஸ்வரி நேற்றுமுன்தினம் (03.11.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வடிவேலு பார்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணேசு சற்குணம் தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும், சதுர்சன், தனிசியா, பௌசிகா ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயந்தன், சுதர்சன் ஆகியோரின் அன்பு மாமியாரும், நஸ்ரியா அவர்களின் அன்புப் பேர்த்தியும், கருணாநிதி, நல்லதம்பி, சற்குணராசா, விக்கினேஸ்வரன், வள்ளியம்மை, சீதாலெட்சுமி, நகுலேஸ்வரன் ஆகியோரின் சகோதரியும், நமசிவாயம், ஜயாத்துரை காலஞ்சென்ற புண்ணியமூர்த்தி மற்றும் அருந்தவமலர், அப்புத்துரை, கந்தசாமி, செல்வக்குமார் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.11.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கேரதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

4ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

077 456 5329

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

அன்னை மடியில் 18 . 02 . 1951



சிவனடியில் 18 . 10 . 2022

### அமரர் திருமதி கலாவதி பூலோகசிங்கம்

**(ஓய்வுபெற்ற ஆசிரியை, பகுதித் தலைவர் - யாழ் இந்து மகளிர் கல்லூரி)**

**திதி :- ஐப்பசிமாத அபரபட்ச அட்டமி (05.11.2023)**

*அம்மா......*
*நித்தமும்,*
*எம் விழிகளில் கண்ணீர் சிந்த வைத்து*
*எம் இதயத்தில் செந்நீர் கசிய வைத்து*
*எமையெல்லாம் தவிக்கவிட்டு*
*இவ்வுலகை நீங்கி ஓராண்டு ஆனதுவோ!!!*

*வண்ணை வைத்தீஸ்வரனின் பாதங்களில் உங்கள் ஆத்மா*
*இளைப்பாற அவனை வேண்டுகின்றோம் அம்மா.*

இன்று (05.11.2023) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் ஏழாலை மேற்கு முத்தமிழ் மண்டபத்தில் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசனை நிகழ்விலும் கலந்துகொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**"இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்."**

**ஏழாலை மேற்கு, ஏழாலை.** **குடும்பத்தினர்.**

(CS 26808) A-1

## The 70th Annual Festival of Carols

*by the*

**Combined Choirs of Schools and Colleges of the North**

will be held at the St. John's College Hall on Saturday 11th November 2023 at 4.00 p.m.

*Admission : By Hymn Sheet - Rs. 50/=*


(CR 40913)(AK-1)

## முத்து விழா இன்று!

பருத்தித்துறை, தும்பளை கிழக்கு க. தொ.கூ. சங்கத்தின் 30ஆவது ஆண்டை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் 'முத்து2023' விழா நிகழ்வு இன்று இடம் பெறவுள்ளது. இந் நிகழ்வானது சங்கத்தின் தலைவர் மா. மகேந்திரன் தலைமையில் அவ்வூர் பொதுநோக்கு மண்டபத்தில் இன்று பி.ப. 2 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது. (ஒ-100)

## மரண அறிவித்தல்

பிறப்பு 26 . 07 . 1944



இறப்பு 03 . 11 . 2023

### கதிரவேலு ஸ்ரீசயந்தராஜா

**(ஓய்வுபெற்ற மீன்பிடிக்கூட்டுத்தாபன உத்தியோகத்தர் யாழ்ப்பாணம் - பேசாலை)**

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் நவாலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.கதிரவேலு ஸ்ரீசயந்தராஜா கடந்த (03.11.2023) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் கணேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், கௌசலாதேவியின் (சந்திரா) அன்புக் கணவரும், சண்முகராஜா (கண்ணன் - பாதுகாப்பு உத்தியோகத்தர் MERCANTILE SECURITY SERVICE (Pvt) LTD, HNB Bank-Manipay- Chankanai), விஜிதா (Canada), கவிதா, ஸ்ரீசாந்த் (Health Entomology Officer-பிராந்திய மலேரியா தடை இயக்கம், யாழ்ப்பாணம்.) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுந்தரராஜன் - விஜித்குமார் (Canada) அவர்களின் அன்பு மாமனாரும், அக்ஷனா, அக்ஷியா (Canada) ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, குணேஸ்வரி, ஸ்ரீமகேந்திரராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும், இரதிதேவி, இந்திராணிதேவி, சகுந்தலாதேவி, அருந்ததி மற்றும் காலஞ்சென்ற இராசகுலேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06.11.2023 திங்கட்கிழமை அன்று மு.ப. 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆரயம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இறக்கு மாவத்தை,** **தகவல்: குடும்பத்தினர்.**
**நவாலி வடக்கு, மானிப்பாய்.** **077 9849 450**

(CS 52734) A-1

## மரண அறிவித்தல்



### செல்வி கணபதிப்பிள்ளை கமலாம்பிகை (பவா)

### கவிஞர் - மீசாலையூர் கமலா

மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி கணபதிப்பிள்ளை கமலாம்பிகை (பவா) கவிஞர் மீசாலையூர் கமலா நேற்றுமுன்தினம் (03.11.2023) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், சொர்ணபூபதி, காலஞ்சென்ற சொர்ணமலர் மற்றும் சொர்ணறஞ்சினி (ஜேர்மனி), மகாதேவன் (ஆதவன் ஸ்ரூடியோ - புத்தூர்ச் சந்தி, மீசாலை), சிவரகுநாதன் (சுவிஸ்), சர்வாஜினி (பிரதேச செயலகம் பச்சிலைப்பள்ளி), இன்பராஜ் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் புவனேஸ்வரி (வட்டக்கச்சி) ஆகியோரின் பெறாமகளும், நிர்மலநாதன் (திருகோணமலை), காலஞ்சென்ற அருந்ததி ஆகியோரின் மருமகளும், காலஞ்சென்ற கெங்காதரம்பிள்ளை மற்றும் வன்னியசிங்கம் (பரந்தன்), பரமநாதன் (ஜேர்மனி), அஜந்தா (சுவிஸ்), விநாயகலிங்கம், அமராவதி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், பிரகாஸ் (கங்கா போட்டோ - கோண்டாவில்), நிலானி (பிரான்ஸ்), தர்சினி (மாவட்ட பொது வைத்தியசாலை - கிளிநொச்சி), வரோதயன் (நீர்ப்பாசனத் திணைக் களம் - யாழ்ப்பாணம்), நிந்துஜா, நிதுலா, ஜெவாகர் (ஜேர்மனி) ஆகியோரின் சிறியதாயும், ஆதவன், ஆதீசன், அருணன் (சுவிஸ்), இந்துஜா, மதுஷன், டேணுஜா, வினோஜா, பிறோமபாலன் (பிரான்ஸ்), ஜெனனானந்தன் (பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் - யாழ்ப்பாணம்), நிருஜன், சுலக்சன், விக்நாத் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியும், பிரவீன், நிருசன், பிரநாத், கயுனிகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.11.2023) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மீசாலை வடக்கு,**
**மீசாலை.** **தகவல்:**
தொடர்பு: **077 462 8009** **குடும்பத்தினர்**

(cs.52735) (N.1)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயனின் பரிசுக்குவியல்

இந்தியா - தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான இன்றைய (05.11.2023) ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?

விடை : ..............................

பெயர் : ..............................
முகவரி : ..............................
..............................
தே.அ.இல : ..............................
தொ.இலக்கம் : ..............................

தினம் ஒரு பரிசு 32

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை வெல்லும் அணி எது?

விடை : ..............................

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் தொடர் ஆட்டநாயகன் யார்?

விடை : ..............................

பெயர் : ..............................
முகவரி : ..............................
..............................
தே.அ.இல : ..............................
தொ.இலக்கம் : ..............................

மெகா பரிசு

- உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் பரிசுக் கூப்பன்கள் யாவும் உதயனில் பிரசுரமாகும். இந்தக் கூப்பன்களை நீலம் அல்லது சிவப்பு நிற பேனாவால் மாத்திரம் நிரப்பி அனுப்ப வேண்டும்.
- வெட்டி எழுதப்பட்ட, அழித்து எழுதப்பட்ட, பிரதியெடுக்கப்பட்ட தாளில் எழுதப்பட்ட எந்தவொரு கூப்பனும் நிராகரிக்கப்படும்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்ப முடியும்.
- தினம் ஒரு பரிசுக்குரிய (தினம் ஒரு கேள்வி) கூப்பன்கள் அன்றைய தினம் பி.ப. 4 மணிக்கு முன்னதாக அனுப்பப்படவேண்டும்.
- மெகா பரிசுக்குரிய கூப்பன் 17.11.2023 அன்று பி.ப. 4 மணிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
- கூப்பன்கள் யாவும் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு தனித்தனியாக ( தினம் ஒரு பரிசு, மெகா பரிசு) அனுப்பிவைக்கப்படவேண்டும்.
- தேசிய அடையாள அட்டை இல்லாத சிறுவர்கள் தமது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்ப முடியும்.
- வெற்றியாளர்களின் விவரங்கள் உலகக்கிண்ண தொடர் முடிவடைந்த பின்னர் உதயனில் வெளியிடப்படும்.

## இன்றைய ஆட்டம்

இந்தியா — தென்னாபிரிக்கா

இடம் : கொல்கத்தா
நேரம்: பி.ப. 2.00

# அரையிறுதிக்குள் நுழையும் உயிர்ப்புடன் பாகிஸ்தான்



**உலகக்கிண்ணத் தொடரில் அரையிறுதிக்குத் தகுதி பெறுவதற்கான வாய்ப்பைத் தொடர்ந்தும் தக்க வைத்துள்ளது பாகிஸ்தான். நியூஸிலாந்து எதிராக நேற்றுப் பெற்ற நம்பமுடியாத வெற்றியையடுத்தே இந்த அடைவை பாகிஸ்தான் எட்டியுள்ளது.**

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்களை இழந்து 401 ஓட்டங்களைப் பெற்றது. ரச்சின் ரவீந்திரா அபாராமாக ஆடி 108 ஓட்டங்களைப் பெற்றார். அணித்தலைவர் வில்லியம்சன் 95 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் இமாட் வசிம் 3 விக்கெட்களைக் கைப்பற்றினார். பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஷகீன் ஷா அப்ரிடி 10 ஓவர்களை வீசி 90 ஓட்டங்களை விட்டுக்கொடுத்தார். எந்த விக்கெட்டையும் அவர் கைப்பற்றவில்லை.

பதிலுக்குக் களமிறங்கிய பாகிஸ்தான் அணிக்கு 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார் சபிக். அதன்பின்னர்தான் பாகிஸ்தானின் வேட்டை ஆரம்பமானது. மிரட்டலான ஆட்டத்தை ஆரம்பித்தார் பகர் ஷமான். அவருக்கு வாய்ப்புகளை வழங்கி அற்புதமாக ஆடிக்கொண்டிருந்தார் பாபர் அசாம். 39 பந்துகளில் பகர் சமானின் அரைச்சதமும், 63 பந்துகளில் சதமும் பதிவானது. 25.3 ஓவர்களில் பாகிஸ்தான் 200 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மழை குறிக்கிட ஆட்டம் நிறுத்தப்பட்டது. பாகிஸ்தான் அணி 21 ஓட்டங்கள் முன்னிலையில் இருந்ததையடுத்து டக்வேர்த் லூயிஸ் முறைப்படி அந்த அணி வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது. பகர் சமான் ஆட்டமிழக்காது 126 ஓட்டங்களையும் பாபர் அசாம் 66 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர். (ம)

# அரையிறுதிக்குள் நுழையும் முனைப்பில் அவுஸ்திரேலியா

உலகக்கிண்ணத் தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் இங்கிலாந்தைத் தோற்கடித்து, அரையிறுதி நுழையும் வாய்ப்பை அதிகப்படுத்தியது அவுஸ்திரேலியா.

மக்ஸ்வெல் மற்றும் மிச்செல் மார்ஷ் இருவரும் விலகிய நிலையில், அவுஸ்திரேலிய அணியின் அணிக்கட்டமைப்புத் தொடர்பில் பல்வேறு ஊகங்கள் இருக்கவே செய்தன. அந்த அணியின் வெற்றிவாய்ப்பு சந்தேகத்துக்குரியதாகவே பார்க்கப்பட்டது. எனினும், அவுஸ்திரேலிய அணி அற்புதமாகத் துடுப்பெடுத்தாடிய 286 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக லபுஷேன் 71 ஓட்டங்களையும், கமரூன் கிறீன் 47 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் வோக்ஸ் 4 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து அணி நேற்றும் தடுமாற்றத்தைத் தொடர்ந்தது. 253 ஓட்டங்களையே இங்கிலாந்து அணியால் பெறமுடிந்தது. பேர்ஸ்டவ் ஓட்டமெதையும் பெறாதும், பட்லர் ஓர் ஓட்டத்துடனும் வெளியேறினார்கள். இவர்களின் விரைவான ஆட்டமிழப்பே இந்தத் தொடரில் இங்கிலாந்தின் தோல்விக்குப் பெரும் காரணம். நேற்றும் அந்த நிலையே தொடர்ந்தது. 33 ஓட்டங்களால் வென்ற ஆஸி. அரையிறுதிக்கான வாய்ப்பை பிரகாசப்படுத்தியது.

பந்துவீச்சில் சாம்பா 3 விக்கெட்களைக் கைப்பற்றினார். (ம)



## தினம் ஒரு பரிசு — நாள் 30 இன் வெற்றியாளர்கள்

| | | | |
|---|---|---|---|
| பி.யதுனன் | - வல்வெட்டித்துறை | பா.பாலபத்மன் | - பருத்தித்துறை |
| சி.கௌரிசங்கர் | - திருநெல்வேலி | ம.கேமராஜ் | - முல்லைத்தீவு |
| பே.சசிகரன் | - உடுப்பிட்டி | பா.தினுசா | - பண்டாரிக்குளம் |
| தி.மதுராகரன் | - சித்தங்கேணி | ஏ.மானசா | - நெளுக்குளம் |
| சி.பவதரன் | - மிருசுவில் | இ.கண்ணன் | - ஆனைவிழுந்தான் |
| கா.கஜீவன் | - கோப்பாய் | ஆர்.ராஜா | - எருக்கலம்பிட்டி |
| ந.அபிப்பிரியன் | - யாழ்ப்பாணம் | ப.காருண்யா | - கைவேலி |
| சி.சிவனேசன் | - வவுனியா | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டவிரோத மின்பாவனை
# 8 மாதங்களில் 8 கோடி நட்டம்

கொழும்பு, நவ.5

சட்டவிரோத மின்சாரப் பாவனையால் 8 மாத காலப் பகுதியில் சுமார் 8 கோடி ரூபா நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது என்று இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது.

சிலர் மின்மானிகளை மாற்றியமைத்ததாலும், பல்வேறு உபகரணங்களைப் பயன்படுத்தி சட்ட விரோதமான முறையில் மின்சாரம் கையகப்படுத்துவதாலும் சபைக்கு இந்த நட்டம் ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

கடந்த எட்டு மாதங்களில், மின்மானிகளை மாற்றுவது தொடர்பாக, ஆயிரத்து 41 சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. மின்கம்பிகளில் பல்வேறு சாதனங்கள் பொருத்துவது தொடர்பாக 81 சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. அடையாளம் காணப்பட்ட நபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்திய போது, அவர்களுக்கு 36 இலட்சத்து 95 ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணமாக அறவிடப்பட்டுள்ளது. (எ-இ)

# நுண்நிதிக் கடன்களால் ஆதிவாசிகள் பாதிப்பு

## மொழியறிவு இன்மையே காரணம் எனச் சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 5

இலங்கையின் ஆதிவாசி சமூகத்தினர் நுண்நிதிக்கடன் நெருக்கடியால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டியிருக்கும் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம், இந்நாட்டில் வாழும் பூர்வீக சமூகத்தினர் முகங்கொடுத்திருக்கும் இந்த நெருக்கடிக்குத் தீர்வுகாண்பதற்கு ஏதுவான சமூகக் கலந்துரையாடலை உருவாக்கவேண்டியது அவசியமென்றும் வலியுறுத்தியுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் ஆதிவாசிகளின் தலைவர் ஊரு வரிகே வன்னில அத்தோவினால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க ஆகியோருக்கு இரு மாதங்களுக்கு முன்னர் அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தை இணைத்து, மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

நாட்டின் பல பாகங்களிலும் வாழ்ந்துவரும் ஆதிவாசி சமூகத்தினர் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். இவற்றினிடையே தற்போது நுண்நிதிக்கடன் நெருக்கடி அவர்களுக்கு பூதாகரமானதொரு பிரச்சினையாக மாறியிருக்கின்றது.

நுண்நிதிக் கடன் கொடுக்கல், வாங்கல்கள் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு இடையே பரிமாற்றப்படும் ஒப்பந்தங்கள் பெரும்பாலும் அவர்களுக்குப் புரியாத மொழியிலேயே காணப்படுகின்றன. ஒரு சில நிறுவனங்கள் தற்போது சிங்களம் மற்றும் தமிழ்மொழிகளில் உரிய ஆவணங்களை வழங்குகின்ற போதிலும், ஆதிவாசி சமூகத்தினருக்கு அவற்றின் உள்ளடக்கம் பற்றிய போதிய தெளிவில்லை.

அவர்கள் எந்தவொரு தெளிவும் இல்லாமல் உரிய ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவதோடு அதன் பிறகு சட்ட ரீதியாக இந்த வலைக்குள் மாட்டிக்கொள்கின்றனர் - என்றுள்ளது. (ம)

# 'அஸ்வெசும' கொடுப்பனவு விநியோகம்

தென்மராட்சி மற்றும் பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் 'அஸ்வெசும' நலன் புரித் திட்டத்தில் இணைக் கப்பட்ட பயனாளிகளுக்கான ஒகஸ்ட் மாதத்துக்குரிய முதலாம் கட்டக் கொடுப்பனவுகள் விநியோகிக்கப்படுகின்றன. நேற்று முன்தினம் தொடக்கம் வங்கிகளில் இந்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே ஜூலை மாதத்தில் ஆறு கட்டங்களாக இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்ட நிலையில் ஒகஸ்ட் மாதத்துக்குரிய முதலாம் கட்டக் கொடுப்பனவு தற்போது விநியோகிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-9)

# காலை உணவுக்கு மட்டும் 36,000 ரூபா

கொழும்பு, நவ.5

அதிக ஊட்டச்சத்துக் குறைபாடுகள் கொண்ட முதல் பத்து நாடுகளின் பட்டியலில் இலங்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

யுனிசெப்பின் மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் துறையின் குடும்ப வருமானம் மற்றும் செலவினக் கணக்கெடுப்பு அறிக்கையிலேயே இந்தத் தகவல் குறிப்பிடப்பட்டுள்ளது.

2.3 மில்லியன் குழந்தைகள் உட்பட 5.7 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் மனிதாபிமான உதவி தேவைப்படும் பட்டியலில் உள்ளனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சராசரியாக இலங்கையில் ஒரு குடும்பத்தின் காலை உணவுத் தேவைக்குச் சுமார் 36 ஆயிரம் ரூபாவை ஒரு மாதத்துக்கு செலவிடவேண்டிய நிலை காணப்படுகின்றது. இந்தத் தொகை காலை உணவுக்காக மாத்திரமே தவிர பிற தேவைகளை பூர்த்தி செய்ய அல்ல எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

# பணிப்புறக்கணிப்பில் கிராமஅலுவலர்கள்

கொழும்பு, நவ.5

சம்பளத் தொகை மற்றும் வீட்டு வசதிகள் மதிப்பீட்டுப் பணிகளுக்கான கொடுப்பனவு வழங்கப்படும்வரை அந்தப் பணிகளில் இருந்து விலகுவதற்கு கிராமஅலுவலர்கள் தீர்மானித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர்களின் சங்கத்தின் தலைவர் கமல் கித்சிறி இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இந்தத்தொழிற்சங்கநடவடிக்கைக்கு ஏனைய கிராமஅலுவலர் சங்கங்களும் ஆதரவு வழங்கும் என்றும் அவர் தெரிவித்தார். (எ-இ)

# ரணில் பயணித்த ஹெலி திடீரெனத் தரையிறக்கம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பயணித்த ஹெலிக்கொப்டர் திடீரெனத் தரையிறக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஹெலிக்கொப்டர் மூலம் வெலிமடைக்குச் சென்ற போது திடீரென மோசமான கால நிலை ஏற்பட்டது. அதையடுத்துக் ஹெலிக்கொப்டர் அங்குள்ள பாடசாலை மைதானம் ஒன்றில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது. அதன் பின்னர் ஜனாதிபதி வாகனம் ஒன்றில் தனது பயணத்தைத் தொடர்ந்தார். பயண மாற்றுக்கு இடைப்பட்ட நேரத்தில் அவர் அந்தப் பாடசாலை மாணவர்களுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டார். (எ-இ)

# திறக்கப்படும் வான்கதவுகள்; பொதுமக்களுக்கு எச்சரிக்கை

வவுனியா, நவ. 5

வவுனியா பேராறு நீர்த்தேக்கத்தின் வான்கதவுகள் திறக்கப்படவுள்ளதால், அதை அண்டிய பகுதிகளில் வசிக்கும் மக்கள் அவதானமாக இருக்கவேண்டும் என்று மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் எச்சரித்துள்ளது.



தற்போது நிலவும் மழையுடன் கூடிய காலநிலை காரண மாக வவுனியா மாவட்டத்தின் தாழ்நிலப் பகுதிகளில் வெள்ளம் தேங்கியுள்ளது. அத்துடன் அங்குள்ள குளங்களின் நீர்மட்டமும் அதிகரித்து வருகின்றது.

பேராறு நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் திறக்கப்படவுள்ளதால் புதுக்குளம், சாஸ்திரி கூழாங்குளம், ஈச்சங்குளம், மருதமடு, பாலமோட்டை ஆகிய இடங்களில் வசிக்கும் மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்று மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் அறிவுறுத்தியுள்ளது. (எ-18)


## மரண அறிவித்தல்

### செல்வராணி இந்திரகுமார்



187/8, கின்னர் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

தோற்றம் 05.10.1958 மறைவு 04.11.2023

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராணி இந்திரகுமார் அவர்கள் நேற்று (04.11.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: ச.இந்திரகுமார் (உரிமையாளர்) 0777 238291

(CR 40933)A-1


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சுகாதாரத்துறையை வலுப்படுத்த மருத்துவமனைகளில் கருத்திட்டம்!

## யாழ். வந்த உலக வங்கி முகாமைத்துவப் பணிப்பாளர் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், நவ.5**

**இலங்கையின் சுகாதாரத்துறையைக் கட்டியெழுப்பி - ஆரோக்கிய சமூகத்தை உருவாக்குவதற்கு மருத்துவ மனைகளில் வலுவூட்டல் கருத்திட்டங்களை உலகவங்கி செயற்படுத்தி வருகின்றது என்று உலக வங்கியின் முகா மைத்துவப் பணிப்பாளர் அனாஜெடி தெரிவித்துள்ளார்.**

ஆனாஜெடி தலைமையிலான உலக வங்கிக் குழுவினர் கோப்பாய் பிரதேச மருத்துவமனைக்கு கடந்த திங்கட்கிழமை வருகை தந்தனர்.
அங்கு உலக வங்கியின் அனுசரணையில் மேற்கொள்ளப்படும் வலுப்படுத்தல் திட்டங்களைப் பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கையில் வலுவூட்டல் கருத்திட்டங்களுக்காக மருத்துவமனைகளில் பல்வேறு திட்டங்களை உலக வங்கி செயற்படுத்தி வருகிறது. இந்தக் கருத்திட்டம் சுகாதாரத்துறையைக் கட்டியெழுப்ப வழிவகுக்கும்.
வடக்கு மாகாணத்தில் 50க்கும் மேற்பட்ட மருத்துவமனைகளில் இந்த வலுவூட்டல் செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.
ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்குவதே எமது நோக்கம்- என்றார். (ச-20)



# நவ மகாஜன சிற்பியின் நினைவு தினமும், பரிசளிப்பும்

யாழ்ப்பாணம், நவ.5
தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் நவ மகாஜன சிற்பி தெ.து.ஜயரத்தினம் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் காலை 8.30 மணியளவில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.
நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகள், விருந்தினர் க்ளின் உரைகள் இடம்பெற்றதுடன், கடந்த காலங்களில் கல்வி மற்றும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் திறமையை வெளிப்படுத்திய மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.
நிகழ்வு தொடர்பான நினைவுப் பேருரையை கல்லூரியின் பழைய மாணவரான கவிஞர் சிறிசபேசன் நிகழ்த்தினார்.
இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலி. வடக்குப் பிரதேச செயலர் சிவஸ்ரீயும், சிறப்பு விருந்தினராக ஆரம்பப் பிரிவுக்கான வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் முரளீதரனும், கௌரவ விருந்தினராக மகாஜனக் கல்லூரியின் ஓய்வு நிலை உப அதிபர் தவராஜாவும் கலந்துகெண்டனர். (எ-27-20)



# இணுவில் காளியம்பாள் அசைவ மடை உற்சவம்

யாழ்ப்பாணம், நவ.5
யாழ்ப்பாணம், இணுவில் சிவகாமி அம்மன் ஆலயப் பின் வீதியில் அமைந்துள்ள பத்திரகாளி அம்மனுக்கு வருடாந்த அசைவ மடை உற்சவம் அண்மையில் சிறப்புற இடம்பெற்றது.
பத்திரகாளியம்மனுக்கு அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று அசைவ உணவுகள் படைத்து பக்தர்களுக்கு தானம் வழங்கப்பட்டது.
பத்திரகாளி அம்பாளுக்கு ஆலய அறங்காவலர்களால் அசைவ மடை உற்சவம் பண்டைய காலம் தொட்டு வருடாவருடம் நடத்தப்பட்டு வருகின்றது. (ச-27)



# ஆசிரியர் கலாசாலை நூற்றாண்டு சிறப்புரை

யாழ்ப்பாணம், நவ.5
கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு காலச் சிறப்புரை அரங்க நிகழ்வு கடந்த புதன்கிழமை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் கலாசாலை முதல்வர் ச.லலீசன் தலைமையில் இடம்பெற்றது.
நிகழ்வில் வலிகாமம் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சிவசம்பு மதியழகன் அதிதிப் பேச்சாளராகப் பங்கேற்று 'உன்னத ஆசிரியம்' எனும் தலைப்பில் சிறப்புரையாற் றினார். அதிதிப் பேச்சாளர் கலாசாலையின் முகா மைத்துவக் குழுவினரால் கௌரவிக்கப்பட்டார். (ச-66)

# பரிசில் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ. 5
மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலய பரிசில் நாள் நிகழ்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
வித்தியாலய அதிபர் இ.நாகேந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அபிராமி இராசதுரை கலந்து கொள்ளவுள்ளார். (ச-9)



# கைதடி அரங்கில் முத்தமிழ் விழா

சாவகச்சேரி, நவ.5
கைதடி சனசமூக நிலையங்களின் ஒன்றியமும் குமரநகர் சனசமூக நிலையமும் இணைந்து நடத்திய முத்தமிழ் விழா அண்மையில் கைதடி குமரநகர் சனசமூக நிலைய நகுலன் கலையரங்கில் இடம்பெற்றது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி பிரதேசசபையின் முன்னாள் உபதவிசாளர் செல்வரத்தினம் மயூரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.
இதன்போது மூத்த பிரஜைகள், சிறுவர்கள் ஆகியோருக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் மாணவர்கள் மற்றும் உள்ளூர் கலைஞர்களின் கலைநிகழ்வுகளும் முத்தமிழ் விழாவில் சிறப்புற்றன. (ச-ரி-100,9)



முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம் ஆகியவற்றுடன் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் இணைந்து நடத்திய 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கான இலவச மருத்துவ முகாம் அண்மையில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி யசோதா உதயகுமார் தலைமையில் நடைபெற்றது. இதில் சுமார் 250 வரையான முதியவர்கள் பங்கேற்று பயன்பெற்றனர். (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கம் மீட்பு!

மன்னார், நவ. 5

கடல் வழியாக கடத்த முயன்ற சுமார் 2 கிலோ 150 கிராம் தங்கம் மன்னாரில் நேற்றுமுன்தினம் கடற்படையினர் முறியடித்துள்ளனர். (ஒ-26)


**ENGLISH / TAMIL மொழிபெயர்ப்பாளர்கள் அலுவலக ஊழியர்கள்**

**VACANCY**

யாழ். பிறவுண் வீதியில் உள்ள நிறுவனம் ஒன்றிற்கு English or தமிழில் தட்டச்சு செய்யக் கூடிய (Computer Typing) அலுவலக ஊழியர்கள் தேவை. சம்பளம் 40,000 +

தொடர்புகளுக்கு:

**0777 111 444**

**சுருட்டு சுற்றும் உரிமம் [LICENSE] தேவை**

சுருட்டு சுற்றும் உரிமம் (LICENSE) தேவை. புதுப்பிக்க படாத / காலாவதியான / நடைமுறையில் உள்ள LICENSE கொள்வனவு செய்யப்படும். பல வருடங்கள் பழமையானது என்றாலும் ஏற்றுக்கொள்ளப்படும்.

**077 433 4826**

**பனம் பழம் தேவை**

30 ரூபா வீதம் பனம்பழம் உங்கள் இடங்களுக்கு வந்து கொள்வனவு செய்யப்படும். சேகரித்து தரக்கூடியவர்களும் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:

**0777 157 070**

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் இராசபாதை வீதியில் 10 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

**நிலப்பரப்பு**

- பிரதான இராசபாதையும் G.P.S. விளையாட்டரங்க வீதியும் இணையும் பிரதான சந்தி முகப்புடன் உள்ளது.
- 18 அடி பாதையுடன்.
- 4 பரப்பாகவும், 3 1/2 பரப்பாகவும், 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- திருமண மண்டபங்கள் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் வீடுகள், கட்டுவதற்கு உகந்த இடம்.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்று.
- இக் காணியில் இருந்து கல்வியங்காடு பிரதான சந்தை 1 1/2 km. திருநெல்வேலி பிரதான சந்தை 1 1/2 km. நல்லூர் கந்தசாமி ஆலயம் 2 km.
- திருநெல்வேலி நொதேன் வைத்தியசாலை 2 km.

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

பார்வையிடும் நேரம்:-

காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

தொடர்புகளுக்கு:- ஜெயம்

**077 814 7389**

**077 986 5457**

(CS 26820) A-1


## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் குணரெட்ணம்



ஒட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும் 414/4, கோவில் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் குணரெட்ணம் அவர்கள் நேற்று (04.11.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் அன்னமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சபாரட்ணம் கமலாம்பிகை மற்றும் விஜயரட்ணம் (ஜேர்மனி), வாலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.11.2023) ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

414/4, கோவில் வீதி, நல்லூர்.

தகவல்: குடும்பத்தினர்.
077 021 0973

(CS 26843)A-1

# ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 23.02.1964

மறைவு 05.10.2023

## அமரர் சிதம்பரப்பிள்ளை சுந்தரேஸ்வரன்

(உரிமையாளர் - ஜெயு கிருஷ்ணா ஹாட்வெயார் - சுன்னாகம்)

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத் துயில் கொண்ட எமது குடும்பத் தலைவரின் 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (05.11.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 07.00 மணிமுதல் எமது இல்லத்தில் நடைபெறுவதுடன் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து மதியபோசன நிகழ்வும் முற்பகல் 11.00 மணியளவில் இடம்பெறும். இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புரிமையுடன் வேண்டி நிற்கின்றோம்.

"உற்றார், உறவினுள்ளோர் உறுதுணையாக நின்றோர்
மற்றுவாய் மொழியில் துயரை மறந்திடத் தேறல்தந்தோர்
இற்றைநாள் வரையாயிருந்து எமக்குரமூட்டி நின்றோர்
அத்தனை பேர்க்கும் நன்றி நவில்கின்றோம் கரங்கள் கூப்பி"

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

ஐயனார் கோவில் வீதி,
சுன்னாகம்.

குடும்பத்தினர்
077 004 5710

(cs 52733) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரித்தோர் நினைவாக மன்னாரில் பெருவிழா

ஆன்மாக்களுக்கு ஆசிவேண்டி விசேடமாக செபிக்கும் நிகழ்வு மன்னாரில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. பேசாலை கல்லறைப் பூங்காவில் இடம்பெற்ற இந்நிகழ்வில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு தொடர்ந்து மரித்தோர் கல்லறைகளுக்கருகே உறவினர்கள் செபித்து வழிபாட்டில் ஈடுபட்டனர். திருச்சபையானது நவம்பர் மாதம் 2ஆம் திகதியை விசுவாசிகளுக்குரிய நாளாக ஆண்டுதோறும் கடைப்பிடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ச-ரி-60)


## விற்பனைக்கு

Lion பொமனேறியன் நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

071 649 2654

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் (v) 1994 இல் பிறந்த பரணி - 3ம் பாதம். பொறியியலாளர் (Civil Engineer) அவர்களுக்கு உயர்கல்வி கற்ற or அரச தொழில் புரியும் மணமகள் தேவை.

தொடர்பு : "குணவதி திருமண சேவை" 077 307 6902, 070 607 6902

* பதிவுக் கட்டணம் 1000 மட்டும்.

## விற்பனைக்கு

வீல் செயார், ஈசிசெயார், யன்னல், நிலைகள், கதவுகள் இன்னும் சில வீட்டுத்தளபாடங்கள் விற்பனைக்குண்டு.

076 711 8522 கிளிநொச்சி

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

மானிப்பாயில், உடுவில் பிரதான வீதி முகப்பாக கொண்ட 2 பரப்பு காணியுடன் 80% முற்றுப் பெற்ற வீடு விற்பனைக்குண்டு

077 655 5677

## தரமான காணி விற்பனைக்கு

GOLDEN Real Estate

யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் A-9 வீதி முகப்புடன் 60 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

* 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
* **நிலப்பரப்பு,** நன்னீரூற்று
* 18 அடிப்பாதையுடன்
* வட மாகாணசபை, சித்த மருத்துவமனை ஆகியவற்றிற்கு எதிரே பிரதான வீதியுடனான காணி
* யாழ். பஸ்நிலையத்திலிருந்து 6 KM தூரம்
* மிகவும் நல்ல சூழல், குடியிருப்புகள் சூழவுள்ள காணி
* வீடு கட்டுவதற்கும், களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் உகந்த இடம்.
* பரம்பரைக்காணி, பலவருடகால தோம்பு, தூய உறுதி.
* தரகர் தேவையில்லை.

**பார்வையிடும் நேரம்:** காலை 6.00 - மாலை 6.00 மணிவரை

1 பரப்பின் விலை 24 லட்சம்

**Golden Real Estate (Pvt) Ltd.**
**Director & Owner :- T.Kalaithasan**

077 468 3354, 076 755 8606, 077 288 0152

(CS 26828) A-1

## வீட்டுடன் காணிவிற்பனைக்கு

யாழ்ப்பாணம், பெருமாள் கோயிலுக்கு அண்மையில் யாழ். பாடி வீதியில் அமைந்துள்ள 2 ¼ பரப்பு காணியுடன் வீடும் விற்பனைக்கு உள்ளது.

077 900 3780

(CS 52738) (AK.1)

## மணமகள் தேவை

1. இணுவில். இந்து. கௌரவகுலம் (V). 1990. அனுசம். Quantity Surveyor, அவுஸ்ரேலியா மணமகனுக்கு மணமகள் தேவை.
2. சுதுமலை. இந்து. கௌரவகுலம் (V). 1975. மிருகசீரிடம். BA, Graduate, Australia மணமகனுக்கு மணமகள் தேவை.
3. தெல்லிப்பளை. இந்து. கௌரவகுலம் (V). 1988. உத்தரம். BSc., Civil Engineering, USA மணமகனுக்கு மணமகள் தேவை.
4. இளவாலை. இந்து. கௌரவகுலம் (V). 1975. அனுசம். Diploma, Divorced, Canada மணமகனுக்கு மணமகள் தேவை.
5. சங்கானை. இந்து. கௌரவகுலம் (K). 1992. விசாகம். BA (Hons), Accountant, UK மணமகனுக்கு மணமகள் தேவை.
6. மயிலிட்டி. இந்து. குருகுலம். 1981. அத்தம். Accountant, USA மணமகனுக்கு மணமகள் தேவை.
7. மல்லாகம். இந்து. கௌரவகுலம். (K). 1986. மிருகசீரிடம். Degree in Business Administration, UK. மணமகனுக்கு மணமகள் தேவை.
8. யாழ். இந்து. கௌரவகுலம். (V). 1986. மகம். BSc, MSc, UK. மணமகனுக்கு மணமகள் தேவை.
9. மானிப்பாய். இந்து. கௌரவகுலம். (V). 1986. திருவாதிரை. Quantity Surveyor, Newzealand, Divorce மணமகனுக்கு மணமகள் தேவை.
10. சாவகச்சேரி. இந்து. கௌரவகுலம். (V). 1984. ரேவதி. MBBS Doctor, Dentist, USA மணமகனுக்கு மணமகள் தேவை.
11. ப்ளை. இந்து. கௌரவகுலம். (V). 1984. அவிட்டம். Phd, Divorce, UK மணமகனுக்கு மணமகள் தேவை.
12. கோப்பாய். இந்து. கௌரவகுலம். (V). 1984. சதயம். MBBS Doctor, Ireland Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.

S.Sharma J.P Astrologer
Whatsapp - 077 803 8193
Phone - 077 539 3728

நாளையுடன் விண்ணப்ப பதிவுகள் நிறைவடைகின்றன
இறுதி சந்தர்ப்பம் : தவறவிடாதீர்கள்

அமெரிக்க லொத்தர் இலவச வீசா
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
2024ல் நீங்களும் அமெரிக்காவில்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
V2 Travels
0768226244
0768226241

## காணி விற்பனைக்கு

சண்டிலிப்பாயில் 2 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

(CS26723)(J-1) 076 701 3060

## கற்பித்துக் கொடுக்கப்படும்

தரம் 1 முதல் G.C.E (O/L) வரை தமிழ், கணிதம், ஆங்கிலம்

ஆசிரியர் B.A

076 832 7227

## காணி விற்பனைக்கு / குத்தகைக்கு

A-9 வீதி, சாவகச்சேரி நகரிலுள்ள வர்த்தக நிறுவனங்கள், திருமண மண்டபம் போன்றவை அமைக்கக் கூடிய 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

T.P: 077 6231 025

## விற்பனைக்கு

ELECTRIC SCOOTER (LEADER), PETROL GENERATOR 2.5 K.W (TIGER), ஊதுபத்தி MACHINE, BREAD TOASTER (12pcs).

077 755 6244 / 077 758 3208

## விற்பனைக்கு

German Shepherd ( நாய் குட்டிகள் விற்பனைக்கு) 2 மாதங்களான பெண் நாய் குட்டிகள் விற்பனைக்கு.

071 520 6642, 074 001 1708

அமெரிக்க லொத்தர் விசா
இன்னும் 03 நாட்கள் மட்டுமே
* பதிவுகளை மேற்கொள்ளுங்கள்
* அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S. Road, Jaffna. T.P: 0777 55 45 28

## வேலையாள் தேவை

கால்நடை உற்பத்தி விற்பனை நிலையத்திற்கு Light Vehicle (Auto Licence) உள்ள ஆண் வேலையாள் தேவை.

075 258 9665
077 851 1265
Jaffna Egg Centre

## சமையலாளர் தேவை

நாவற்குழியில் இயங்குகின்ற தனியார் நிறுவனம் ஒன்றிற்கு தங்கி நின்று வேலை செய்ய கூடிய ஆண் சமையலாளர் தேவை.

**உணவு தங்குமிடம் இலவசம்**
**சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.**
**வயதெல்லை : 30 - 50**

CS 52693 (AK.1)

தொடர்பு : 077 068 5170

## தேவை

யாழ் நகரில் இயங்கும் பிரபல கவரிங் நகைகள் விற்பனை நிலையம், நகைக்கடை என்பவற்றிற்கு உதவியாளர்கள் தேவை.

077 351 5980,077 563 2734


## உடனடி வேலை வாய்ப்பு

பிரபல ஹோட்டல் ஒன்றுக்கு அறை சுத்திகரிப்பாளர் (House Keeping) தேவை. House Keeping அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

CS 52718 (AK.1)

077 798 3933, 021 222 1889

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 04 • 10 • 1948

மறைவு 16 • 11 • 2022

அமரர் சிவத்திரு

### கந்தையா பத்மநேசன்

(ஓய்வுபெற்ற இலங்கை வங்கி முதுநிலை முகாமையாளர்)

திதி: தேய்பிறை அட்டமி

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம்முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர்வாழும்

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

சம்பியன் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(cs.52679) (N.1)


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஞ்சீவி

கண்ணுக்குள்ளே வைத்து காத்திடும் வீரரை
மண்ணுக்குள்ளே விதைத்தோம் — அந்த
புண்ணியர் நெஞ்சினிலே பூத்ததோர் கனவினை
எண்ணத்திலே வளர்த்தோம்!

பக்கங்கள்: 08

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2053 ஐப்பசி 19 ஞாயிற்றுக்கிழமை (05.11.2023) சிகரம் : 172



# வடக்கில் வலுக்கும் வல்வளைப்பு: பிசுபிசுத்துப் போகும் சீனாவின் முயற்சிகள்

○ நரசிம்மன்

தென் கிழக்காசியப் பிராந்தியத்தில் இந்தியா, சீனா ஆகிய நாடுகளுக்கும் இடையில் நிலவிவருகின்ற வல்லரசுப் போட்டி உலகறிந்த விடயம். குறிப்பாக இலங்கையில் தமது ஆதிக்கத்தை நிரூபிப்பதில் இரு நாடுகளும் நேரடியாகவும், மறைமுகமாகவும் கடுமையான பகீரதப் பிரயத்தனங்களில் ஈடுபட்டு வருகின்றன. இலங்கையின் அதிகேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலைத் துறை முகத்தின் மீதான ஆதிக்கத்தில் இந்தியா அக்கறை கொண்டு - அதற்கான நகர்வுகளை மேற்கொண்டிருக்க, தெற்கில் அம்பாந்தோட்டையையும், துறைமுக நகரத்தையும் வைத்து சீனா காய் நகர்த்தியது.

ஆனாலும் இலங்கை அரசியலிலும் சரி பொருளாதார ரீதியாக வருமானத்திலும் சரி கணிசமான - சொல்லிக் கொள்ளத்தக்க - பங்கை வகிக்கக் கூடிய தமிழர்களையும் - தமிழர் பிரதேசங்களையும் வளைத்துப் போடாமல் ஆகப்போவது ஒன்றுமில்லை என்ற ஓர் உண்மையை இரு நாடுகளும் உணரத் தலைப்பட்டுள்ளன.

எனினும், தமிழர்கள்- தமிழர் பிரதேசங்கள் - மீதான இந்தியாவின் கரிசனை தவறாக அர்த்தம் கற்பிக்கமுடியாத அளவுக்கு நியாயப்பாடுகளைக் கொண்டுள்ளது. இந்தியாவின் தமிழகத்துக்கும், ஈழத் தமிழர்களுக்கும் இடையிலான பிணைப்பு ஒரு வரலாற்றுப் பின்னணியைக் கொண்டமைந்ததாகும். ஈழத் தமிழர்களுக்கு உறுதுணையாக நிற்கவேண்டிய ஒரு கடப்பாடு இந்தியாவுக்கு என்றும் உண்டு.

மாறாக, சீனா தெற்கில் முதலீடு என்ற போர்வையில் செய்த அத்தனை திட்டங்களையும் - செத்துகளையும்- நிலங்களையும் வல்வளைப்புச் செய்து ஆக்கிரமித்து ஆதிக்கம் செலுத்துவதாகவே அமைந்துள்ளது. அம்பாந்தோட்டை ஆகட்டும், துறைமுக நகராகட்டும் முதலீடு என்ற பேரில் ஆக்கிரமித்து அதிகாரத்தைப் பிரயோகித்து வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

தெற்குக்கு ஈடாக வடக்கு-கிழக்குப் பகுதிகளில் மானசீகமாக மக்களோடு இந்தியாவின் செல்வாக்கு அதிகமாகக் காணப்படுவதை உணர்ந்து கொண்ட சீனா, இப்போது வடக்கிலும், கிழக்கிலும் பல்வேறு வழிகளில் தன்னுடைய ஆதிக்கத்தைச் செலுத்தத் தலைப்படுகிறது. எந்தெந்த வழிகளில் எல்லாம் நுழைய முடியுமோ அந்தந்த வழிகளையெல்லாம் தேடித் துளைத்து உள் நுழைவதற்கு சீனா முனைகிறது. கிழக்கில் அதன் முயற்சி ஓரளவுக்கு வெற்றி கண்டிருந்தாலும், வடக்கில் மக்கள் மனங்களை வென்று உள் நுழைவதென்பது முயற்கொம்பாகவே இருக்கின்றது.

2016 ஆம் ஆண்டு முதல் இலங்கையிலுள்ள சகல பல்கலைக்கழகங்களுக்கும் வழங்கப்பட்டு வந்த சீனத் தூதுவரின் புலமைப்பரிசில் நிதியுதவி கடந்த வருடம் முதல் திடீரென வடக்கில் உள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கும், கிழக்கில் உள்ள கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கும் மட்டுப்படுத்தப்பட்டது. அத்துடன் என்றுமில்லாதவாறு சீனப் பல்கலைக்கழகங்கள் இந்த இரண்டு பல்கலைக்கழகங்களுடனும் ஆய்வு நடவடிக்கைகளுக்கான ஒப்பந்தங்களைக் கைச்சாத்திடுவதற்கும் முண்டியடிக்கத் தொடங்கின. எல்லாவற்றுக்கும் மேலாகத் தம்முடன் இயைந்து போன சில விரிவுரையாளர்களின் மூலம் மாணவர்களுக்கு இலவச தங்குமிடம், போக்குவரத்து வசதிகளை வழங்கி "பட்டுப்பாதைத்" திட்டத்தின்கீழ் சில சுற்றுலா வாய்ப்புகளும் வழங்கப்பட்டன. இதன் மூலம் தமிழர்கள் மத்தியில் செல்வாக்குமிக்க மாணவத் தலைவர்களைக் கையாள்வதற்குச் சீனா முனைகிறது என்ற சந்தேகம் மாணவர்கள் மத்தியில் எழத் தொடங்கியது. ஆனாலும் கிழக்கில் தமிழ் மாணவர்கள் தொகை குறைவென்பதால், தமிழ் மாணவர்கள் தமது எதிர்ப்பைப் பதிவு செய்வதற்குள் சீனத் தூதுவரின் புலமைப்பரிசில் திட்டமும், சீன மொழிப் பயற்சி நிலையமும் கிழக்குப் பல்கலைக்கழகத்துக்குள் தளம் கொண்டு விட்டன.

ஆனால், ஈழ விடுதலைப் போராட்டத்தின்போது, ராஜபக்ச அரசாங்கத்தோடு கூட்டுச் சேர்ந்து நின்று இரசாயன ஆயுதங்கள் முதற்கொண்டு போரியல் ஆதரவை வழங்கியதிலிருந்து, போருக்குப் பின்னரான காலப் பகுதியில் போர்க் குற்றத்துக்கு நீதிவேண்டி ஒட்டுமொத்தத் தமிழினமும் குரல் கொடுத்த நேரத்தில், போர்க்குற்ற விசாரணை தேவையற்றதொன்று எனச் சாரப்பட சீனத் தூதுவர் ருவிற்றர் மூலம் வெளியிட்ட செய்தி பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் சீனா மீது கொதிப்பை ஏற்படுத்தியிருந்தது. இதனால் சீனப் பல்கலைக்கழகங்களுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும், சீனத் தூதுவரின் வருகையையும் கண்டித்து யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் பகிரங்க அறிக்கை ஒன்றையும் வெளியிட்டிருந்தது. அத்துடன் சீனாவில் நடைபெறவிருந்த இரு நிகழ்வுகளுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தரை முழு அனுசரணையுடன் அழைத்தபோதும், மாணவர்களின் மனநிலை காரணமாக அவர் அவ்விரண்டு அழைப்புகளையும் நிராகரித்திருந்தார். இதனால் வடக்கில் பல்கலைக்கழகத்தின் ஊடாகக் கால் பதிக்கும் திட்டத்தை சீனா கைவிட வேண்டியநிலை ஏற்பட்டது.

இதையடுத்து சீனா இப்போது வடக்கின் கடல் வளத்தைக் குறிவைத்துக் காய் நகர்த்தத் தொடங்கியிருக்கிறது. வடக்கில் ஆழ் கடலல்லாத பகுதிகளில் கடலட்டைப் பண்ணைகளை அமைப்பதிலும், ஆழ் கடல் மீன்பிடியில் ஈடுபடுவதற்கும் முழுமையாக இறங்கியிருக்கிறது. அண்மையில் சீனாவுக்கு விஜயம் செய்த கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் மீன்பிடித் துறையை மேம்படுத்த 150 கோடி ரூபாவை சீன அரசாங்கம் மானியமாக வழங்கியிருக்கிறது. ஆனாலும் வடக்கு மீன்பிடித்துறையில் சீனாவின் ஆகிக்கம் அதிகரித்து வருகின்றமை பலத்த கண்டனத்துக்கு உள்ளாகியுள்ளது. தமிழர்களின் பூர்வீகத் தாயகமான வடக்கு - கிழக்கு பகுதிகளில் சீனா வலிந்து ஆதிக்கம் செலுத்த முனைவது தமிழர்களின் வாழ்வாதாரத்துக்குப் பெரும் அச்சுறுத்தலாகும் என்று கடற்றொழிலாளர் சங்கங்கள் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டியிருக்கின்றன.

கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சின் அனுசரணையோடு வெளிநாட்டு மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பினுள் கடற்றொழிலில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்குவதற்கான ஒப்பந்தமும், சீனாவில் இருந்து மீன்களை இறக்குமதி செய்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதேநேரம் வடக்கில் மீன் வளத்தைக் குறைக்கும் வகையில், கடற்றொழிலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் கடலட்டைச் செய்கையிலும் சீனா ஈடுபடத் தொடங்கியுள்ளது. இதனால் இயற்கையாகக் கிடைக்கும் கடல் வளங்கள் நேரடியாகப் பாதிப்பதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளதுடன், நீண்டகால உரிமத்தை வழங்குவதனூடாகப் பாரம்பரியமாகக் கடற்றொழிலில் ஈடுபடும் சுதேசிகளுக்குப் பெரும் சவாலாகவும் இது அமைகிறது.



இதனால், தமிழ்த்தேசியம் சார்ந்து செயற்படுகின்ற கட்சிகளும், சீனாவில் வல்வளைப்பு முயற்சிகள் மீதான தமது கண்டனத்தைப் பதிவு செய்துள்ளன. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியும் சீனாவில் வல்வளைப்பு முயற்சிகள் பற்றிப் பகிரங்கமாகப் பேசி வருகின்றன. தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனும், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளரும் சட்டத்தரணியுமான க. சுகாசும் பூகோள ரீதியாக ஏற்பட்டுள்ள இந்த பிரச்சினைக்கான தீர்வு காண்பதற்கு தமிழ் மக்களுக்

08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாக்களும் அப்புக்காத்துமாரும்

○ நிலாந்தன்



வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கடந்த வாரம் வவுனியாவில் தங்களுக்கிடையே மோதிக் கொண்டார்கள். ஆளுக்காள் அடிபட்டு, அதன் விளைவாக பொலிஸ் நிலையம்வரை போயிருக்கிறார்கள். பொலிஸாரை சம்பவ இடத்துக்கு அழைத்ததும் அவர்கள்தான். எந்தப் பொலிஸுக்கு எதிராக இதுவரை காலமும் போராடினார்களோ, அதே பொலிஸிடம் போய் ஆளுக்காள் முறைப்பாடு செய்திருக்கிறார்கள்.

இந்த மோதல் தொடர்பில் வடக்கு- கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் சங்கம் ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. அந்த அறிக்கையில் மோதலைப் பற்றிய விளக்கம் உண்டு. ஆனால் அது முழுமையானதாகத் தெரியவில்லை. தமிழர் தாயகத்தில் உள்ள எல்லாச் சங்கங்களையும் ஒருங்கிணைக்கின்ற ,எல்லாச் சங்கங்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு மையக் கட்டமைப்பு இல்லை. கடந்த 14 ஆண்டுகளாக, சங்கங்களையும், அம்மாக்களையும் தனித்தனியாக பிரித்துக் கையாண்ட கட்சிகளும் புலம்பெயர்ந்த தமிழ்ச் செயற்பாட்டாளர்களுமே இந்த மோதல்களுக்குப் பொறுப்பு கூற வேண்டும்.

தமிழ்த் தேசிய அரசியலில் ஏற்பட்ட ஆகப்பிந்திய வீழ்ச்சி அது. கடந்த 14 ஆண்டுகளாக எல்லாப் போராட்டங்களிலும் ஊர்வலங்களிலும் ஆர்ப்பாட்டங்களிலும் எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் முன்னணிப் படையாக நிற்பது அந்த அம்மாக்கள்தான். கண்ணீரோடு மண்ணை அள்ளி வீசி அரசாங்கத்தைச் சபித்தபடி, எல்லாப் போராட்டங்களிலும் முன்னரங்கில் காணப்படுவார்கள்.

கடந்த 14 ஆண்டுகளாக தமிழ் மக்கள் மத்தியில் நீதிக்கான போராட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுப்பது இந்த அம்மாக்கள்தான். கட்சிகளோ குடிமக்கள் சமூகங்களோ அல்ல. கடந்த 14 ஆண்டுகளாக வவுனியாவிலும் முல்லைத் தீவிலும் ,கிளிநொச்சியிலும் இரண்டு குடில்களில் மிகச் சில அம்மாக்கள் இருந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவருடைய போராட்டத்தை மக்கள் மயப்படுத்த அவர்களுக்கு தெரியவில்லை. மக்களும் அவர்களை நோக்கிச் செல்வது குறைவு. ஆனாலும் அவர்கள் தொடர்ந்து போராடுகிறார்கள். முழுத் தமிழ் மக்களுக்குமான போராட்டத்தின் உணர்ச்சிக் கூர்முனையாக அவர்களே காணப்படுகிறார்கள். அவர்கள் மத்தியில் கணிசமானவர்கள் மூப்பினாலும் களைப்பினாலும் ஏமாற்றத்தினாலும் நோய்களினாலும் இறந்து போய்விட்டார்கள். எனினும் விடாது போராடுகிறார்கள்.

அவர்களுடைய கண்ணீருக்குத் தமிழ் அரசியலில் ஒரு மகத்தான சக்தி உண்டு. கடந்த 14 ஆண்டு கால நீதிக்கான தமிழ் மக்களின் போராட்டத்தில் உணர்ச்சிகரமான ஈட்டி முனையாக அவர்களே காணப்படுகிறார்கள்.

அதனால்தான் அவர்களைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கு கட்சிகளும் முயற்சிக்கின்றன;புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளும்,தனி நபர்களும் முயற்சிக்கிறார்கள். அதனால்தான் அரசாங்கம் ஒரு முறை அவர்களை, அவர்கள் பயணம் செய்த பேருந்துக்குள் அடைத்துவைத்து வெளியேறவிடாமல் தடுத்தது; அவர்களை முரட்டுத்தனமாகக் கையாண்டது. அதனால்தான் அமெரிக்கத் தூதுவர் அவர்களைச் சந்தித்து அவர்களோடு படமெடுத்து அதைத் தனது ருவிற்றர் பக்கத்தில் பிரசுரிக்கிறார். அமெரிக்கத் தூதர் மட்டுமல்ல, இலங்கைக்கு வரும் மேற்கத்திய ராஜதந்திரிகள், ஐ.நாவி.ன் முக்கியஸ்தர்கள் போன்றோர் அந்த அம்மாக்களைச் சந்திக்காமல் செல்வது குறைவு. ஐ.நா. கூட்டத் தொடரில் ஈழத் தமிழர்களுக்கான கண்ணீர்ச் சாட்சியங்கள் அவர்கள்தான்.

அந்த அம்மாக்களின் சங்கங்களின் பொறுப்பில் இருப்பவர்கள் எல்லாரும் அரசியல் தெளிவுடையவர்கள் என்றில்லை. அந்த அம்மாக்களின் கண்ணீர்தான் அவர்களுடைய பலம். ஆனால் கண்ணீருக்கு அரசியல் தெளிவு இருக்க வேண்டும் என்று இல்லை. இது அந்த அமைப்புகளில் காணப்படும் பிரதான பலவீனம். அடுத்த பலவீனம், அவர்களுக்கு உதவி புரியும் புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளும் தனி நபர்களும். அவர்கள்தான் உதவி புரிகிறார்கள்; அவர்கள் தான் தொலைஇயக்கியால் இந்த அமைப்புகளைக் கட்டுப்படுத்தவும் முயல்கின்றார்கள். மூன்றுக்கும் குறையாத புலம்பெயர்ந்த தரப்புக்கள் இந்த அம்மாக்களைத் தத்தெடுக்க முயற்சிப்பதாக அவதானிக்கப்பட்டுள்ளது. அவர்களுடைய உதவிகள் இல்லையென்றால் கடந்த 14 ஆண்டுகளாக இந்த அம்மாக்கள் தொடர்ச்சியாகப் போராடியிருக்க முடியாது. அவர்களுடைய உதவிகள் இல்லையென்றால் இந்த அம்

> அந்த அம்மாக்களின் சங்கங்களின் பொறுப்பில் இருப்பவர்கள் எல்லோரும் அரசியல் தெளிவுடையவர்கள் என்றில்லை. அந்த அம்மாக்களின் கண்ணீர்தான் அவர்களுடைய பலம். ஆனால் கண்ணீருக்கு அரசியல் தெளிவு இருக்க வேண்டும் என்று இல்லை. இது அந்த அமைப்புகளில் காணப்படும் பிரதான பலவீனம்.

மாக்கள் ஐ.நா. போன்ற உலக அவைகளுக்குச் சென்று தமது கண்ணீரைச் சாட்சியமாகக் கொடுத்திருக்க முடியாது. ஆனால் அவ்வாறு உதவி செய்யும் அமைப்புகளும் தனி நபர்களுமே இந்த அம்மாக்கள் பிரிந்திருப்பதற்கு ஒருவிதத்தில் காரணம். கட்சிகளும் காரணந்தான்.

சில ஆண்டுகளுக்கு முன் தமிழ் மக்கள் பேரவை பலமாக இருந்த காலகட்டத்தில் இந்த அம்மாக்களின் சங்கங்களை ஒற்றுமைப்படுத்த முயற்சித்தது. முடியவில்லை. சில குடிமக்கள் சமூகங்கள் முயற்சித்தன. முடியவில்லை. எனினும், வெளிநாட்டுத் தூதுவர்களுடான சந்திப்புகளின்போது சில சிவில் செயற்பாட்டாளர்கள் இந்த அம்மாக்களுக்கு உதவுவதுண்டு. ஆனால் எந்த ஒரு குடிமக்கள் சமூகத்தாலும் இந்த அம்மாக்களின் சங்கங்களை கட்டுக்கோப்பான ஐக்கிய அமைப்பாக திரட்டியெடுக்க முடியவில்லை.

கடந்த 14ஆண்டுகளாக தமிழ்மக்கள் மத்தியில் போராட்டத்துக்குத் தேவையான கட்டமைப்புகளை உருவாக்கமுடியாத கட்சிகளும், தாயக அரசியலில் நிர்ணயகரமான விதங்களில் தலையிட முயற்சிக்கும் புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகளும் இந்த அம்மாக்களை எப்படித் தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரலாம் என்று எத்தனிக்கின்றன. போராடத் தேவையான கட்டமைப்புகளை உருவாக்க முடியாத மேற்கண்ட தரப்புகள் உணர்ச்சிகரமாக எப்பொழுதும் போராடத் தயார் நிலையில் காணப்படும் அம்மாக்களைத் தயார் நிலை முன்னணிப் போராளிகளாகப் பார்க்கின்றன. எனவே அவர்களைத் தத்தெடுக்க முயற்சிக்கின்றன. அவர்களாலும் கட்டமைப்புகளை உருவாக்க முடியவில்லை, உணர்ச்சிகரமான ஒரு பொது அடித்தளத்தில் ஓரளவுக்கு அமைப்பாகக்கூடிய அம்மாக்களையும் ஐக்கியப்பட விடுகிறார்கள் இல்லை. அதன் விளைவாகவே அம்மாக்களை கட்டுக்கோப்பான ஒரு மையக் கட்டமைப்புக்குள் கொண்டுவர முடியவில்லை.

வவுனியாவில் ஏற்பட்ட மோதல்களின் பின்னணியிலும் புலம்பெயர்ந்த நபர்கள் சிலர் உண்டு என்று அம்மாக்கள் குற்றம் சாட்டுகிறார்கள். வவுனியா மோதலுக்குக் காரணம் கொள்கை முரண்பாடு அல்ல. கொள்கை ரீதியாக அந்த அம்மாக்களுக்கிடையே முரண்பாடுகள் கிடையாது. அந்த முரண்பாடுகளின் தோற்றுவாய் சில புலம்பெயர்ந்த தமிழர்கள் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இது தமிழ்த் தேசியப் பரப்புக்குள் ஏற்பட்ட ஒரு முரண்பாடு. அகமுரண்பாடு. இதனைப் பகை முரண்பாடு ஆக்காமல் நேச முரண்பாடாக அணுகியிருந்திருக்க வேண்டும். அல்லது அது பகை முரண்பாடாக மாறுவதை தடுத்து இந்த அம்மாக்களை ஒரு கட்சியோ சிவில் அமைப்போ ஐக்கியப்படுத்தியிருந்திருக்க வேண்டும். ஆனால் தங்களுக்கு இடையே ஐக்கியப்பட முடியாத கட்சிகளும், கட்சிகளை ஐக்கியப்படுத்த முடியாத குடிமக்கள் சமூகங்களும் இந்த வயோதிப அம்மாக்களை எப்படி ஐக்கியப்படுத்தும்?

தமிழ்த் தேசிய அரசியலானது அக முரண்பாடுகளைக் கையாளும் பக்குவம் குறைந்தது என்பதற்கு ஆகப்பிந்திய உதாரணம் இது. மற்றொரு உதாரணம், அண்மையில் இடம்பெற்றது. அம்மாக்கள் சண்டை போடுவதற்கு சில நாட்களுக்கு முன் நடந்தது.

தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரான சுமந்திரன் ஓர் ஆங்கில ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலில், சம்பந்தர் ஓய்வு பெறவேண்டும் என்று கேட்டிருந்தார். முதுமை காரணமாக சம்பந்தர் இயலாதவர் ஆகிவிட்டார் என்பதனால் அவர் ஓய்வு பெற வேண்டும் என்று சுமந்திரன் அந்த நேர்காணலில் கூறியிருக்கிறார். கட்சியின் மிக மூத்த தலைவரைப் பற்றி அடுத்த நிலைத் தலைவர் ஒருவர் அவ்வாறு பகிரங்கமாகக் கூறுவது எதைக் காட்டுகிறது ?அது ஓர் உட்கட்சிப் பிரச்சினை. அதை ஏன் அவர் பகிரங்கமாக கூற வேண்டி வந்தது? ஏற்கனவே கூட்டமைப்பாக இருந்தது படிப்படியாக உடைந்துடைந்து வந்து இப்பொழுது தமிழரசுக் கட்சியாகச் சுருங்கிப் போய்விட்டது. இப்பொழுது அக்கட்சி தனக்குள்ளேயும் மோதத் தொடங்கி விட்டதா? தமிழரசுக் கட்சியின் அடுத்த தலைவர் யார் என்று போட்டிதான் அதற்கு காரணம். அது எல்லா கட்சிகளுக்குள்ளும் ஏற்படும் ஜனநாயகப் போட்டி. அதில் சுமந்திரனும் சிறீதரனும் போட்டியிடக்கூடும் என்ற எதிர்பார்ப்பு உண்டு. சி.வி.கே.சிவஞானத்துக்கும் விருப்பம் உண்டு. ஆனால் மாவையும் சம்பந்தரும் தேர்தலை வைக்கிறார்கள் இல்லை. அரசாங்கம் தேர்தல்களை வைக்கவில்லை என்று கேட்கும் ஒரு கட்சி, தன்னுடைய தலைமைக்கான தேர்தலை ஒத்திவைத்து வருகிறது. அதன் விளைவாக கட்சியின் அடுத்த நிலைத் தலைவர் ஒருவர் உட்கட்சி விவகாரத்தை பொதுவெளியில் வைத்துப் பேசியிருக்கிறார்.

தமிழ்த் தேசிய அரசியலின் சீரழிவை மேற்கண்ட இரண்டு உதாரணங்களும் நமக்குக் காட்டுகின்றன. தங்களுக்கிடையே தீர்க்க வேண்டிய பிரச்சினைகளை பொது வெளிக்குக் கொண்டு வந்து, தங்களையும் கீழ்மைப்படுத்தி, தமிழ் மக்களின் நீதிக்கான போராட்டத்தையும் பலமிழக்கச் செய்யக்கூடியவைகளாக மேற்படி சம்பவங்கள் காணப்படுகின்றன. தமிழ் மக்கள் மத்தியில் ஒரு பலமான தேசிய இயக்கம் இல்லாத வெற்றிடத்தில்தான் இவ்வாறான மோதல்கள் ஏற்படுகின்றன. மூத்த, பாரம்பரியம்மிக்க ஒரு கட்சியின் அப்புக்காத்துமாரும் பொறுப்பாக நடந்து கொள்ளவில்லை; பாதிக்கப்பட்ட முதிய அம்மாக்களும் பொறுப்பாக நடந்து கொள்ளவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் பாசிசவாதிகளா?

அ.நிக்ஸன்

## அமெரிக்க, இஸ்ரேல் அரசுகளிடம் பாசிசத்தன்மை இருப்பதாக அர்த்தப்படுத்த முடியுமா?



1920 இலங்கைத் தேசிய இயக்கம் பிளவுபட்டு 1921 தமிழர் மகாசபை உருவாவதற்குக் காரணம் யார்? ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை விவகாரத்தில் 'இலங்கை அரசு' என்ற கட்டமைப்பு 1948 இல் இருந்து 2009 மே மாதம் வரையும் நடந்து கொண்ட முறை சரியானதா? 2009 மே மாதத்துக்குப் பின்னரான கடந்த 14 வருடங்களில் அதாவது விடுதலைப் புலிகள் இல்லாதொழிக்கப்பட்ட பின்னரான சூழலில் செயற்பட்ட முறை நீதியானதா?

இங்கே நீதி தவறியது யார் புலிகளா? இலங்கை அரசா? வன்முறையை முதலில் ஆரம்பித்தது யார? புலிகளா? இலங்கை அரசா? தமிழ் முற்போக்குவாதிகளுக்கும் தமிழ் மாற்றுக் கருத்தாளர்களுக்கும் புத்தி எங்கிருந்து பிறக்கிறது?

பாதிக்கப்பட்டவன் பக்கம் நின்று பேசாமல் பாதிப்புக்கு உட்படுத்தியவன் பக்கம் நின்று நியாயம் கற்பிக்க முற்படுவது மாற்றுக் கருத்தா?

'இலங்கை அரசு' என்ற கட்டமைப்புச் செய்த தவறுகளையும் சுட்டிக்காட்டுவதாக கூறி மாற்றுக் கருத்தாளர்கள் சிலவேளை தங்கள் செயற்பாடுகளை நியாயப்படுத்தவும் கூடும்.

ஆனால் நீதி எங்கிருந்து தவறியது . யாரால் தவறவிடப்பட்டது என்று மாற்றுக் கருத்தாளர்கள் எவரும் சிங்கள ஆட்சியாளர்களின் நெஞ்சை நோக்கிக் கைநீட்டிச் சொல்வதில்லை. மாறாக புலிகளை மாத்திரமே "பாசிசவாதிகள்" என்று மிகச் சுலபமாகக் கூறித் தங்கள் ஆங்கிலப் புலமையை வெளிப்படுத்தி வருகின்றனர். இறுதிப்போர் குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்குழு 2010 இல் வெளியிட்ட அறிக்கைகூட, இலங்கைத்தீவில் நீதி எங்கிருந்து தவறியது என்பதை ஓப்பிட்டளவில் (Comparatively) காண்பிக்கிறது. ஆனால் விடுதலைப் புலிகளைப் பாசிசவாதிகள் என்று அந்த நிபுணர்குழு அறிக்கை முத்திரை குத்தவில்லை. ஆகவே தமிழ்ச் சமூகத்தில் பிறந்து தங்களை மாற்றுக் கருத்தாளர்கள், புத்திஜீவிகள் என்று மார்தட்டுவோர் புலிகளை 'பாசிசவாதிகள்' என்று எந்த அடிப்படையில் வரையறை (Definition) செய்ய முடியும்?

'கருத்து' 'மாற்றுக் கருத்து' என பல கருத்தாடல்கள் இருக்கின்றன. ஆனால் ஒரு இனத்தின் அரசியல் விடுதலைக்கான நியாயத்தை கொச்சைப்படுத்துவது, மலினப்படுத்துவது போன்ற தீங்கிழைக்கும் கருத்துக்களை மாற்றுக் கருத்து என்று வரைவிலக்கணம் கொடுக்க முடியாது.

ஆகவே "கொலை" "அடக்குமுறை" என்ற ஒற்றைக் காரணத்தையும் ஒருபக்க, வாதத்தையும் மையமாகக் கொண்டு புலிகளை 'பாசிசவாதிகள்' என கற்பிதம் செய்ய முற்படு கின்றமை தமிழ்த்தேசியம் மீதான வன்மமே.

ஒன்றில் இருந்து மற்றொரு வகையான முன்னேற்றத்துக்குரிய உரையாடல்களை மாற்றுக் கருத்து என்று பொருள்கொள்ள முடியும். குறிப்பாகப் பாதிக்கப்பட்ட தரப்பில் நின்று கொண்டு திருத்தம் அல்லது சீர்திருத்தம் செய்ய முற்படுவது மாற்றுக் கருத்தாகும். மற்றொரு கோணத்தில் சிந்திப்பதையும் குறிக்கும். இவ்வாறான மாற்றுச் சிந்தனைகளைத் தடுப்பதுதான் கருத்துச் சுதந்திரத்துக்கு எதிரான செயற்பாடு என்று அர்த்தப்படும்.

ஆனால் இங்கே விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் பேசுவோரின் மாற்றுக் கருத்து அல்லது மாற்றுச் சிந்தனை என்பது இலங்கை ஒற்றையாட்சி அரசைநியாயப்படுத்துவதாகவுள்ளது. சிங்கள ஆட்சியாளர்களுக்கு ஏற்ப கற்பிதம் செய்வதையும் வழமையாகக் கொண்டுள்ளது.

ஆனால் 1958 இல் இருந்து 2009 மே வரையும் இலங்கை அரசு என்ற 'பௌத்த கட்டமைப்பு' நடத்திய தமிழ் இன அழிப்பு மற்றும் ஆயுதப் போராட்டத்துக்கு முன்னர் 1981 இல் யாழ் .நூலகம், ஈழநாடு பத்திரிகைக் காரியாலயங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் எரியூட்டப்பட்டு நடந்தேறிய வன்முறைகள் பற்றியெல்லாம் இந்த மாற்றுக் கருத்தாளர்கள் ஏன் துணிவுடன் வாய்திறப்பதில்லை?

இன்று மட்டக்களப்பு மேய்ச்சல் நிலமான மயிலத்தனை, மாதவன்மடுவில் சிங்களக் குடியேற்றத்துக்காகப் பசுமாடுகளைக் குண்டு வைத்து கொலை செய்கிறார்கள். பௌத்த குருமார் ஒத்துழைக்கின்றனர். இது மாற்றுக் கருத்தாளர்களின் கண்களுக்குத் தெரியவில்லையா?

கொலைகளில் "நல்ல கொலை" "கெட்ட கொலை" என இரண்டு வகைகள் இல்லை. கொலை என்றால் அதனை யார் செய்தாலும் அது கொலைதான்.

ஆனால் இங்கே புலிகள் செய்ததுதான் கொலையென மாற்றுக் கருத்தாளர்கள் என்போர் கற்பிதம் செய்கின்றனர். இலங்கை அரசு செய்த தமிழ் இனக் கொலைகள் எல்லாம் 'நல்ல கொலைகள்' என்ற தொனியில் நியாயம் கற்பிக்கப்படுகின்றது. பாசிசம் என்பதற்கு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வெவ்வேறு காலங்களில் பெரும்பாலும் தவறான விளக்கங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. இந்தியாவில் ஆர்.எஸ்.எஸ் அமைப்பு என்பது பாசிசம் என்ற கொள்கையை உறுதியாக ஆதரித்திருக்கிறது. பாசிசம் தான் இந்தியாவில் 'இந்து இராஷ்டிரம்' அதாவது "இந்துத்துவா" என்ற கனவை நனவாக்கச் சரியான கொள்கை என்று ஆர்.எஸ்.எஸ் அமைப்பு 1931 இல் கருதியது.

இத்தாலியில் முசோலினி உருவாக்கியதைப் போல. இந்தியாவில் ஒரு சர்வாதிகாரத்தை உருவாக்கி மக்களின் கருத்துரிமைகளைப் பறித்து இராணுவப் பயிற்சிக்கு இந்துக்களைத் தயார் செய்து இந்தியாவில் வாழ்கின்ற இஸ்லாமியர்களை வெளியேற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு ஆர்.எஸ்.எஸ். அமைப்பு பாசிசத்தை வெளிப்படையாகவே ஆதரித்தது.

ஆர்.எஸ்.எஸ் அமைப்பை உருவாக்கியவர்களில் ஒருவரான 'மூஞ்சே' 1931 இல் இத்தாலிக்குச் சென்று அங்கே முசோலினி நடத்திய பாசிசக் கல்லூரிகள் இராணுவக் கல்லூரிகள் அனைத்தையும் பார்வையிட்டிருக்கிறார். 'இது ஒரு சிறப்பான கட்டமைப்பு. மக்களை தயார்படுத்தும் சிறப்பான முறை. இதே போன்றுதான் இந்தியாவிலும் அமைக்க வேண்டும்' என்று அந்த கல்லூரிகளின் வருகைப் பதிவேடுகளில் மூஞ்சே குறிப்புகளை எழுதி வைத்துள்ளாதாக மார்சியோ காசலோரி (Marzia Casolari) என்ற ஒரு இத்தாலி ஆய்வாளர் கூறுகிறார்.

## இந்தியா சுதந்திரமடைந்தபோது ஆர்.எஸ்.எஸ். ஏற்றிய கொடி எது?

இந்தியாவில் இந்துத்துவா பற்றி பேசுகிற நிறுவனங்களின் வெளிநாட்டு தொடர்புகளைப் பற்றி ஆராய்ந்து 'இந்திய தேசியத்துக்கும் நாஜி பாசிசத்துக்கும் இடையிலான தெளிவற்ற உறவு' (Ambiguous Relationship between Indian Nationalism and NaziFacism) என்ற ஒரு ஆய்வு நூலை மார்சியோ காசலோரி 2000 ஆம் ஆண்டு வெளியிட்டிருக்கிறார். எக்கனமிக் பொலிற்றிகல் வீக்லி (Economic and political weekly) என்ற ஆங்கிலப் வார இதழில் 2000 ஆம் ஆண்டு ஜனவரி இருபத்திரண்டாம் திகதி, இந்த நூல் குறித்த விமர்சனம் வெளியாகியிருக்கிறது.

1947 இல் இந்தியா சுதந்திரம் பெற்ற போது இந்தியாவில் தேசியக் கொடி ஏற்றப்படடது. ஆனால் ஆர்.எஸ்.எஸ் அமைப்பு 1947 ஓகஸ்ட் பதினைந்தாம் திகதி பாசிச அடையாளத்துக்குரிய "சுவஸ்திகா" கொடியை நாக்பூரில் ஏற்றியது. அப்போது காவிக் கொடியை ஆர்.எஸ்.எஸ் பயன்படுத்தவில்லை.

இந்தப் பின்புலத்திலேதான் நரேந்திர மோடியின் ஆட்சியை பாசிச ஆட்சி என்று தற்போது பலரும் விமர்சிக்கின்றனர். 2002 இல் மோடி குஜராத் மாநிலத்தில் முதலமைச்சராக இருந்தபோது முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்ட படுகொலைகளை ஒப்பிட்டும் பேசுகின்றனர். இங்கே நாசிசம் பாசிசம் மட்டுமில்லாமல் ஜியோனிசம் (Zionism) என்ற சித்தாந்தம் பற்றியும் நோக்க வேண்டும். ஜியோனிசம் யூதர்கள் சட்ட விரோதமாக பலஸ்தீனர்களிடமிருந்து அபகரித்து உருவாக்கிக் கொண்ட இஸ்ரேல் என்ற யூத நாட்டுக்கான மதம். 'ஜியோனிசம்' என்ற சொற்றொடரை வியட்னாம் நாட்டைச் சேர்ந்த பிரன்பவும் (Nathan Birnbaum) என்ற யூதர் 1855 இல் உருவாக்கினார்.

இப்போது இஸ்ரேல்- பலஸ்தீன போரில் என்ன நடக்கிறது? 'போர் என்றால் போர் 'என்று தான் இஸ்ரேல் கூறுகிறது. இஸ்ரேலை ஆதரிக்கும் அமெரிக்கா கனடா போன்ற மேற்கு நாடுகளும் ஐரோப்பிய நாடுகளும் ஹமாஸ் இயக்கத்துடன் சமாதானப் பேச்சுக்கே இடமில்லை என்கின்றன. ஆகவே இந்த நாடுகள் பாசிசக் கொள்கையைத் பலஸ்தீன விவகாரத்தில் கையாளுகின்றன என்று அர்த்தப்படுத்த முடியுமா?

ஏன் 1983 இல் இஸ்ரேலின் ஆதரவுடன் ஈழத்தமிழ் போராளிகளை அழிக்கத் திட்டமிட்டபோது சமாதானம் என்ற பேச்சுக்கே இடமில்லையென அன்று ஜே.ஆர் மார்தட்டினார் அல்லவா? 1990 இல் பிரேமதாஸ என்ன சொன்னார்? 'போர் என்றால் போர்தான். இராணுவத் தேவைகளுக்காக சாக்குகளையும் உரப் பைகளையும் வீட்டுக்கு வீடு சென்று சிங்கள மக்கள் சேகரிக்க வேண்டும்' என உத்தரவிட்டு போர்ப் பிரகடனம் செய்தார் அல்லவா? சமாதானத்துக்கான போர் என்று 1995 இல் சந்திரிகாவும் பகிரங்கமாகக் கூறினார் அல்லவா? இனப்பிரச்சினையென ஒன்று இல்லை என்றும் புலிகள்தான் பிரச்சினை எனவும் 2005 இல் கூறிய மஹிந்த ராஜபக்ச, தனது மகனையும் போருக்கு அனுப்பி போர் பிரகடனம் செய்தார் அல்லவா?

ஆகவே இலங்கை மற்றும் இஸ்ரேல், அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகளிடம் 'பாசிசவாதத் தன்மையான ''அரச பயங்கரவாதம்' ஒளிந்திருக்கின்றது என்பதை தமிழ் மாற்றுக் கருத்தாளர்களினால் துணிவுடன் வெளிப்படுத்த முடியுமா?

ஆனால் புலிகள் பாசிசவாதிகள் என்று அன்றில் இருந்து இன்றுவரையும் அதுவும் 2009 க்குப் பின்னரான கடந்த பதினான்கு வருடங்களிலும் தொடராகச் சுட்டிக்காட்டிக் கொண்டேயிருக்கின்றனர். ஆனால் இவர்கள் கூறும் பாசிசம் என்பது இத்தாலியில் இருந்த பாசிசத்தை போன்றதா என்ற கேள்வி எழுகிறது. பாசிஸ்ட்டுகள் என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தும் பலருக்கும், அது பற்றிய போதிய விளக்கம் இல்லை. மாறாக பாசிசம் மற்றும் பாசிஸ்ட்டுகள் என்ற வார்த்தை இத்தாலிய பாசிசம் மற்றும் ஜெர்மனியில் நடந்த நாசிசத்தை ஒப்பிடும் வகையிலேயே அமைந்துள்ளன.

'பாசிசம் ஒரு மிகச் சிறிய அறிமுகம்' (Fascism: A Very Short Introduction) என்ற நூலை எழுதியுள்ள வரலாற்று அறிஞரான கார்டிஃப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கெவின் பாஸ்மோர் (Kevin Pasmore) பாசிசம், நாசிசம் இரண்டும் ஒன்றோடு ஒன்று ஒத்துச் செல்பவை அல்ல என்கிறார். இனவெறி மற்றும் யூத எதிர்ப்பு ஆகியவை நாசிச சித்தாந்தத்தின் முக்கிய புள்ளியாக இருந்தது. ஆனால், இத்தாலியில் இருந்த பாசிசம் என்பது அவ்வாறு ஒரு குறிப்பிட்ட விடயத்தைக் கொண்டு வரையறுக்கும் வகையில் இல்லை. ஆகவே ஒரு விடுதலை இயக்கத்தின் செயலில் இனவெறி இருப்பதால் மட்டும் அவர்களை பாசிஸ்ட்டுகள் என்று அடையாளப்படுத்த முடியாது என்று இவர் விளக்குகிறார்.

இத்தாலியில் இருந்த பாசிசத்தில் (Cooperativism) கோர்ப்பரேட்டிசம் எனப்படும் கூட்டுப் பிழைப்புவாதம், அரசியல் ரீதியாக கலந்தே இருந்தது என்றும் வாதிடுகிறார். மக்கள் தங்களுக்கு இருக்கும் திறமையின் அடிப்படையில் ஒரு தலைமையின் கீழ் குழுக்களாக இணைந்து செயல்படுவதை வகைப்படுத்தப்படுவது எனவும் கெவின் பாஸ்மோர் மேலும் கற்பிதம் செய்கிறார்.

ஆகவே இந்தப் புரிதல் இல்லாத ஒரு பின்னணியில் விடுதலை இயக்கங்கள் மீதான கண்டனத்தை வெளியிட வசதியான வார்த்தையாகப் பெரும்பாலும் "பாசிஸ்ட்" என்ற சொல் பயன்படுத்தப்பட்டு வருகின்றது எனப் பொருள்கொள்ள முடியும்.

இந்தியாவில் உள்ள ஆர்.எஸ்.எஸ். போன்ற சில அரசியல் கட்சிகள் பாசிசத்தில் உள்ள பல கருத்துகளோடு ஒத்துப்போகும் சூழலிலும், தங்களைப் பாசிஸ்ட் என்று அழைத்துக் கொள்வதில்லை. ஏனென்றால், பாசிசத்திற்கு எதிரான மாற்றுக் கருத்தாளர்கள் அனைவரும் பாசிசத்தை நாசிசத்துடன் ஒப்பிட்டே வாதிடுகின்றனர்.

இதற்கான துல்லியமான விளக்கம் என்ன என்பதில் இன்னும் விவாதம் தொடர்கிறது. ஆகவே மாற்றுக் கருத்தாளர்கள் மீதான கொலைகளை மாத்திரம் மதிப்பீடு செய்து பாசிஸ்ட் என்ற முடிவுக்கும் வர முடியாது. அப்படியானால் தற்கால நவீன அரச கட்டமைப்புகளுக்குள்ளும் பாசிஸ்ட் இருப்பதாகவே அர்த்தம் கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சாவுகளில் விளையாடிய சட்டமருத்துவ அதிகாரி!



'இரண்டு குரூரக்கொலைகளும் ஒரு சர்ச் சைக்குரிய சட்டமருத்துவ அதிகாரியும்' என்ற தலைப்பில் அண்மையில் கொழும்பில் இடம் பெற்ற இரண்டு மரணங்கள் தொடர்பில் daily ft பத்திரிகையில் வெளிவந்த கட்டுரை யின் தமிழாக்கம் இங்கு தரப்படுகிறது.

தமிழாக்கம் : ந.பரமேஸ்வரன்

அண்மையில் இடம்பெற்ற இரண்டு மரணங்கள் தொடர்பாக மருத்துவர் ஹக் சமர்ப்பித்த உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கைகள் பெரும் சர்ச்சைகளைக் கிளப்பியுள்ளன.

ஹம்டி என்ற சிறுமி சிறுநீர் கழிக்க முடியாமல் அவஸ்தைப் பட்டுள்ளார். இதனையடுத்து பெற்றோர் சிறுமியை கொழும்பு லேடி றிட்ஜ்வே மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றனர். அங்கு சிறுமியை பரிசோதித்த மருத்துவர்கள் சிறுமியின் சிறுநீரகங்களில் ஒன்று அகற்றப்படவேண்டுமெனக் கூறினர். இவ்வாறு சிறுநீரகம் அகற்றப்படுவது வெகு அரிது. சிறுநீரகப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தால் மட்டுமே சிறுநீரகம் அகற்றப்படுவதுண்டு. ஆனால் சிறுநீர்ப் பிரச்சினைக்கு ஏன் அகற்றவேண்டும் என்ற கேள்வி பெற்றோருக்கு ஏற்பட்டது. அதைவிட சத்திர சிகிச்சைமூலம் சிறுநீரகம் அகற்றப்பட்ட பின்னரும் சிறுமியின் உடலில் எதுவித முன்னேற்றமும் ஏற்படவில்லை. கடைசியில் அந்தச் சிறுமி சிகிச்சை பயனின்றி இறந்து போனாள். அவளது சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது பெரும் அதிர்ச்சி. அந்தச் சிறுமிக்கு ஒரேயொரு சிறுநீரகமே இருந்ததாகவும், அதுவும் அகற்றப்பட்டு விட்டதால் அவள் உடலில் எந்தவொரு சிறுநீரகமும் இப்போது இல்லை என்று உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையில் சொல்லப்பட்டது. இந்த உடற்கூற்றுப் பரிசோதனையைச் செய்தவர் மருத்துவர் ஹக். சிறுமியின் சிறுநீரகங்கள் இரண்டும் 'ஏதோவொரு காரணத்துக்காக' குறித்த மருத்துவமனையில் அகற்றப்பட்டு விட்டன என்பதே உண்மை. ஆனால் அதை மறைக்கவே இப்படி திசைதிருப்பலான உடற்கூற்றுப்பரிசோதனை அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளனர் என்று பெற்றோர் வாதிடுகின்றனர். அதைவிட அந்தச்சிறுமி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது அவளுக்கு ஒரு சிறுநீரகம் மட்டுமே இருந்ததாக பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர். ஆனால் ஆசிரி மருத்துவமனையிலும், லேடி றிட்ஜ்வே மருத்துவமனையிலும் அந்தச் சிறுமிக்கு ஆரம்பத்தில் செய்யப்பட்ட 'ஸ்கான்' அறிக்கைகளில் சிறுமிக்கு இரண்டு சிறுநீரகங்கள் இருப்பதாகவே குறிப்பிடப்பட்டுள்ளது. லேடி றிட்ஜ்வே மருத்துவமனை பணிப்பாளர் மருத்துவர் மலிக் சமரசிங்க நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் இதனை ஒப்புக்கொண்டுள்ளார். இந்த விடயம் பத்திரிகைகளில் வெளியானதையடுத்து பதில் நீதிவான் சிறுமியின் உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கை தொடர்பாக முழுமையான விசாரணை நடத்துமாறு உத்தரவிட்டுள்ளார்.

> சிறுமியின் மரணம், சாப்டரின் சாவு என்பவற்றின் சொல்லப்படும் செய்தி என்னவென்றால், இலங்கையில் பட்டப்பகலில் எவரும் கொல்லப்படலாம். மருத்துவமனைக்குச்செல்லும் குழந்தைகளின் அவயவங்கள் அகற்றப்படலாம் என்பதே.

மருத்துவர் ஹக் இவ்வாறு சர்ச்சைகளை உருவாக்குவது இதுதான் முதல் தடவை அல்ல. 2007ஆம் ஆண்டு இடம் பெற்ற ஆர்ப்பாட்டமொன்றின் போது பொலிஸாரின் தாக்குதலில் இளைஞர் ஒருவர் மரணமானார். மேற்படி இளைஞன் இரத்தக்குழாயில் ஏற்பட்ட இரத்தக்கசிவு காரணமாகவே உயிரிழந்தார் என மருத்துவர் ஹக் உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையில் தெரிவித்து, அந்தச் சம்பவத்தை மூடி மறைக்க முயற்சித்திருந்தார். அப்படி அறிக்கைகளில் திருகுதாளம் செய்யும் மருத்துவர் ஹக், இந்தச் சிறுமியின் சிறுநீரகங்கள் இரண்டும் அகற்றப்பட்ட விடயத்தில் தவறான அறிக்கை கொடுத்ததோடாவது திருந்தியிருக்கலாம். ஆனால் அவர் திருந்தவில்லை என்பதையே பிரபல வர்த்தகரான தினேஷ் சாப்டரின் உடற்கூற்றுப் பரிசோதனையிலும் காண்பித்துள்ளார்.

வர்த்தகர் தினேஷ் சாப்டரின் கழுத்து தசை நார் நெரிக்கப்பட்டதாலேயே உயிரிழப்பு நேர்ந்ததாக டிசெம்பர் 16ஆம் திகதி சமர்ப்பித்த உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையில் மருத்துவர் ஹக் தெரிவித்திருந்தார். ஆனால் ஜனவரி மாதம் சமர்ப்பித்த அறிக்கையிலோ, அதனை மறுதலித்து 'தினேஷ் சாப்டர் சயனைட் உட்கொண்டதாலேயே மரணமடைந்ததார்'என மருத்துவர் ஹக் தெரிவித்திருந்தார். இதனையடுத்து நீதிபதி ரஜிந்த ஜெயசூரிய ஒரு குழுவை நியமித்து உண்மையைக் கண்டறியுமாறு உத்தரவிட்டிருந்தார்.

தினேஷ் சாப்டர் நிதிமோசடியினால் பாதிக்கப்பட்டிருந்தார். மோசடி மூலம் பறிபோன பணத்துக்கு என்ன நடந்தது என்று வழக்கு விசாரணைகள் ஆரம்பமாக முன்னரே சாப்டர் மர்ம முறையில் உயிரிழந்திருந்தார். அதனால் அந்ட்ய்ஹ வழக்கு தொடங்கப்படுவதற்கு முன்னராகவே மூடப்பட்டும் விட்டது. இதன்போதே மருத்துவர் ஹக், முன்னுக்குப் பின் முரணான உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கைகளை கொடுத்து எல்லோரையும் குழப்பியிருந்தார்.

ஏற்கனவே சாப்டரின் இலங்கை மருத்துவசபையின் தொழில்சார் ஒழுங்குபடுத்தல் குழு மருத்துவர் ஹக்கின் பதிவையும் அவருக்கு வழங்கப்பட்டிருந்த சலுகைகளையும் 2022 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இரத்துச் செய்துவிட்டது. ஆனால் 2023 ஆம் ஆண்டு இடம்பெற்ற இரு முக்கியமான மரணங்களின் உடற்கூற்றுப் பரிசோதனையில் ஹக் இப்போது சிக்கியுள்ளார்.

2022 ஜனவரியில் கொழும்புக்கு வெளியே இடமாற்றம் செய்யப்பட்ட ஹக் அரசியல் செல்வாக்கின் காரணமாக, தொடர்ந்தும் கொழும்பிலேயே கடமையாற்றி வருகிறார். உணர்வுபூர்வமான மேற்குறித்த இரண்டு மரணங்களிலும் ஒரு சாதாரண பொதுமகனாலேயே அனுமானிக்கக்கூடிய விடயத்துக்கு எவ்வாறு தவறாக அறிக்கையிடப்பட்டது?

தனது குடும்பத்தினருடன் லண்டன் செல்ல திட்டமிட்டிருந்த வர்த்தகர் சாப்டர், விமானப் பயணத்துக்கு ஒரு சில மணித்தியாலத்துக்கு முன்னர் தற்கொலை செய்கிறார் என்பது நம்பும்படியாக இல்லை. எனவே அவரது சாவு குறித்து மருத்துவர் ஹக் மிகக்கவனமாக பரிசோதனை செய்திருக்கவேண்டும். சிறுபிள்ளை போல முதலில் கழுத்து நெரித்து மரணம் என அறிக்கையிட்டுவிட்டு, பின்னர் சயனைட் அருந்தியதால் சாவு என்று சொல்வது ஏற்புடையதல்ல. இது மருத்துவர் ஹக், உடற்கூற்றியல் பரிசோதனைக்கு பொருத்தமற்றவர் என்பதையே உறுதி செய்கின்றது. இது அவரது தொழிலின் தோல்வி மட்டுமல்ல அரசாங்கத்தின் தோல்வி,முழு நாட்டினதும் தோல்வி . அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு இவை தோல்விகள் அல்ல. தமது இழிவான நோக்கங்களை நிறைவேற்ற மருத்துவர் ஹக் போன்றோரை அதிகாரத் தரப்புகள் பயன்படுத்திக் கொள்கின்றன. சிறுமியின் மரணம், சாப்டரின் சாவு என்பவற்றில் சொல்லப்படும் செய்தி என்னவென்றால், இலங்கையில் பட்டப்பகலில் எவரும் கொல்லப்படலாம். மருத்துவமனைக்குச் செல்லும் குழந்தைகளின் அவயவங்கள் அகற்றப்படலாம் என்பதே. இந்த இரு வழக்குகளும் விசாரிக்கப்படாமல் மூடி மறைக்கப்படுவது கற்பனை செய்யமுடியாத அளவு வெட்கக்கேடான செயல். இந்த நாட்டில் எவருக்கும் பாதுகாப்பு இல்லை என்பதைத்தான் இந்த இரு சம்பவங்களும் எடுத்துக்காட்டுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஊர்ப் புதினம்

12

இராகவன்

பாகம் 2

எனக்கு அடிவயித்தைக் கலக்கிச்சுது. என்னைக் கூப்பிட வந்த பொடியனுக்குப் பின்னால 'ட' வகுப்புக்குப் போனன். அங்கை ஜெபரத்தினம் மாஸ்ரர் கோவன்னாவை மேசையில கவிட்டுப்போட்டு முதுகில சாத்திக் கொண்டிருந்தார். என்னைக் கூட்டிக்கொண்டு போனவன் "சேர்! இவர்தான் மற்றாள்" என என்னைக்காட்டினான். திரும்பிப் பார்த்தவர் கோவன்னாவை விட்டுட்டு என்னட்ட வந்தார். ஒரு கதையுமில்லை. என்னைச் சுவடோர சாத்திக் கன்னங்கன்னமாய் 'மேளம்! தாளம்! பாட்டு! 'எனச் சொல்லிச் சொல்லி மின்னினார். எனக்குக் கன்னமிரண்டும் விறைச்சுப் போச்சு. எனக்கு ஒரு பக்கந் திகைப்பாயுமிருந்தது.' நாங்கள் மேளமடிச்சுப் பாட்டுப் பாடினது உந்தாளுக்கு எப்பிடித் தெரியும்? 'உது ஆரோவொரு சீப்பிளேனின்ரை சதிவேலை தான்' எண்டு நினைச்சன். ஆனால் பயத்தில ஒண்டுங் கதைக்கேல்ல.

ஆனால் கோவன்னா என்னை மாதிரியில்ல. அவன் ஒரு துணிஞ்சகட்டை. ஜெபரத்தினம் மாஸ்ரர் அவனை மேசையில கவிட்டு வைச்சு முதுகில சாத்தேக்குள்ளேயே எகிறி எகிறி அவரின்ரை கைக்கு தடை போடப்பாத்தவன். போதாக்குறைக்கு "ஏன் சேர் அடிக்கிறியள், ஏன் சேர் அடிக்கிறியள்? " எண்டு எதிர்த்தும் கேட்டவன். அதால அண்டைக்கு என்னைவிட அவனுக்குக் கூடின சாத்துப்படி விழுந்தது. ஆனால் கோவன்னா அதோட விடேல்ல. எங்களைக் கூப்பிடவந்த பொடியனை இன்ரேவல் நேரம் போய்ப் பிடிச்சான்.

"ஏன்ரா வாத்தியிட்ட போட்டுக் குடுத்தனியோ, இண்டைக்கு உன்னைத் துலைக்காமல் விடமாட்டான்" எண்டு அவனைக் கொலறில பிடிச்சுத் தூக்கினான். "விர்றா! அம்மாவாணை நான் ஒண்டும்போட்டுக் குடுக்கேல்ல. கொமர்ஸ் பாடம் நடக்கேக்குள்ள அவர் பக்கத்து வகுப்பில பாடம் எடுத்துக் கொண்டிருந்திருக்கிறார். நீங்கள் மேளமடிச்சுப் பாட்டுப் பாடினதைக் கேட்டிருக்கிறார். வாங்கிலுக்கு மேலாலை ஏறியோடினதைக் கண்டிருக்கிறார்.

அவர் எங்கட வகுப்புக்குள்ள வந்த உடனேயே "டேய் வாங்கிலுக்கு மேலால ஒரு குண்டனும் ஒரு நெடுவலும் ஏறிப்போனாங்களே! அவங்களக் கூட்டிக்கொண்டு வா" எண்டு மட்டுந்தான் சொன்னவர். வேறயொண்டுங் கேக்கேல்லை. என்னை நம்பேல்லையெண்டால் மற்றப் பொடியளைக் கேட்டுப்பார்" எண்டு அழுதழுது சொன்னான்.

அவன் சொன்னது உண்மைதான். அவர் பாடமெடுத்துக் கொண்டிருந்த வகுப்புக்கும் 'ட' வகுப்புக்கும் ஒரு முக்காச் சுவர்த்தடுப்புத் தானிருக்கு. என்ர வளர்த்திக்கு வாங்கிலுக்கு மேலாக ஏறியோடினால் எப்படியிருக்கும்? ம்... என்ன செய்யிறது, நாங்கள் செய்ததும் பிழை தானே.


இதுபோக இன்னொரு விசயமும் ஏயெம் ஜெபரத்தினம் மாஸ்ரரைப் பற்றிச் சொல்ல இருக்கு. எல்லா வாத்திமாருக்கும் இரண்டு கண் எண்டால் ஏயெம் ஜெபரத்தினம் மாஸ்ரருக்கு நாலு கண்கள் எண்டு பொடியள் சொல்லுவாங்கள். முகத்தில இரண்டு கண்ணிருக்கிற மாதிரி அவருக்குப் பின் மண்டையிலயும் இரண்டு கண்ணிருக்கு.

(தொடரும்)






ம.லக் ஷிதா
தரம் -2
யா/மீசாலை வீரசிங்கம்
ஆரம்ப வித்தியாலயம்




S.சஜிதன்
தரம் - 5
மு.மயில்வாகனம் தமிழ்
வித்தியாலயம்



பி. சஞ்ஜேய்
தரம் - 4
பாடசாலை - யா /கொக்குவில்
இந்து ஆரம்பப் பாடசாலை



எஸ்.ஜக்ஷாயினி
தரம் -3 A
யா/ சுண்டுக்குளி மகளிர்
கல்லூரி.



# சிங்கத்தின் வெட்கம்

தவளை ஒன்று சத்தமாகக் கத்திக் கொண்டிருந்தது. அதன் குரலை முதன் முறையாகக் கேட்ட சிங்கம் "இவ்வளவு பயங்கரமாகக் குரல் கொடுக்கிறதே. கண்டிப்பாக நம்மை விட வலிமையான விலங்காகத்தான் இருக்கவேண்டும். எதற்கும் நான் கவனமாக இருந்தால் பிழைக்கலாம்." என்று நினைத்தது.

சிறிது நேரத்தில் அந்தத் தவளை கத்திக் கொண்டே அங்கு வந்தது. இதுதான் குரல் கொடுத்தது என்பதை உணர்ந்த சிங்கம், "வெறும் குரலைக் கேட்டு இவ்வளவு சிறிய விலங்கிற்கு அஞ்சினேனே" என்று வெட்கப்பட்டது.

**எதையும் பார்க்காமலோ, தீர விசாரிக்காமலோ நாமே ஒரு தீர்மானத் திற்கு வருதல் வாழ்க்கையில் குழப்பங்களை ஏற்படுத்தும்.**



# நிலா

நிலா வட்டமாக இல்லை

பௌர்ணமி நாளில், சந்திரன் சரியாக முழு வட்டமாகத் தோன்றும். ஆனால் உண்மையில் சந்திரன் ஒரு செயற்கைக்கோளைப் போல் பந்து போன்ற வட்டமானது அல்ல. அது தட்டையான உருவ அமைப்பைப் பெற்றுள்ளது. ஆனால், நீங்கள் சந்திரனைப் பார்க்கும்போது, அதன் ஒரு பகுதியை மட்டுமே பார்க்கமுடியும்.


பொதுவாக நீங்கள் சந்திரனைப் பார்த்தால், அதிகபட்சமாக அதன் மொத்த உருவத்தில் 59 சதவீதத்தை மட்டுமே உங்களால் பார்க்கமுடியும். பூமியிலிருந்து பார்க்கும் போது நிலாவின் 41 சதவீதம் பரப்பு கண்களுக்குத் தெரியாது.

சூரியன் முழு நிலவை விட 14 மடங்கு பிரகாசமாக இருக்கிறது.

சந்திர கிரகணம் ஏற்பட்டு, நிலா பூமியின் நிழலில் நுழையும்போது, அதன் மேற்பரப்பு வெப்பநிலை 500 பாரன்ஹீட் வரை குறைகிறது.

**ஆண்டு நிறைவில் கொண்டாடும் விழாக்கள்**

1. ஒரு வருடம் - காகித விழா
2. ஐந்து வருடம் - மரவிழா
3. பத்து வருடம் - தகரவிழா
4. 25 வருடம் - வெள்ளிவிழா
5. முப்பது வருடம் - முத்துவிழா
6. நாற்பது வருடம் - மாணிக்கவிழா
7. ஐம்பது வருடம் - பொன்விழா
8. அறுபது வருடம் - வைரவிழா
9. எழுபத்தைந்து வருடம்- பவளவிழா
10. எண்பது வருடம் - அமுதவிழா
11. நூறாவது வருடம் - நூற்றாண்டுவிழா



2 5 3 6 2




நீங்களும்
உங்கள் கைவண்ணங்கள்,
ஆக்கங்களை அனுப்பலாம்.
அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
05 நவம்பர் 2023



# பயணம்

சஞ்சீவி சிறுகதை

குமுதினி கலையழகன்

வாசலுக்கு இன்னும் கொஞ்சத் தூரம் தான் இருந்தது. ஆனாலுமென்னவோ யுகயுகாந்தரங்களாக அந்தச் சிறுகற்பாதை வழியே இதே துன்பத்துடன் நடந்து கொண்டிருப்பதான பிரேமை அவளுள் எழுந்தது. துன்பத்தின் தகிக்கின்ற ஓரங்களையெல்லாம் தன் கொடுங்கரங்களுள் பற்றியிருக்கின்ற அச்சம் வேறு. இன்று காலைக்குப் பிறகு வாரப்பட்டிராத கேசத்துள்ளும், கழுத்தோரங்களிலும் வியர்வை கசகசத்தது. தெருவோரப் பாரவண்டிச் சில்லினுள் எதிர்பாராமற் சிக்கிக்கொண்ட தீனமான பறவை போல இதயம் நலிந்து போயிருந்தது.

ஒவ்வொரு காலடியையும் பெயர்த்து வைப்பதற்கு அவள் மிகுந்த சிரமப் பட்டாள். பொங்கிப் பொங்கி எழுந்து கொண்டிருந்த அழுகையின் வீச்சு அவளைச் சுயவுலகப் பிரக்ஞையிலிருந்து அப்பாலே தள்ளிச் சூனியத்துள் புதைத்து விடுவதான வலிமையுடன் இருப்பதாகப்பட்டது. அழுகையைப் புறங்கையினால் அழுத்தி அழுத்தி விழுங்க முற்பட்டாள் அவள். விக்கல்கள் விரல்களின் இடை வெளியீடு தடக்கிப் பாதையோடு நீண்டிருந்த வெளிக்குள் கலந்தன.

ஒரு சீரான கதியுடன், அவள் முன்னே ஸ்ட்ரெச்சரைத் தள்ளிக் கொண்டு நடந்து கொண்டிருந்த அந்தப் பையனுக்கு அவள் நிலை புரிந்திருக்க வேண்டும். ஒன்றின் நிழலை இன்னொன்று தாங்கியபடி நெடிதுயர்ந்து பாதையின் இரு மருங்கும் நீண்டு கிடக்கின்ற அந்த வைத்தியசாலைக் கட்டடங்களை இலக்கின்றி வெறித்தவாறு அவன் நடந்து கொண்டிருந்தான். அவளின் தவிப்பும் கண்ணீரும் அவனையும் ஆழப் பிழிந்திருக்கவேண்டும். ஸ்ட்ரெச்சரைச் சற்றே தாமதப்படுத்தி "அக்கா………" என்றபடி சற்றே அவள் நடக்கும் பக்கமாகத் தலையைத் திருப்பினான். அவன் குரல் அவளது உலக நிகழ்வுகளில் புதைந்திருப்பது தெரிந்தது.

அவள் அவசரமாகக் கண்களைத் துடைத்தபடி திடுக்குற்றவளாக முன்னும் பின்னும் பார்த்தாள். தெரிந்தவர்கள் யாராவது தன்னை அடையாளம் கண்டு விடக் கூடுமோ என்று நினைவுள் படிந்திருந்த எண்ணம் சட்டெனப் பீதியாக விரவிற்று. நெஞ்சில் கண்வரை நீண்டிருந்த பாதையின் வீச்சினுள் எவரும் தென்படாதது சற்றே அமைதியைத் தர அவனை நோக்கினாள். எதற்காக அவன் அழைத்தான் என்ற கேள்வி முகத்திற் படர்ந்தது.

"அக்கா….. அந்த வளைவு தாண்ட மெயின் றோட்டுக்குப் போற வாசல் வரும்….. அந்த வளைவு வரைக்கும் நான் வர முடியும். வாசல்ல ஆரும் தெரிஞ்ச ஆக்கள். நீங்கள் வார்ட்டில பிள்ளையை வைச்சிருக்கேக்கை இருந்த ஆக்கள் ஆரும் நிக்கலாம். உங்களில் வித்தியாசம் தெரியாத படி நீங்கள் உங்களை வைச்சிருக்க வேணும் அக்கா ………" தான் சொல்ல விரும்பியது, தன்னாற் சொல்ல முடிந்தது அவ்வளவுதான் என்பது போல் ஸ்ட்ரெச்சரைத் தள்ளத் தொடங்கினான்.

அவனைக், கடந்து போன அந்தப் பத்து நாள்களிலும் மருத்துவமனையின் ஏதேனுமொரு பகுதியில் எப்போதாவது கண்டிருந்ததாக அவளுக்கு ஞாபகமில்லை. ஒரே மாதிரியான வெள்ளுடைகளில், ஸ்ட்ரெச்சரைத் தள்ளியபடி மருத்துவமனைக் கட்டடங்களிடையே நடக்கின்ற எத்தனையோ பேர்களில் அவனையும் எப்போதாவது அவள் சந்தித்திருக்கக் கூடும். ஆனாலும் புற உலகம் பற்றிய பிரக்ஞையே இல்லாமல் ரமணா கண்விழிக்கப் போகின்ற , அவனது "அம்மா…" என்கின்ற குழந்தைக் குரல் ஒலிக்கப்போகின்ற தருணத்திற்காக தன் உயிரை விழிகளிற் தேக்கிக் காத்திருந்தவளுக்கு அந்தப் பையனை முன்னர் அறிந்திருக்க நியாயமில்லை.

நேரம் பன்னிரண்டு மணியைக் கடந்து விட்டிருக்கவேண்டும். மதியநேரப் பார்வையாளர்களால் வராண்டாக்களும் வார்ட்டுகளும் நிறையத் தொடங்கியிருந்தன. வழமையான நடைமுறைகள் முடிந்துவிட்டன என்பதாகத் தாதி சொன்ன சிறிது நேரத்தில் ரமணாவின் ஸ்ட்ரெச்சரும் வார்ட்டின் அப்பாலே சற்றுத் தள்ளியிருந்த வராண்டாவுக்குள் கொண்டு வந்து விடப்பட்டிருந்தது. அவள் சுவரோரமாக இருந்த ஸ்ட்ரெச்சரினுள் படுத்திருந்த ரமணாவின்விழிகளை வெறித்தபடி எவ்வளவு நேரம் நின்றிருந்தாளோ! பாதையைக் கடந்து போவோரும் வருவோரும் தன்னைக் கவனிக்கக்கூடும் என்ற நினைப்பில்லாதவள் போலச் சிலையாக உறைந்திருந்தாள்அவள். "என்ன புள்ள கனநேரமாய் நிக்கிறாய்…? வீட்டுக்காரருக்கு அறிவிச்சாச்சோ..? " காதுள் விழுந்த கேள்வியில் திடுக்குற்று நிமிர்ந்தாள்.

"ஓ… இப்ப வருவினம்…"

துன்பத்தின் அடர்வுகள் இடையிடையே படிந்து இருகூறாக்கப்பட்டது போலிருந்தது அவள் குரல். கேட்டவர்கள் போய்விட்டிருந்தார்கள். அவள் சொன்ன வார்த்தைகளிலிருந்த பொய்மை அவளைத் தீயாகித் தகித்தது.

தன் ஒரேமகளின் துணையிழந்த வாழ்வை எண்ணி விதியை நொந்து கொண்டிருக்கின்ற, தோல்சுருங்கி விழிகளின் ஒளி மங்கிப் போன அவளின் தாயா? அல்லது அந்த முதிய நிழலினுள் ஒடுங்கியபடி தங்கள் அம்மா, அண்ணனைக் குணப்படுத்திக் கொண்டு வீடு வருவாள் என்று காத்திருக்கின்ற அவளது இரு சின்ன மகள்களா? யாரால் அவள் பொருட்டு அங்கு வரமுடியும்? துன்பம் பாறையாகி அவளின் நலிந்த இதயத்தை நெருக்கி நசிப்பதாகத் தோன்றிற்று. அந்தக் கணத்தில் அவளின் மூடிய விழிகள் தாண்டிக் கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது.

"அக்கா…" ஒரு விதமான இரங்கும் தொனியுள்ள அழைப்புக்கு அவள் விழிகளைத் திறந்தபோது இவன் அங்கு நின்றிருந்தான்.

"கனநேரமாய் நிக்கிறியள் அக்கா… ஆராவது வருவினமோ. வீட்டையிருந்து?" வார்த்தையெழாமல் அவள் தவிப்பது அவனுக்கு அவள் நிலையைக் கோடியிட்டிருக்க வேண்டும்.

"எங்க உங்கட வீடு…?."

அவள் சொன்னாள். அவன் மனத்துள் ஏதோ கணிப்பு ஓடிற்று.

"எப்பிடியும் ரெண்டுமணித்தியாலப்பயணம்…. என்னத்தில் போகப் போறியள்…?

தன்னுள் தானே திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டிருந்து. விடை அறியாது தவித்த கேள்வியை அவனும் கேட்டபோது அவள் கண்கள் நிரம்பின.

"ஓட்டோவில் போறதெண்டாலும் வழமையான றேற்றைவிடக் கூடத்தான் கேப்பாங்கள்…. பத்தாயிரம், பன்னெண்டாயிரம் வரும்…" அவன் தனக்குத் தானே பேசுபவனாகச் சொன்னான். அவள் கைப்பையை எடுத்து விரித்தாள். கசங்கியிருந்த ஒரு ஐம்பது ரூபாத்தாளும் ஒரு இருபது ரூபாத்தாளும் தவிர வெறுமையாயிருந்தது கைப்பை. பிறகு நலிந்த குரலில் சொன்னாள்

" என்ரைஅம்மாவும் இவனுக்குக் கீழை ரெண்டு மகள்களுந் தான்….இடம் பெயர்ந்துதான் இருக்கிறம்.. இப்ப பஸ்ஸிலதான் போகவேணும்… இல்லாட்டி நடந்து…" அழுகைக்கிடையேயான அவளின் முறிந்த வார்த்தைகள் அவனை மௌனமாக் சிலிர்த்தன. சிறிது நேர மௌனத்துக்குப் பின் அவளுக்கு மட்டும் கேட்கக் கூடியதான ஆழ்ந்த தொனியில் அவன் சொன்னான்.. "வாசல் வரைக்கும் நான் ஸ்ரெச்சரில் கொண்டுவாறன். உங்கட இடத்துக்குப் போற பஸ் இரண்டரைக்கு வரும்.. பின்பக்கப் பாதையால போறது சுகம்….. சனம் கொஞ்சங் குறையட்டும்…" அவளின் துன்பங்களின் பரிமாணத்தை ஆத்மார்த்தமாய் உணர்ந்திருப்பதை அவன் முகம் சொல்லிற்று.

அவள் வார்த்தையெழாமல் நின்றிருந்தாள். இடையீடின்றிப் பிரவாகித்துக் கொண்டிருந்த கண்ணீரில் நன்றி தெரிந்தது. பையன் ஸ்ட்ரெச்சரின் வேகத்தைக் குறைத்து நிறுத்துவது தெரிந்தது. வளைவு வந்துவிட்டிருந்தது. சற்றே தூரத்தில் நின்றிருந்த காவலாளி தவிர எவரும் தென்படாதது பதற்றம் தணித்தது. அந்தப் பொழுது பொதுவாகவே அமைதியானதுதான். நோயாளிகளைப் பார்க்க வருகின்றவர்கள் மதியம் நிலவுகின்ற பரபரப்பையும் சந்தடியையும் தம்மோடே துடைத்து எடுத்துக் கொண்டு போகின்றாற் போன்ற அமைதி.

அவள் கையில் வைத்திருந்த தோற்பையை நிலத்தில் வைத்தாள். ஸ்ட்ரெச்சரின் நடு அரைப் பாகத்துக்கும் குறைவான இடத்துள் களைத்தவன் போல ரமணா படுத்திருந்தான். தளர்ந்து சோர்கின்ற நடையுடன் அவள் ஸ்ட்ரெச்சரை நெருங்கினாள். அவன் மீது போர்த்தியிருந்த துவாயை மெல்ல விலக்கினாள்.

மென்மஞ்சட் தன்மையுடன் வெளிறியிருந்த முகத்தில் ஒரு பனிப்பூவின் மெல்லுறக்கம் போல கடுமையான இமைப் போர்வையுள் விழிகள் மூடியிருந்தன. தாய்மையின் மகத்துவமான உணர்வுகளை அவளில் அறிமுகஞ் செய்த சின்ன மகன் உயிரின் தாபமாக சொல்லொணாத் தவிப்பு நிறைய அவள் விழிகள் பெருகிற்று.

"அக்கா…ரெண்டரைக்கு பஸ் வரும்…" அவளின் முன்னே காத்திருக்கின்ற கடமையை ஒரு இரக்கத்துடன் நினைவுபடுத்துவதாயிருந்தது அவன் குரல். அவள் அவசரமாக விழிகளைத் துடைத்துக் கொண்டான். ரமணாவை வாரியெடுத்துத் தோளில் சாய்த்துக் கொண்டாள். துவாயால் கழுத்திலிருந்து பாதம் வரை போர்த்தாள். நிலத்திலிருந்த அவளது பையை எடுத்துக் கொடுக்கும்போது அவனது கண்களிலும் நீர் படலமிட்டிருந்தது தெரிந்தது. அவனுக்கு அவள் நன்றி சொல்லத்தான் வேண்டும். எத்துணைப் பெரிய உதவி! அவள் நிலையறிந்து செய்த உதவி விதிகளையும் நடைமுறைகளையும் வழக்கங்களையும் அவற்றின் எல்லை தாண்டி மீறுகின்றதான அவளது "குற்றத்துக்கு" அவனும் உடந்தையாயிருந்திருக்கிறான். அவளின் நெஞ்சுள் துன்பத்தில் கரைந்து நன்றியுணர்வு கண்ணீரிற் தெரிந்தது. ஒரே கணத்தில் பலவாக எழுந்து உருவழிந்து போகின்ற வார்த்தைகளைக் கோர்க்க முடியாமல் தடுமாறினாள் அவள்.

"பஸ் வந்திடும் அக்கா…." அவளின் உணர்வுகளைப் புரிந்து கொண்டவன் போல் இதமான குரலில் அவன் சொன்னான் "நாலு நாலரைக்குள்ள உங்கட இடத்துக்குப் போய்ச் சேர்ந்திடலாம் அக்கா.." வாசலை நோக்கி யாரோ வருவது தெரிந்தது. தாமதிப்பது நல்லதல்ல. அவள் மௌனமாக விடைபெற்று வாசற்பக்கமாய் நடக்கத் தொடங்கினாள். முதுகின் பின்னே ஸ்ட்ரெச்சரின் கடகடக்கும் ஒலி தேய்ந்து மறைந்து கொண்டிருந்தது. வாசலைக் கடந்த போது பிரதான வீதியில் குறுக்கும் நெடுக்குமாகப் பிரயாணிக்கின்ற மனிதர்கள் அவள் கவனத்தில் விழாமல் விழிகளில் தடக்கினார்கள். ரமணா வழமையை விடக் கனப்பதாகத் தோன்றிற்று. அல்லது ஏமாற்றங்களும் துயரங்களும் கீலங்கீலாய்க் கிழித்திருந்த தாங்கும் வலுவற்றுப் போன மனத்துக்குத் தான் அத்துணைப் பாரமோ! சற்றே தூரத்தில் தெரிந்த பஸ் தரிப்பிடம் நோக்கி நடக்கத் தொடங்கினாள். ஒவ்வொரு அடிக்கும் நடை கெஞ்சிற்று. பயணம் பற்றிய அச்சம் பதற்றத்தை அதிகரித்தது. இந்த அச்சமும் துயரமும் தாங்கித் தன்னால் இரண்டு மணிநேரம் பயணத்தைத் தொடர முடியுமாவெனக் கிளர்ந்த சந்தேகம் அவளைத் தளர்வுறச் செய்தது.

பஸ் தரிப்பிடம் எவருமில்லாத தனிமையுள் அமிழ்ந்திருந்தது. அவள் அந்தச் சிறிய கட்டடத்தின் ஓரமாய்ச் சாய்ந்து நின்று கொண்டாள். இன்னும் சில நிமிடங்களுள் பஸ் வந்துவிடலாம். எவ்வளவு விரைவாக வந்துவிட்டாலும் நல்லது. யாரேனும் தெரிந்தவர்கள் கண்டுவிடக்கூடும் என்ற எண்ணத்தால் எழுகின்ற கால்கள் நிலத்தில் நிலை கொள்ளாத பதற்றம் சற்றேனும் தணியக் கூடும். அச்சத்தீயின் தகிப்பிலிருந்து விலகி விட இயலும்.

ரமணாவின் முதுகை விரல்களால் மெல்ல வருடினாள். எத்துணை அருமையான கொடையாக இருந்தான் அவன்! ஒரு பெண்ணுக்குள் தாயை மலர்த்திய நேரங்களை தன்னோடு அழைத்துவந்து அவளுக்கு அறிமுகஞ் செய்தவன் அவன். அவள் கண்கள் ஊற்றெடுத்தன."காணாமற்போன" அவள் கணவனின் சின்ன வார்ப்பாய் அவன் இருப்பதாயே அறிந்தவர்கள் சொல்வதுண்டு.

(மறுபக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணம்

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூச்சலும் கும்மாளமுமாக மினிபஸ் ஒன்று அவளைக் கடந்து சென்றது. பாடசாலைச் சேவையாக இருக்கவேண்டும். சிறுவர்கள் உலகம் எத்துணை விநோதமான இனிமை மிக்கது! உலகின் மாசு படியாத சின்னத் தேவதைகளும் தேவர்களும். இயற்கை எதன் பொருட்டு அவர்களிலும் நோயைச் சபித்து விடுகின்றது கொடூரமாக.....? அவள் ஏக்கமாகத் தொலைவில் மறையும் மினி பஸ்ஸில் பார்வையைப் பதித்திருந்தாள். ரமணாவின் வயதுச் சிறுவர்கள் தான் அவர்களும். தூரத்தில் பஸ் வருவது தெரிந்தது. துவாயைச் சரி செய்து ரமணாவை ஏறக்குறைய முழுமையாகப் போர்த்தினாள். அவளுக்குரிய பஸ்தான். சனக்கூட்டம் அதிகமாயிருந்தது. அவள் ஏறும்போது நடத்துநரின் குரல் உயர்ந்தது..." வருத்தக்காறப்பிள்ளையோட ஒரு அம்மா வாறா.. இடம் குடுங்கோ...."

அவளுள் திகில் படர்ந்தது. யாராவது இடங்கொடுத்தாலுங் கூட அவள் உட்காரமுடியாது. யாரோ "உட்காரலாம்" என்பது போலத் தமது சீற்றில் விலகி உட்கார்ந்தபோதும் அதைக் கவனியாதவளாய் பின்பக்கக் கதவுக்கும் சீற்றுக்கும் இடையே இருந்த இடைவெளியில் அவள் தன்னைச் செருகிக் கொண்டாள். கால்கள் கெஞ்சினாலும் உட்காரமுடியாது. நேரம் நகர நகர இறுகிப் போகலாம். படலமிடத் தொடங்கிய விழிகளைக் கண்ணாடி யன்னலின் அப்பாலே தெரிந்த வெளியுள் புதைத்தாள். இன்றைய நாளின் கடந்து போன கணங்களெல்லாம் ஒரு கனவாக இருந்து விடக் கூடாதா என்று விநோதமான ஏக்கம் பிறந்தது அவளுள். நாலாபுறமும் மணல் மாரி பொழிகின்ற உக்கிரப் பெருவெளியுள் தான் மட்டும் தனித்து நிற்பதான பிரமையில் மனது நலிந்து சிதைந்தது. வறுமை எத்தனை பரிமாணங்களில் வாழ்வை விழுங்கி மனிதர்களைச் சக்கையாகத் துப்பி விடுகிறது! பஸ்ஸின் வேகத்தில் குலைகின்ற ரமணாவின் போர்வையை அடிக்கடி சரிசெய்ய வேண்டியிருந்தது. அவனைத் தாங்கியிருந்த கை விறைத்து மரத்துப் போனது போலிருந்தது.

"புள்ள இத்லை இரன். உன்னைத்தான்...." வயதான பெண்ணொருத்தி அவள் கைகளில் தட்டிச்சொன்னாள்.

"இல்லையம்மா.... இருந்தா இவன்ர நித்திரை குழம்பிடும்... அவள் குரல் தடுமாறிற்று. இரண்டு மூண்டு நாளா நல்ல நித்திரையும் கொள்ளேல்ல ஆஸ்பத்திரியில்..." ஒரு விதமான பதற்றம் குரலில் நிறைந்திருந்தது.

"ஏன்கடுமையான வருத்தமோ....?"

"ஓம் அம்மா.. காய்ச்சல்.. பத்து நாளா ... தலையிடியும்..."

"இப்ப எப்பிடிச் சுகமோ..."

"ம்... வீட்டை போறம்...."

"பொடியின்ரை முகத்தில தெளிவைக் காணயில்லை......"

மூதாட்டி யோசனையாய் முணுமுணுத்தாள்.

"இன்னும் சாப்பிடத்தொடங்கேல்லை..." அவள் அவசரமாக, மூதாட்டியின் யோசனையைத் தொடர அனுமதிக்காதவளாகச் சொன்னாள். மேலும் உரையாடலைத் தொடர விரும்பாதவள் போல யன்னலின் வெளியே பார்வையைத் திருப்பினாள். வெற்றுவெளியில் கொடூர வெயிலில் துவண்டு நின்றிருந்தன சிறுமரங்கள்.

யார் யாரோ நிறுத்தங்களில் ஏறியும் இறங்கியும் கொண்டிருந்தார்கள். அவள் சூழல் பற்றிய எந்தப் பிரக்ஞையும் இல்லாதவளாகத் துவண்டிருந்தாள். இடையே யாரோ "ஆஸ்பத்திரி மணம்...." என்பதாகச் சொன்னபோது இவள் திரும்பிப் பார்த்தாள். பட்டுப்பாவாடையும் சட்டையுமாக அழகிய சிறுமி. இவள் பக்கமாக மூக்கைச் சுழித்துக் கொண்டு தாயின் கைகளைப் பிடித்தபடி நின்றிருந்தது. இவள் மேலும் தன்னை அந்தக் குறுகிய இடத்துள் சுருக்கிக்கொண்டாள். காற்றின் வாசனையை எவரும் இலகுவில் அடையாளம் கண்டு விடுகிறார்கள். கழுத்தோரங்கள் வியர்வையில் கசகசத்தன. கை இனிமேலும் தன்னால் சுமக்க முடியாது என்பதாய் மரத்துப் போனதாகத் தோன்றிற்று. இடது கையிலிருந்து வலது கைக்கு ரமணாவை மாற்றினால் நல்லது போலிருந்தது. மெல்ல் இடது கையை மாற்ற எத்தனித்த போது துல்லியமாய் உணர முடிந்திருந்த ரமணாவின் மாற்றம் அவளைத் திடுக்குறச் செய்தது. அவளின் கரங்கள் தோற்று விடும் படியான இறுக்கம். அவளுள் அச்சம் கிளர்ந்து கிளர்ந்து படர்ந்தது. இந்தப் பயணத்தின் முடிவுவரை அவளால் தன் முயற்சியில் தோற்று விடாதிருக்க இயலாது என்று தோன்றிற்று. கால்கள் தளர்ந்து துவள யன்னலில் சாய்ந்து கொண்டாள். இனித் தன்னால் எதுவுமே முடியாது என்பதான ஆற்றாமையுள் தான் புதைந்து கொண்டிருப்பதாய் உணர்ந்தாள்.

"அரசடி இறங்குறவை வாசலுக்கு வாருங்கோ...." நடத்துநரின் குரலில் அவளுள் திடீரென ஒரு விழிப்பு ஓடிற்று. யுகயுகாந்திரங்களாக தொடர்ந்து கொண்டிருந்த பயணம்..... முடிவடையப் போகிறதா? கண்களை விழித்து யன்னலின் வெளியே பார்வையைச் செலுத்தினாள். அவளுக்குப் பரிச்சயமான தெருவோரக் கட்டடங்கள். தூசி படிந்த மரங்கள், மெல்ல நகர்ந்து வாசலருகே வந்தாள். கையில் தயாராக வைத்திருந்த சில்லறைகளையும் தாளையும் நடத்துநரிடம்கொடுத்தாள்.

"அரை டிக்கெட் தானே...? "அவரின் பார்வை சந்தேகமாய் ரமணாவை ஏறிட, அவள் விழிகள் பொங்காதிருக்குமாறு தன்னைக் கட்டுப்படுத்த மிகுந்த பிரயத்தனப்பட வேண்டியிருந்தது.

அந்த இறக்கத்தில் அவளோடு இறங்குவதற்குப் பயணிகள் எவரும் இருக்கவில்லை. அவள் மெதுவாய் எவரிலும் இடித்துக்கொள்ளாமல் மிக மெதுவாக இறங்கினாள். ரமணாவை வயிற்றிற் சுமந்த நாள்களிலும் அவள் இப்படித்தான் மிகக் கவனமாக இருந்திருக்கின்றாள்.

பஸ் புறப்பட்டுப் போய்விட எஞ்சியிருந்த வீதியின் வெறுமையின் ஒரு பாகமாத் தான் நடப்பதாக அவளுக்குத் தோன்றிற்று. இரக்கமற்றுத் தொடர்கின்ற கோடை கால வெயில் விரிப்பினுள் சிறுமரங்கள் மிக வாடியிருந்தன தெருவோரமாக.

கடந்து போன நாள்களினதும் பக்கமாகத் தொடர்கின்ற நேரங்களினதும் துன்பம் தாங்கி அடுத்த பொழுது அவளுடன் எவ்வாறு இணைந்து கொள்ளப்போகின்றது என்பதான மலைப்பான துயர் எழுந்தது அவளுள். கால்கள் நடக்கும் வலுவை அறவே இழந்தாற் போலச் சோர்ந்து விட, அருகிருந்த பெயர் தெரியாத மரத்தின் கீழ் தளர்ந்து அமர்ந்தாள் அவள். வீதியின் வெறுமை அவளை மையமாக்கி விரிந்து படர்ந்தது. ரமணாவைப் போர்த்தியிருந்த துவாயை எடுத்து நிலத்தில் விரித்தாள். மெல்லக் குனிந்து அவனைத் தன் தோளிலிருந்து விடுவித்துச் சரித்துத் துவாயில் அவனைப் படுத்தினாள். கை கால்களை நிமிர்த்தி வைக்க முடியாது எனப்பட்டது. குனிந்து ஆதுரத்துடன்அவன் முகத்தை வருடினாள். எப்போதும் போலவே சின்ன உதடுகளின் ஓரத்தில் இப்போதும் குறும்பு சுழித்திருப்பதாகத் தோன்றிற்று.

ஆத்மாவின் ஆழத்துள்ளிருந்து எழுவதான துயரில் அவள் வயிறு குழைந்தது. உயிரற்றுப் போன அவள் உயிரின் கொடி அனலுள் தகிவதாக அவள் உடம்பு நலிந்தது. 'நீ போட்டா யெண்டு சொல்லி, ஊரறிய உன்னை வீட்டை கொண்டு வாறதுக்குக் கூட முடியாமல் இருக்கிறனே..." அவளின் தீனமான அழும் குரலில் எழுந்த துயர வார்த்தைகள் உருவழிந்து உருவழிந்து அந்த வெளியிற் கரைந்து கொண்டிருந்தன.



# முன்றில் 22

○ இயல்வாணன்



## பேராசிரியர் எம்.ஏ.நுஃமான்

ஒரு கவிஞராக, எழுத்தாளராக, விமர்சகராக, மொழிபெயர்ப்பாளராக, ஆய்வாளராக, இதழியலாளராக, கால மாற்றத்துக்கேற்ப நவீன தமிழ் இலக்கணத்தை உருவாக்கியவராக பேராசிரியர் எம்.ஏ. நுஃமானை நாம் அடையாளங் காணலாம். தமிழிலக்கியத்துக்கு காத்திரமான பங்களிப்பை வழங்கியதோடல்லாமல் வீச்சுமிக்க மாணவர்களை உருவாக்கியவராகவும் அவர் மிளிர்கிறார்.

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்திலுள்ள கல்முனைக்குடியில் அரபுமொழி ஆசிரியராகவும் மதப்பணியாளராகவும் விளங்கிய மக்புல் ஆலிமின் மகனாகப் பிறந்தவர் எம்.ஏ.நுஃமான். இவர் தனது ஆரம்பக்கல்வியை கல்முனைக்குடி அரசினர் ஆண்கள் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை கல்முனை வெஸ்லிக் கல்லூரியிலும் நிறைவு செய்தார்.

ஆசிரியராகப் பணியை ஆரம்பித்த இவர் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் ஆசிரியர் பயிற்சியைப் பெற்றுக் கொண்டார். 1973இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் கொழும்பு வளாகத்தில் மொழியியல் துறையில் கலைமாணி பட்டப்படிப்பை மேற்கொண்டார். 1982 இல் முதுகலைமாணி பட்டப்படிப்பை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் மேற்கொண்டு பட்டம் பெற்றார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மொழியியல்துறையில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்.

ஆசிரியராக 15 ஆண்டுகள் பணியாற்றிய இவர் 1976 ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை விரிவுரையாளராகவும், மொழியியல் விரிவுரையாளராகவும் பணியாற்றினார். 1991 இல் பேராதனை பல்கலைக்கழகத்தில் முதுநிலை விரிவுரையாளராகி, பேராசிரியராகப் பணியுயர்ந்தார். தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், மலேயா பல்கலைக்கழகம் ஆகியவற்றில் வருகைதரு விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளார். சர்வதேச இனவியல் ஆய்வுமையத்தின் இயக்குநர்களில் ஒருவராகவும் பணியாற்றியுள்ளார்.

பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தை வடிவமைத்தல், அரசாங்க பாடநூல், ஆசிரிய வழிகாட்டி உருவாக்கல், மதிப்பீடு ஆகியவற்றிலும் இவர் தனது வாண்மைத்துவப் பங்களிப்பை வழங்கியதுடன் பல ஆய்வு மாநாடுகளில் பங்குபற்றி ஆய்வுக் கட்டுரைகளையும் சமர்ப்பித்துள்ளார்.

தனது 16 ஆவது வயதில் எழுத்துலகில் பிரவேசித்த இவர் கவிஞர் நீலாவணன் மூலமாக இலக்கியத்தின்பால் ஈர்க்கப்பட்டார். இவரது முதல் கவிதை வீரகேசரியில் வெளிவந்தது. இவரது கவிதைகள் தாத்தாமாரும் பேரர்களும் நெடுங்கவிதை (1977), அழியா நிழல்கள் (1982), மழை நாள்கள் வரும்(1983) ஆகிய நூல்களாக வெளிவந்துள்ளன. அ.யேசுராசாவுடன் இணைந்து பதினொரு ஈழத்துக் கவிஞர்கள்(1984) நூலையும் தொகுத்து வெளியிட்டுள்ளார். சிறுகதைகளையும் இவர் எழுதியுள்ளார். பலஸ்தீனக் கவிதைகள்(1981 மற்றும் 2000), மொகமூத் தர்விஸ் கவிதைகள் (2008), காற்றில் மிதக்கும் சொற்கள்(மலாய் மொழிக் கவிதைகள்), இரவின் குரல்(இந்தோனேசிய மொழிக் கவிதைகள்), நம் அயலவர் சிங்களச் சிறுகதைகள் (காமன் விக்கிரமசிங்கவுடன் இணைந்து 2006) ஆகிய மொழிபெயர்ப்பு நூல்களையும் வெளியிட்டுள்ளார். இவரது அடிப்படைத் தமிழ் இலக்கணம் (1999) நூல் உயர்தரத்தில் தமிழ் கற்கும் மாணவர்களுக்கு உதவும் துணைநூலாக நீண்டகாலமாக இருந்து வருகிறது. மரபுவழி இலக்கணக் கருத்துகளோடு நவீன மொழியியற் கருத்துகளையும் இணைத்து தற்கால தமிழ்மொழி இலக்கணத்தை எடுத்து விளக்குவதாக இந் நூல் அமைந்துள்ளது.

இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம் (பேராசிரியர் சி.மௌனகுரு, சித்திரலேகா மௌனகுருவுடன் இணைந்து எழுதியது 1979), பாரதியின் மொழிச் சிந்தனைகள் ஒரு மொழியியல் நோக்கு(1984), 19ஆம் நூற்றாண்டின் நவீன உரைநடை இயக்கமும் ஆறுமுக நாவலரும்;, திறனாய்வுக் கட்டுரைகள்(1985), மார்க்சியமும் இலக்கியத் திறனாய்வும்(1987), ஆரம்ப இடைநிலை வகுப்புகளில் தமிழ்மொழி கற்பித்தல்(2002), மொழியும் இலக்கியமும்(2006), சமூக யதார்த்தமும் இலக்கியப் புனைவும்(2017), A Constructive Grammer of Tamil and Sinhala Nown Phrase (2003), Srilankan Muslims Ethnic Identity within Cultural Diversity (2007), Understanding Muslim Identity (2004) முதலான நூல்களையும் இவர் எழுதியுள்ளார்.







மஹாகவி உருத்திரமூர்த்தியுடன் இணைந்து 1969-70 காலப்பகுதியில் கவிஞன் என்ற பெயரில் காலாண்டிதழினை வெளிக்கொணர்ந்தார். 4 இதழ்களே வெளிவந்தன. வாசகர் சங்கம் என்ற பதிப்பகத்தின் மூலம் தரமான நூல்களையும் வெளியிட்டுள்ளார். மஹாகவியின் ஆறு காவியங்கள்(2008) உள்ளிட்ட மஹாகவியின் படைப்புகளையும் இவர் தொகுத்துள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றியவேளை கவிதாநிகழ்வு என்ற நிகழ்ச்சியை இவர் நடத்தியமையும் குறிப்பிடத்தக்கது. 2011இல் தமிழ்நாட்டில் இவரது தமிழ்பணியைக் கௌரவித்து விளக்கு விருது வழங்கப்பட்டது. தமிழுக்கு காத்திரமான பங்களிப்பை வழங்கிய நுஃமான் ஆரம்பத்தில் மார்க்ஸிய சிந்தனை அடிப்படையிலான இலக்கிய நோக்கினைக் கொண்டிருந்தாராயினும் பின்னர் கல்வித் துறைக்குரிய புறவயமான ஆய்வுமுறையினையே பயன்படுத்தினார். இவரது மொழியியல் ஆய்வுகள், கல்வித் துறை ஆய்வுகள் முக்கியமானவை. 79வயது நிறைவைக் கண்டுள்ள இவர் தொடர்ந்தும் தனது புலமைத்துவ ஆற்றலை தமிழுலகுக்குத் தரவேண்டும் என விரும்புகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி

05 நவம்பர் 2023



# யாழ்ப்பாணத்தில் நாகரும் தமிழும் பௌத்தமும்

○ பேராசிரியர் சி. பத்மநாதன்

## அறிமுகம்

இலங்கையில் கிமு. பத்தாம் நூற்றாண்டு முதலாகப் பரவிய பெருங்கற்காலப் பண்பாடு நாகரோடு தொடர்புடையது. அந்தப் பண்பாட்டினை நாகர் பரப்பினார்கள் என்பதையும் அவர்கள் தமிழ் மொழி பேசியவர்கள் என்பதையும் அந்தப்பண்பாட்டு மக்களின் ஈமத் தலங்கள் சிலவற்றிலுள்ள ஈமக்கல்லறைகளின் கல்வெட்டுகளினால் அறிய முடி கின்றது.

எழுத்தின் பயன்பாடு அறிமுகமாகியதும் நாகர் ஈமக் கல்லறைகளிலே சொற்களையும் இரு வசனங்களையும் ஒரு கிரியாபூர்வமான முறையிலே பதிவுசெய்தனர். அவை நாகரைப் பற்றியவை ,தமிழ் மொழியில் எழுதப்பட்டவை தமிழ்ப் பிராமி வடிவங்களில் எழுதப்பட்டவை. கல்லறைகளில் மட்டுமன்றி ஈமத் தாழிகளிலும் அவற்றைப் பதிவு செய்தனர். பதவிகம்பொலவிற் காணப்படும் பிரமாண்டமான பள்ளிப் படை (Dolmen), இவ்வன்கட்டுவவிலுள்ள கல்லறைகள், அங்குள்ள ஈமத்தாழிகள், அவற்றிலே படையல்களை வைப்பதற்குப் பயன்படுத்திய பல்வேறு வகையான மட்கலன்கள் ஆகியன இந்த வழமைக்குரிய முன்னுதாரணங்களாகும். குடித்தொகையில் நாகர் மேலோங்கியிருந்த பகுதிகள் எல்லாவற்றிலும் இந்த முறை பொதுவழமையாகிவிட்டது. மகாவம்சம் முதலான பாளி நூல்கள் யாழ்ப்பாணக் குடாநாடு, அதற்கண்மையிலுள்ள தீவுகள் ஆகியவற்றை நாகதீப என்ற பெயராற் குறிப்பிடுகின்றன. அதனை மணிமேகலை நாகநாடு எனக் குறிப்பிடுகின்றது. ஆனால் அது "ணாக தீவு" என்னும் பெயரால் அங்கு வாழ்ந்தவர்களிடையே வழங்கியது என்பதை வல்லிபுரம் பொன்னேட்டின் மூலம் அறியமுடிகின்றது.

நாகரிக வளர்ச்சிக்கு ஏதுவான உற்பத்தி முறையினையும் தமிழ் மொழியினையும் இலங்கையில் அறிமுகம் செய்த நாகர் மூலமாகவே நாகவழிபாடும் சிவலிங்க வழிபாடும் பரவலாயின. கிமு. மூன்றாம் நூற்றாண்டிலே பௌத்த சமயம் பரவியதும் அதில் நாகர் ஈடுபாடு கொண்டனர். இலங்கையிலுள்ள பிராமிக் கல்வெட்டுகளில் தொண்ணூறுக்கும் மேற்பட்டனவற்றில் நாகர் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. சமுதாயக் கட்டமைப்பிலே பல்வேறு நிலைகளிலுள்ள நாகர் பௌத்த சங்கத்தாருக்கு வழங்கிய நன்கொடைகளைப் பற்றிய குறிப்புக்கள் அவற்றிலே பதிவுசெய்யப்பட்டுள்ளன. பௌத்த துறவிகளுக்கு உறைவிடங்களாகக் குகைகளை நாகர் வழங்கியுள்ளனர். அவர்களிற் சிலர் அரசர்; வேறுசிலர் கமஞ்செய்வோர் (கமிக); இன்னுச் சிலர் உலோகத் தொழில் புரிவோர். நாகநகர், நாககுலம் என்பன பற்றிய குறிப்புகளும் கல்வெட்டுகளிற் காணப்படுகின்றன.

நாகரிற் சிலர் கப்பலோட்டுதல், கடல்வழி வாணிபம் என்பவற்றில் ஈடுபட்டதால் அந்நாட்களிற் பரதகண்டத்திலே தொடர்பு மொழியாக விளங்கிய பிராகிருத மொழியினையும் பயன்படுத்தினார்கள். குடித்தொகையிலே இனக்கலப்புக் கூடுதலாக ஏற்பட்டிருந்த பிரதேசங்களில் நாகர் பொதுமொழியான பிராகிருதத்தைப் பயன்படுத்தினார்கள். பிராகிருதமே பௌத்த சமயத்தின் இலக்கிய மொழி என்பதாலும் போதனா மொழி என்பதாலும் அதன் செல்வாக்கு இலங்கையின் பெரும் பகுதியில் மேலோங்கியது. அதன் விளைவாக மொழிமாற்றம் ஏற்பட்டது. அது ஆதி வரலாற்றுக் காலத்தில் ஏற்பட்டுவிட்டது. நாகரின் பேச்சுவழக்கான தமிழ் மொழியும் இடைக்கற்கால மக்கள் பேசிய மொழியும் அழிந்துவிட்டன. ஆயினும் நாகர் வழங்கிய நன்கொடைகளைப் பதிவு செய்யும் கல்வெட்டுகளிலே பல தமிழ்ச் சொற்கள் பிராகிருத மயமான கோலத்திற் காணப்படுகின்றன. அவை பெரும்பாலும் பதவிநிலை, நிலவியல், நீரியல் என்பன தொடர்பானவை.

இலங்கைத் தமிழரின் வரலாற்று ரீதியான வதிவிடங்களான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அடங்கிய நிலப்பகுதிகளில் வேறொரு வகையான மொழிமாற்றம் ஏற்பட்டது. அங்கு தமிழ் மொழியின் செல்வாக்கு மேலோங்கிவிட்டது. பழங்குடியினரான இயக்கரின் மொழியும் தொடர்பு மொழியான பிராகிருதமும் வழக்கொழிந்துவிட்டன.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை அங்கு மொழிமாற்றம் எதுவும் நிகழவில்லை பிராகிருதம் அங்கு ஒரு ஆவணமொழியாகவும் பயன்படுத்தப்படவில்லை. வல்லிபுரம் பொன்னேடு மட்டுமே புறநடையாக உள்ளது. அங்கு புழங்கிய பெயர் பொறித்த உலோகப் பொருட்கள் ஏராளமானவை. அவற்றுட்சில காலத்தால் வல்லிபுரம் பொன்னேட்டுக்கும் முற்பட்டவை. பௌத்தப்பள்ளிக்கு உரியனவும் அவற்றுள் அடங்கும். யாழ்ப்பாணத்திலே பௌத்த சமயம் நாகர் சமுதாயத்திலே பரவியது. அது பெருங்கற்காலப் பண்பாட்டு மரபுகளை ஆதாரமாகக் கொண்ட மக்களிடையே பரவியது. அந்தப் பண்பாட்டை நாகரே அங்கு பரப்பினார்கள். அதனால் அங்கு தமிழ் மொழி பேச்சுவழக்கு மொழியாக வழங்கியது. அந்த மொழியைப் பேசியவர்களே பௌத்தராயினர். அதனால் பௌத்த கட்டுமானங்களிலும் பௌத்தப் பள்ளிகளில் வாழ்ந்தவர்களின் பாவனைப் பொருட்களிலும் வழிபாட்டுச் சின்னங்களிலும் பெயர்களையும் வசனங்களையும் தமிழில் எழுதியுள்ளனர்.



யாழ்ப்பாணத்தில் ஆதிகாலத்தில் நிலவிய பௌத்தம் பற்றிப் பேசுகின்ற பொழுது இன்னொரு விடயத்தையும் கவனிக்க வேண்டும். பௌத்த சமய சின்னங்களில் எழுதப்பட்ட பெயர்களும் வசனங்களும் நாகர் சமுதாயத்தின் பாரம்பரியமானவை. அவை ஆதி வரலாற்றுக் காலத்தில் நிலைபெற்ற பெருங்கற்காலப் பண்பாட்டின் அம்சமானவை. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையிலே பெருங்கற்காலப் பண்பாட்டுச் சின்னங்கள் கந்தரோடையில் மிகுந்து காணப்படுகின்றன. அதேபோல தமிழ்ச் சொற்களும் பெயர்களும் எழுதிய பௌத்த சமய சின்னங்களும் அங்குதான் பரவலாகக் காணப்படுகின்றன. மேலும் பெருங்கற்பண்பாட்டுக் காலத்து ஈமக் கல்லறைகளிற் காணப்பட்ட இரு தமிழ் வசனங்களும் கந்தரோடையிலுள்ள தூபிபோன்ற கட்டுமானங்களின் அடித்தளங்களில் அமைக்கப்பட்டுள்ளமை ஆய்வாளரதும் ஆர்வலரதும் கவனத்துக்கு உரியது.

(தொடரும்)




(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கான அரசியல் தீர்வினை இந்தியாவும் வெளிநாடுகளும் தலையிட்டு விரைவாக வழங்க வேண்டும் என்று சாரப்பட வற்புறுத்தியிருக்கின்றனர்.

தமிழ் அரசியல் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சீனா இங்கு வருவதை விரும்பவில்லை. இந்தியாவின் நெருங்கிய கடல்சார் அண்டை நாடான இலங்கை, அதனுடன் நெருங்கிய உறவைக் கொண்டிருக்க வேண்டும் என்பது இந்தியாவின் நிலைப்பாடு. ஆனால், இந்தியாவின் எதிர்ப்பைக் கண்டு சீனா பின்வாங்கத் தயாராக இல்லை. வடக்கு =கிழக்கு ஆகிய இரண்டு மாகாணங்களின் மீன்பிடித் துறையில் மேலும் முதலீடு செய்ய சீனா ஆர்வம் காட்டி வருகின்றது.

"பூகோளப் போட்டி காரணமாக யாழ்ப்பாணம் வருகை தர உள்ள தூது குழு கடல் அட்டை விரிவாக்கத்துக்கும் தாயகப் பகுதிகளைக் கண்காணிக்கவும் வருவது ஆபத்தான விடயம். இலங்கை கடலால் சூழப்பட்ட தீவாகக் காணப்படுகின்ற நிலையில், எமது கடல் வளம் வெளிநாட்டு சக்திகளுக்கு தாரைவார்க்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆட்சியாளர்கள் சீனாவிடம் இருந்து மீன்களை இறக்குமதி செய்வதற்கான உடன்படிக்கையை செய்துள்ள நிலையில் எமது கடல் வளத்தையும் சீனாவுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன.

எமது கடல் வளத்தை எமது கடற்றொழிலாளர்கள் பயன்படுத்த முடியாத நிலையில் , எதிர்காலத்தில் எமது கடற்றொழிலாளர்களும் சீனாவின் மீன்களை உண்ண வேண்டிய சூழ்நிலை ஏற்படும். பூகோள ரீதியாக ஏற்பட்டுள்ள இந்த பிரச்சினைக்கான தீர்வு காண்பதற்கு தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வினை இந்தியாவும் வெளிநாடுகளும் தலையிட்டு விரைவாக வழங்க வேண்டும்.

ஆசியாவில் சீனா தனது அரசியல் இருப்பை தக்க வைத்துக் கொள்வதற்காகவே இலங்கையில் ஆதிக்கத்தை அதிகரித்துக் கொண்டு இருப்பதான முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக தமிழ்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

சீன ஆய்வுக் கப்பலான ஷியான் 6 இன் வருகையை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன் இந்தியா தமிழர்களை எதிரியாகவும் சிங்களவர்களை நண்பனாகவும் கொண்டு செயற்படுவது போல இலங்கை தமிழர்களையும் இந்தியாவையும் எதிரியாகவும் சீனாவை நண்பனாகவும் சிங்கள மக்கள் கொண்டு செயற்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டி யுள்ளார். இந்த நிலையில், இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையில் விரிசலை ஏற்படுத்தும் நோக்கத்துடனேயே சீனா செயற்பட்டு வருவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். மேலும், சீனாவின் செயற்பாடுகளை இந்தியா தெளிவாகப் புரிந்துக் கொள்ளாவிடின் இந்தியாவின் பாதுகாப்பு கேள்விக்குறியாகிவிடும் என்றும் விடுதலைப்புலிகளின் செயற்பாடு இலங்கையில் இருந்த போது இந்தியாவுக்கு பாதுகாப்பு அதிகமாக இருந்தது என்பதை அந்த நாடு இதுவரை உணரவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். அவரது இந்தக் கருத்து மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது. இந்த நிலையில் சீனா பல வழிகளிலும் வடக்கை வல்வளைப்புச் செய்வதற்கு எடுத்துவரும் முயற்சிகள் அனைத்தும் புஸ்வாண மாகிப் போய்விடும் நிலைமை காணப்படுவது வெளிப்படையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org